32°c/26°c

# உதயன்

24 பக்கங்கள்

■ பதிப்பு: ★
■ விலை: ரூபா 25

■ சுடர் 28
■ கதிர் 127

■ வள்ளுவர் ஆண்டு 2044
■ பங்குனி 20, செவ்வாய் 02.04.2013

UTHAYAN - A Lively National Tamil Daily
Website: www.onlineuthayan.com

# தனித் தமிழீழம் கோரி போராட்டம் டில்லியில்

## தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு அறிவிப்பு

சென்னை,ஏப்ரல் 2

இலங்கையில் இறுதிக்கட்டப் போரில் நிகழ்ந்தேறிய இனப்படு கொலைக்குச் சர்வதேச சுயாதீன விசாரணை தேவை என்பதை வலியுறுத்தியும் தனித் தமிழீழம் அமைப்பதற்குப் பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று கோரியும் எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை இந்தியத் தலைநகர் புதுடில்லியில் மாபெரும் உண்ணா விரதப் போராட்டம் ஒன்றை நடத்தவுள்ளதாக அனைத்து இந்திய தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

இந்திய மத்திய அரசுக்கு அழுத்தத்தை வழங்கும் நோக்குடன் இந்த உண்ணா விரதத்தை நடத்தத் தீர்மானித்துள்ளதாக தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பின் செயலாளர் இரா.முகுந்தன் தெரிவித்துள்ளார்.

ஈழத் தமிழருக்கு ஆதரவாகத் தமிழகம் முழுவதும் போராட்டங்கள் முன்னெடுக்கப்

பார்க்க பக்கம் 04

## மருத்துவர் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்

யாழ்ப்பாணம்,ஏப் 2

நெடுந்தீவு பிரதேச வைத்தியசாலையின் மருத்துவர் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டுத் தலையில் படுகாயமடைந்து சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனினும் சம்பவம் தொடர்

பார்க்க பக்கம் 04

## பரந்தனில் விபத்து; குடும்பஸ்தர் சாவு

கிளிநொச்சி, ஏப். 2

பரந்தன் ஏ-35 வீதியில் பூங்காவனச் சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்து கிளிநொச்சி பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை பூங்காவனச் சந்தியில் இடம்பெற்றது. இதில் பரந்தன் மயான வீதியைச் சேர்ந்த கந்தசாமி - பாலஸ்ரீ (வயது-46) என்பவரே உயிரிழந்தவராவார்.

ஏ-35 வீதியில் பரந்தனை நோக்கி சைக்கிளில் சென்ற இருவரை பின்னால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதித் தள்ளியது. இதில் சைக்கிளின் பின்னர்ல் அமர்ந்து வந்தவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மற்றவர் படுகாயம் அடைந்து சிகிச்சைக்காக கிளிநொச்சி வைத்தியசாலை

பார்க்க பக்கம் 04

# மருத்துவர்கள் விவகாரத்தில் வேண்டாம் அரசியல் தலையீடு

■ யாழ். போதனா வைத்தியசாலை மருத்துவர்கள் போர்க்கொடி

யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ். போதனா வைத்தியசாலைச் செயற்பாடுகளில் என்றுமில்லாத வகையில் அரசியல் தலையீடுகள் அதிகரித்துள்ளன. இதனால் மருத்துவர்கள் மன உளைச்சல்களுக்குள்ளாவதுடன் அவர்கள் தமது பணிகளைச் சரிவர முன்னெடுக்க முடியாத நிலையும் தோன்றியுள்ளது. எனவே மருத்துவர்கள் தொடர்பான விவகாரங்களில் அரசியல்வாதிகள் இனிமேல் தலையிடக்கூடாது. - இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகளின் யாழ்ப்பாணக் கிளைச் சங்கம் தெரிவித்துள்ளது.

இது குறித்து யாழ். கிளைச் சங்கத்தின் தலைவர் மருத்துவர் எஸ்.நிமலன் தெரிவித்ததாவது:-

யாழ். போதனா வைத்தியசாலைச் செயற்பாடுகளில் காணப்பட்ட அரசியல் தலையீடு மருத்துவர்கள் விடயத்திலும் உள்நுழைந்துள்ளது. இதன் காரணமாக மருத்துவர்கள் பலரும் மன உளைச்சல்களுக்குள்ளாகின்றனர்.அத்துடன் அவர்கள் தமது பணிகளைச் சரிவர முன்னெடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

எனவே இனிவருங்காலங்களில் மருத்துவர்கள் தங்களது விடயத்தில் எந்த வித அரசியல் தலையீடும் இருக்கக்கூடாதென்று எதிர்பார்க்கிறார்கள். தமது விடயங்களில் அரசியல்வாதிகள் தேவையற்ற வகையில் தலையிடுவதை மருத்துவர்கள் ஒருபோதும் விரும்பவில்லை - என்றார்.

யாழ். மாவட்ட மருத்துவர்கள் சங்கத் தலைவர் மருத்துவர் ந.ஜெயக்குமாரன் இதுபற்றிக் கூறுகையில் :-

யாழ். போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக்குழுச் செயலாளர் இரா.செல்வ வடிவேல் வைத்தியசாலைக்குள் நேற்றுச் சென்றிருந்தார்.

பார்க்க பக்கம் 04

# புதிய அரசமைப்பு யோசனை விரைவில்

கொழும்பு, ஏப். 2

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை இல்லாமல் பிரதமருக்கும் நாடாளுமன்றத்துக்கும் அதிகாரங்களை வழங்கும் அரசமைப்பு யோசனை ஒன்றை அடுத்த வாரத்தில் வெளியிடவுள்ளதாக சிவில் அமைப்புக்களின் ஒன்றியத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மாதுருவாவே சோபித்த தேரரின் தலைமையில் கூடிய சிவில் மற்றும் தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட பல அமைப்புக்கள் இதற்குப் பங்களிப்பு வழங்கியுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

சிவில் அமைப்புக்களின் கருத்துக்களைப் பெற்று ஜனாதிபதி சட்டத்தரணி ஜே. சி. ஜயம்பதி விக்கிரமசிங்க, சட்டத்தரணி ஜே.சி. வெலியமுன உள்ளிட்ட சட்டவாளர்கள் குழு ஒன்றினால் இந்தப் புதிய அரசமைப்பு யோசனை தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

நாட்டிலுள்ள பிரதான அரசியல் கட்சிகள் அனைத்தும் ஜனாதிபதி முறை நீக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ளதை அடுத்

பார்க்க பக்கம் 04

அடிப்படை ஆதாரமற்றது இலங்கைத் தூதரின் கருத்து 8

காப்பாற்றும் வல்லமை எமக்குண்டு 9

மனித உரிமைகள் குறித்த செயற்றிட்டம் வேண்டும் 17

அடுத்த சுற்றுக்குள் லிவர்பூல் அணி 23

# சர்வதேச விசாரணையே நீதியானதாக அமையும்

■ கூறுகிறது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், ஏப்.2

இறுதிக் கட்டப் போரில் இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசு நீதியான விசாரணை நடத்தாது. நீதியான விசாரணை நடத்தப்பட்டு உண்மையைக் கண்டறிந்தால் மாத்திரமே நல்லிணக்கம் ஏற்படும்.

எனவே நீதியான விசாரணை, சர்வதேசத்தால் மாத்திரமே நடத்தப்பட முடியும். அதனால்தான் நாம் சர்வதேச விசாரணையைக் கோரி நிற்கின்றோம்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஊடகப் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் 'உதயனுக்குத்' தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்காவினால் ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் எதனையும் பெற்றுக் கொடுக்கவில்லை.

தமிழ் மக்களின் முக்கிய எதிர்பார்ப்பாக இன்றுள்ளது காணாமல் போனோர் பற்றிய விடயம்தான். இறுதிப் போரில் இராணுவத்தினரிடம் உறவினர்களால் கையளிக்கப்பட்டவர்களுக்கும், சரணடைந்தவர்களுக்கும் என்ன நடந்தது என்பதைக் கேட்கின்றனர்.

பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவோ, இலங்கையில் காணாமல் போனவர்கள் யாருமில்லை என்று தெரிவிக்கின்றார். ஆனால் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் 3 ஆயிரம் பேர் காணாமல் போயுள்ளனர் என எழுத்துமூல முறைப்பாடு கிடைக்கப் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறான நிலையில்

பார்க்க பக்கம் 04

## அவசரமாக டில்லி பறந்தார் ரணில்

### நாடு திரும்பியபின் வடக்குக்கு விஜயம்

கொழும்பு, ஏப்.2

இலங்கையின் தற்போதைய நிலைமைகள் தொடர்பில் பேச்சு நடத்துவதற்காக இந்திய மத்திய அரசின் அழைப்பையேற்று அவசரமாக நேற்று டில்லிக்குப் பறந்தார் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க.

அங்கு டில்லி தலைவர்களுடன் முக்கிய பேச்சுகளை நடத்தும் ரணில், வடக்கு, கிழக்கில் அரங்கேறிவரும் அடக்குமுறைகள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராகக் கிளம்பியுள்ள எதிர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பிலும் விளக்கமளிப்பார் எனத் தெரியவருகிறது.

அதேவேளை, ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்த பின்னணியில், இருநாடுகளுக்கும் இடையிலான

பார்க்க பக்கம் 04

# தமிழ் மக்களின் மனதைச் சிதைக்கும் ஆனையிறவு 'டாங்கி'யை அகற்றுக

■ போர் நினைவுச் சின்னம் வேண்டாம் என்கிறார் தம்பர அமில தேரர்

கொழும்பு, ஏப்.2

போரால் பாதிக்கப்பட்ட தமிழர்களின் காயங்களை ஆற்றாது, நான்கு வருடங்களின் பின்னரும் அதை நினைவுபடுத்தும் வகையில் ஞாபகச் சின்னங்களை அரசு நிறுவுவது பெரும் தவறான செயலாகும். இது தமிழர்களிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டாளரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார்.

ஜெனிவா தீர்மானத்தினூடாக இலங்கை அரசுக்கு வழங்கப்பட்டுள்ள கால அவகாசம் இடைவேளை அல்ல எனச் சுட்டிக்காட்டிய அவர், இலங்கைக்குள்தான் உலகம் இருக்கின்றது என்ற நிலைப்பாட்டில் அரசு இருக்கின்றது என்றும் தெரிவித்தார்.

கொழும்பு நிப்பொன் ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினூடாக சர்வதேசத்திலிருந்து இலங்கை தனிமைப்படுத்தப்பட்டுள்ளது. உலகத்துக்குள்தான் இலங்கை

பார்க்க பக்கம் 04

## திருநெல்வேலிக் கொலை; மேலும் இருவருக்கு பிணை

யாழ்ப்பாணம், ஏப். 02

திருநெல்வேலியில் இளம் குடும்பஸ்தர் வாளால் வெட்டிக் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தவர்களில் மேலும் இரண்டு பேர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.மேல் நீதிமன்றில் இது தொடர்பான பிணை விண்ணப்பம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அதனைப் பரிசீலித்த மேல் நீதிமன்ற ஆணையாளர் ஜே.விஸ்வநாதன் நேற்றுப் பிணை வழங்கினார்.

கடந்த வருடம் செப்ரெம்பர் 13ஆம் திகதி அதேயிடத்தைச் சேர்ந்த பத்மநாதன் ஜெனிசீலன் (வயது-28) என்பவரே வாளால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் 6 பேர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். அவர்களில் இரண்டு பேர் கடந்த மாதம் பிணையில் விடுவிக்கப்பட்டனர். ஏனையவர்களில் இரண்டு பேர் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் தலா 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள் பிணையிலும் விடுவிக்கப்பட்டனர். இதுதவிர மாதாந்தம் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முற்பகல் 9 மணிக்கும் மதியம் 12 மணிக்கும் இடையில் ஒப்பமிட வேண்டும் என்றும் நிபந்தனை விதிக்கப்பட்டது. (த-4)

# வன்னி மாவட்ட எம்.பிக்களின் எண்ணிக்கை குறையாது

## தேர்தல் ஆணையாளர் உறுதி

கொழும்பு,ஏப். 2

வன்னி மாவட்டத்தில் ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு பதிலாக ஐந்து உறுப்பினர்கள் மட்டுமே இருப்பார்கள் என்று வெளிவந்துள்ள செய்திகளை தேர்தல் திணைக்களம் மறுத்துள்ளது.

குறித்த மாவட்டத்தில் வாக்காளர் எண்ணிக்கை குறையவில்லை அதனால் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும் குறையமாட்டாது என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் வவுனியா மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிரதி தேர்தல் ஆணையாளர் ஏ.எஸ் கருணாநிதி வன்னி மாவட்டத்துக்கு ஆறு பிரதிநிதிகளுக்கு பதிலாக ஐந்து பிரதிநிதிகள் மட்டுமே இருப்பார்கள் என்றும் கூறியிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டு இருந்த வாக்காளர் தொகை இந்த மாவட்டத்தில் குறைந்திருப்பதே இதற்குக் காரணம் என்றும் கூறியிருந்தார். இந்த மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர் எண்ணிக்கையானது 219,196 பேரால் குறைந்துள்ளது என்றும் தெரிவித்திருந்தார்.

ஆனால் அவ்வாறான அறிக்கையொன்றை பிரதி தேர்தல் ஆணையாளர் விடுத்திருக்க முடியாது என்றும் அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய இப்போது தெரிவித்துள்ளார்.

இம் மாதிரி அறிக்கையொன்றை விடுவது பிரதி ஆணையாளரின் அதிகாரத்துக்கு அப்பாற்பட்ட விடயம். இது குறித்து ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ப-400)

## குருநகர் தொடர் மாடியின் புனரமைப்பு இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஏப்: 2

77 மில்லியன் ரூபா செலவில் குருநகர் தொடர் மாடி புனரமைக்கப்படவுள்ளதுடன், இந்தப் பணிகளைத் தொடக்கி வைப்பதற்காக வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பொறியியல் துறை அமைச்சர் விமல் வீரவன்ஸ யாழ்ப்பாணத்துக்கு இன்று செவ்வாய்க்கிழமை வருகை தரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குருநகர் தொடர்மாடி வீடமைப்புத் திட்டம் 1986 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. கடந்த காலப் போர் காரணமாக இந்தத் தொடர் மாடிக் குடியிருப்புக்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன.

இந்த தொடர்மாடிக் குடியிருப்பில் 5 மாடிகள் அமைக்கப்பட்டிருந்ததுடன் 160 குடியிருப்புக்களும் அமைந்திருந்தன.

போரினால் பாதிக்கப்பட்ட இந்தத் தொடர்மாடிக்

இந்தப் புனரமைப்புப் பணிகளை இன்று ஆரம்பித்து வைப்பதற்காக அமைச்சர் விமல் வீரவன்ஸ யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளார்.

குடியிருப்புக்களை வீடமைப்பு மற்றும் நிர்மாணப் பொறியியல்துறை அமைச்சு 77 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கத் தீர்மானித்துள்ளது.

இந்தப் புனரமைப்புப் பணிகளை இன்று ஆரம்பித்து வைப்பதற்காக அமைச்சர் விமல்வீரவன்ஸ யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளார். இன்று முற்பகல் 9.30 மணிக்குப் புனரமைப்புப் பணிகள் தொடக்கி வைக்கப்படும் என்று யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (த-5)

## குடும்பிமலையிலும் போர் வெற்றிச் சின்னம்

மட்டக்களப்பு, ஏப். 02

மட்டக்களப்பு குடும்பிமலையில் இலங்கை இராணுவத்தினர் புதிய போர் நினைவுச்சின்னம் ஒன்றை அமைத்து வருகின்றனர்.

விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், வன்னியில் படையினரின் போர் வெற்றியை நினைவு கூரும் வகையில் நினைவுச் சின்னங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இறுதிப் போர் நடைபெற்ற பகுதியில், போர் நினைவுச் சின்னங்களை அமைத்து, அந்தப் பகுதிகளை சிங்கள மக்களின் முக்கிய சுற்றுலாப் பகுதியாக்கியுள்ளனர் படையினர்.

இந்த போர்ச் சுற்றுலா மையங்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள், இன நல்லிணக்கத்துக்கு உதவாது என்று அனைத்துலக ஊடகங்கள் விமர்சித்து வருகின்ற நிலையில், கிழக்கில் மற்றொரு நினைவுச் சின்னத்தைப் படையினர் அமைத்து வருகின்றனர்.

விடுதலைப் புலிகளின் கோட்டையாகவும் படையினருக்குப் பெரும் சவாலாகவும் விளங்கி வந்த குடும்பிமலையிலேயே இந்த நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டு வருகிறது.

இந்தப் போர் நினைவுச் சின்னத்தின் கட்டுமானப் பணிகளை இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய கடந்த வாரம் பார்வையிட்டார்

இந்தப் போர் நினைவுச் சின்னத்தின் கட்டுமானப் பணிகளை இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய கடந்த வாரம் பார்வையிட்டு, ஆலோசனைகளை வழங்கியுள்ளார்.

இந்த நினைவுச் சின்னம் அடுத்தமாதம் விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்ட நான்காவது ஆண்டு நிறைவு நிகழ்வில் திறந்து வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, குடும்பிமலையைக் கைப்பற்றுவதற்கான சண்டையில் மரணமான படையினர் நினைவாகக் கரடியனாறு இலுப்பையடிச் சேனை சந்தியில் நினைவுச் சின்னம் ஒன்றை 2007ஆம் ஆண்டு பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ திறந்து வைத்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

# முல்லைத்தீவு காணி அபகரிப்புக்கு எதிரான விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஏப். 2

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ் மக்களின் பூர்வீக நிலப்பரப்பு அபகரிக்கப்பட்டு அவற்றில் சிங்கள, முஸ்லிம் மக்களை குடியேற்ற எடுக்கப்படும் நடவடிக்கைகளை உடனடியாகத் தடுத்து நிறுத்துமாறு கோரி கொழும்பு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பொதுநல வழக்கு மீதான விசாரணை எதிர்வரும் ஜூன் மாதம் 3ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சேருவில பிரதேச சபை உறுப்பினர் கதிர்காமு சிவயோகேஸ்வரன் தெரிவித்தார்.

இயற்கையான காடுகளை அழிப்பதன் மூலம் மனித உயிர் வாழ்வுக்குத் தேவையான ஒட்சிசன் அழிக்கப்பட்டு இயற்கைக்கு குந்தகம் விளைவித்தல் நிறுத்தப்படுதல் வேண்டும்.

வரட்சிக் காலங்களில் வன ஜீவராசிகளுக்குத் துணை நிற்கும் கயட்ட காடுகள் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் பரவலாகக் காணப்படுகின்றன. இவை அழிக்கப்படுவதால் வன ஜீவராசிகளின் உயிர்வாழ்வுக்கு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது. இது உடனடியாக நிறுத்தப்படல் வேண்டும்.

1984 ஆம் ஆண்டின் பின்னர் கொக்கிளாய், கருநாட்டுக்கேணி, கொக்குத்தொடுவாய் ஆகிய தமிழ் மக்களின் பூர்வீகப் பகுதிகள் படையினரால் அதியுயர் பாதுகாப்பு வலயமாக அறிவிக்கப்பட்டு இன்றுவரை அவர்களின் பிடியிலேயே உள்ளன. இந்தக் காணிகள் அரசியல் சட்டத்துக்கு முரணாகச் சிங்கள மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இவற்றை மீளத் தமிழ் மக்களிடம் ஒப்படைக்க வேண்டும்.

முல்லைத்தீவில் கரையோரப் பிரதேசங்களில் மீன்பிடித் தொழிலை நம்பி வாழும் தமிழ் மக்கள் புறந்தள்ளப்பட்டுச் சிங்கள மக்களுக்கு முன்னுரிமையளிக்கப்படுவது நிறுத்தப்படுதல் வேண்டும்.

திட்டமிட்டு ஆக்கிரமிக்கப்பட்ட தமிழ் கிராமங்களுக்கு சூட்டப்பட்ட சிங்களப் பெயர்கள் மாற்றப்படுதல் வேண்டும்.

கருநாட்டுக்கேணியில் 37 ஏக்கர் காணி கருமண் அகழ்வுக்கு என ஒதுக்கப்பட்டுள்ளது. இன்று தமிழ் மக்களின் காணிகள் தவிர கொக்குத்தொடுவாயில் 15 ஏக்கர் காணியைப் படையினர் சுவீகரித்து அதில் நிரந்தர முகாம் உட்படப் பல்வேறு கட்டடங்களைக் கட்டி வருகின்றனர். இவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து உயர்நீதிமன்றத்தில் கடந்த 28ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்றுத் திங்கட்கிழமை விசாரணைக்கு நீதியரசர் பொ.ஸ்ரீஸ்கந்தராஜா முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, பிரதிவாதிகளான முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர், பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, ஜனாதிபதி செயலணியின் செயலாளர் திவாரத்ன ஆகியோர் சார்பில் சட்டத்தரணி பிரியந்த ஜயவர்த்தன முன்னிலையானார்.

வழக்கில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் பதில் அளிப்பதற்கு கால அவகாசம் தேவை என பிரதிவாதிகள் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி கோரியதற்கிணங்க வழக்கு எதிர்வரும் ஜூன் மாதம் 3ஆம் திகதிவரையில் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக சிவயோகேஸ்வரன் தெரிவித்தார். (த-5)

## நீர்கொழும்பு சிறையில் கைதி சாவு

இந்தக் கைதியின் சார்பில் இன்னும் சில தினங்களில் சட்டத்தரணிகள் மூலமாக நீதிமன்றில் பிணை கோரிக்கை சமர்ப்பிக்கப் படவிருந்த நிலையில் உயிரிழப்பு நிகழ்ந்துள்ளதாக

கொழும்பு,ஏப் 02

நீர்கொழும்பு சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கைதி ஒருவர் நேற்று முற்பகல் உயிரிழந்துள்ளதாக நீர்கொழும்பு வைத்தியசாலை பொலிஸார் தெரிவித்தனர்.

மினுவாங்கொட் பிரதேசத்தைச் சேர்ந்த விக்ரர் (வயது-63) எனப்படும் வர்த்தகரே உயிரிழந்தவராவார். இவர் குளிரூட்டப்பட்ட தனியார் போக்குவரத்து பஸ்கள் சிலவற்றின் உரிமையாளராவார்.

இந்தக் கைதியின் சார்பில் இன்னும் சில தினங்களில் சட்டத்தரணிகள் மூலமாக நீதிமன்றில் பிணை கோரிக்கை சமர்ப்பிக்கப் படவிருந்த நிலையில் உயிரிழப்பு நிகழ்ந்துள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை, இன்று செவ்வாய்க்கிழமை பிரேத பரிசோதனை நடத்தப்பட இருப்பதுடன் நீதிவான் விசாரணையும் இடம்பெறவுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். நீர்கொழும்பு பொலிஸார் கைதியின் உயிரிழப்புத் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (த)

# இலங்கை மீதான தீர்மானத்துக்கு செலவானது ஒரு லட்சம் டொலர்

ஜெனிவா, ஏப். 02

இலங்கைக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஐ.நாவுக்கு சுமார் ஓர் இலட்சம் டொலர் செலவு ஏற்படும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையின் செயலர் கோரோ ஒநோஜிமா தெரிவித்துள்ளார்.

அடுத்த 5 மாதங்களில் தீர்மானம் தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு 1 இலட்சத்து 5 ஆயிரம் டொலர் நிதி தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆய்வுகள், விசாரணைகள், சம்பந்தப்பட்டோருடனான சந்திப்புகள் மற்றும் வரைவு அறிக்கை தயாரிப்பு, ஒருங்கிணைப்பு, திருத்தம், மொழிபெயர்ப்பு மற்றும் வெளியீடு என்பனவற்றுக்கே இந்த நிதி தேவைப்படுவதாக ஐ.நா. மனித உரிமைகள் சபையின் செயலர் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து அடுத்த செப்ரெம்பரில் வாய்மொழி அறிக்கை ஒன்றை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சமர்ப்பிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (த)

## குடும்பப் பெண் கிணற்றில் தவறி விழுந்து சாவு

தென்மராட்சி, ஏப். 02

மாட்டுக்குத் தண்ணீர் வைப்பதற்காகச் சென்ற குடும்பப் பெண் தவறுதலாகக் கிணற்றுக்குள் விழுந்து உயிரிழந்தார்.

நேற்றுப் பிற்பகல் சாவகச்சேரி வடக்கில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கனகலிங்கம் - மகேஸ்வரி (வயது-63) என்பவரே உயிரிழந்தார்.

சாவகச்சேரி பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை தாக்கல் செய்ததை அடுத்து சம்பவ இடத்துக்குச்



சென்ற பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை சடலத்தை உடற்கூற்றியல் பரிசோதனை செய்து மன்றில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும், அதன் பின்னர் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறும் உத்தரவிட்டார். (ஒ-9-400)

## வேலணையில் விதவைகள் நலன்புரி சங்கம் உருவாக்கம்

யாழ்ப்பாணம், ஏப். 2

வேலணை பிரதேச எல்லைக்கு உட்பட்ட விதவைப் பெண்களின் தலைமைத்துவத்தில் உள்ள பாடசாலைக்குச் செல்லும் சிறுவர்களுக்கு நிதி உதவி வழங்கக் கூடியதாக வேலணை வறிய விதவைகள் நலன்புரிசங்கம் ஒன்று அமைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வேலணை பிரதேச சபையின் எதிரணி உறுப்பினர் க.கனகரத்தினம் சமர்ப்பித்த பிரேரணை உறுப்பினர்களின் ஏக மனதான அங்கீகாரம் பெற்று நிறைவேறியது. கடந்த 28 ஆம் திகதி இடம்பெற்ற கூட்டத்தில் இந்தப் பிரேரணை நிறைவேறியமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# அபிவிருத்திக்கான வாக்குறுதிகள் கிடைத்து காலம்தான் கடந்தது; செயற்பாடுகள் இல்லை

### வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் நடனேந்திரன் விசனம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.2

யாழ். மாவட்ட மீன்பிடி அபிவிருத்திக்கு 250 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும். அதில் 110 மில்லியன் ரூபா செலவிடப்படும். இதற்கான அபிவிருத்திகள் விரைவில் முன்னெடுக்கப்படும்.

இவ்வாறே சுகாதாரம், விளையாட்டு, கல்வி, மின்சாரம் மற்றும் ஏனைய துறைகளுக்கு உரித்தான, பொறுப்பான அமைச்சர்கள் கூறி இரண்டு வருடங்கள் கடந்துள்ளன.

எனினும் எவ்வித அபிவிருத்திகளும் இங்கு முழுமை பெற்றதாக வடக்கு ஆளுநர் அறிக்கையிட்டதாக தகவல் இல்லை.

இவ்வாறு அராலியில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக் கூட்டத்தில் வலி. மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் த.நடனேந்திரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

வெளிநாட்டு முதலீட்டாளர்கள், வெளிநாட்டு நிதி நிறுவனங்கள், சர்வதேச முகவராண்மை நிறுவனங்கள், உலக வங்கி, சர்வதேச நிதியம் என்பவற்றின் நிதி உதவிகள் அரசுக்கு கடனாகவும் நன்கொடையாகவும் உதவி நிதியாகவும் நீண்ட கால கடன்களாகவும் கிடைக்கின்றன.

சகல நிதி செயற்பாடும் தெற்கை மையப்படுத்தியே இடம்பெறுகின்றன. வடக்கு 30 வருட போருக்குப் பின்னர் மீளெழும்ப முடியாத பொருளாதார சுமைக்குள் விழுந்துள்ளது.

வேலையின்மை, பொருளாதார நெருக்கடி, பணவீக்கம் என்பன வடக்கு பொருளாதார அபிவிருத்தியைப் பின்தள்ளியுள்ளன.

வடக்குக்குப் படையெடுத்து வரும் அமைச்சர்களும் வடக்கின் அபிவிருத்தி குறித்தும் நிதி ஒதுக்கீடு குறித்தும் பல்வேறு தடவைகள் தெரிவித்துள்ளனர். அவை சொல் அளவிலேயே உள்ளன.

நாம் நிதி வரப்போகின்றது என்று பல விடயங்களை முன்வைத்து தொகுத்து ஏமாற்ற முறுவதுதான் எமது வழமையான நிலைப்பாடு.

தெற்குப் பிரதேசம் இன்று அபரிமிதமான வளர்ச்சியை கண்டுள்ளது. தினம் தினம் புதிய கட்டுமானங்கள், புதிய தொழிற்சாலைகள் திறப்பு, புதிய உத்வேகமான நிகழ்ச்சிகள் நடந்தேறிக் கொண்டே இருக்கின்றன.

இதில் ஒரு வீதம் கூட இங்கு இடம்பெறவில்லை. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு என்றும் ஜனநாயக நாடு என்றும் கூறிக் கொள்கிறது அரசு.

அவ்வாறு எனில் ஒரு பிரதேசம் வளர்ச்சி அடைந்தும் மறு பிரதேசம் வளர்ச்சியற்றும் இருக்காது.

ஓர் அரசு போரால் அழிவடைந்த பிரதேசத்தின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப முன் வர வேண்டும். போருக்குப் பின்னர் ஏ-9 வீதி அபிவிருத்தி முழுமை பெற்றுள்ளமை பாராட்டப்பட வேண்டியது.

அதுபோல சகல துறைகளிலும் சகல அபிவிருத்திகளையும் அரசு முன்னெடுக்க முன் வரவேண்டும். அப்போதுதான் உண்மையான, சுபீட்சமான அபிவிருத்தி இடம்பெறும்.

வெறுமனே வார்த்தைகளால் மட்டும் அபிவிருத்தியைக் கூறி வென்றிடலாகாது.- என்றார். (ம-41)

## ரயில் பாதை அமைக்கும் பணி முழுமை பெறுவது எப்போது?



யாழ்ப்பாணம், ஏப். 2

யாழ்ப்பாணத்தில் காங்கேசன்துறை வரையான பகுதிக்கு ரயில் பாதை அமைக்கும் பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்று பல தடவைகள் தெரிவிக்கப்பட்ட போதும் இந்தப் பணிகள் சீராக இடம்பெறுவதாகத் தெரியவில்லை என்று மக்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். குடாநாட்டில் ஆடிக்கு ஒரு தரம் அமாவாசைக்கு ஒரு தரம் என்பதுபோல்தான் இந்தப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து பணிகள் தொடராது நினைத்த இடங்களில் குறிப்பிட்டளவு பணிகள் மட்டுமே இடம்பெற்று வருகின்றன என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது மக்களை ஏமாற்றும் வெறும் கண்துடைப்பு நாடகம் என்றும் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். ரயில் நிலையப் பகுதியை எத்தனை தடவைகள்தான் துப்புரவு செய்வார்கள் என்றும் மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். இந்தப் பணிகள் எப்போது முழுமை பெறும் என்றும் கேள்வி எழுப்பியுள்ளனர். (ம-7)

### சங்கானைச் சந்தைக்கு ஒதுக்கப்பட்ட நிதி

# அரசியல் தலையீட்டால் கிடப்பில் போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஏப்.2

*சங்கானைப் பிரதேச சந்தைக் கட்டடத் தொகுதிக்கென வரவு- செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி அரசியல்தலையீடுகள்காரணமாகக் கிடப்பில் போடப்பட்டுள்ளது. வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவர் திருமதி நாகரஞ்சினி ஐங்கரன் இதனைத் தெரிவித்தார்.*

'நெல்சிப்' திட்டத்தின் கீழ் 2011 ஆம் ஆண்டு 35 மில்லியன் ரூபாவும் 2012 ஆம் ஆண்டு 45 மில்லியன் ரூபாவும் 2013 ஆம் ஆண்டு 25 மில்லியன் ரூபாவும் பிரதேச சபையின் வரவு- செலவுத் திட்டத்துக்கு அமைவாக சங்கானைப் பிரதேசத்தில் சந்தைக் கட்டடத் தொகுதியை அமைப்பதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டது.

திட்டமிடலின் பிரகாரம் 2 மாடிகளைக் கொண்ட சந்தைக் கட்டடத் தொகுதியை அமைப்பதற்கு சுமார் 70 மில்லியன் ரூபா வரையான நிதி தேவைப்படுவது தொடர்பாக பிரதேச மற்றும் மாவட்ட மட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கருத்து முன்வைக்கப்பட்டது.

எனினும் வரவு- செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி அரசியல் தலையீடுகளால் கிடப்பில் போடப்பட்டுள்ளது.

ஆறு பரப்பு விஸ்தீரணம் உடைய காணியில் 2 மாடிக் கட்டடத்தில் 2 வங்கிகள் உட்பட 86 கடைகளை உள்ளடக்கியதான கட்டடத் தொகுதியை அமைக்க பிரதேச சபைத் திட்டமிட்டிருந்தது.

இந்தக் கட்டடத் தொகுதியூடாக பிரதேச சபைக்கு மாதாந்தம் 10 லட்சம் ரூபா வருமானம் எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் சில அரசியல் தலையீடுகள் காரணமாக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி கைவிட்டுப் போயுள்ளது.- என்று தெரிவித்தார். (ம-14)

## நெடுந்தீவு கிழக்குக்கு எப்போது மின் கிடைக்கும்?

யாழ்ப்பாணம், ஏப். 2

நெடுந்தீவு கிழக்கு செபநாயகபுரத்துக்கு மின் வசதி ஏற்படுத்த உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

கடந்த ஒரு வருட காலமாக மக்கள் இது தொடர்பாக கோரிக்கைகள் விடுத்திருந்த போதும் கவனிக்கப்படும் என்று மட்டும் பதில் கூறப்பட்டு வந்தது.

எனினும் கோரிக்கை இன்னமும் கவனத்தில் எடுக்கப்படவில்லை .

இந்தப் பகுதியில் உள்ள மாணவர்களும் மின் வெளிச்சம் கிடைக்காத நிலையில் தமது கல்வியைத் தொடர்வதில் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் விரைந்து நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்று இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். (ம-7)

## காணாமற் போன குடும்பஸ்தர் சடலமாக மீட்கப்பட்டார்

வடமராட்சி, ஏப்.2

வீட்டில் இருந்து மூன்று தினங்களுக்கு முன்னர் காணாமல் போன குடும்பஸ்தர் ஒருவர் அல்வாய் வடக்கு விறுமர் கோயிலின் பின்புறத்தில் உள்ள வெள்ளவாய்க்காலில் இருந்து நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணியளவில் சடலமாக மீட்கப்பட்டார்.

புலோலி மேற்கு வத்தனையைச் சேர்ந்த சிவஞானசுந்தரம் உதயநாதன் (வயது -53) என்ற 4 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறுசடலமாக மீட்கப்பட்டார். பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சடலம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவரது இறப்புக் குறித்து பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா பருத்தித்துறைப் பொலிஸாரின் நெறிப்படுத்தலில் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உத்தரவிட்டிருந்தார். பரிசோதனைக்குப் பின்னர் சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார்.

ஏற்கனவே மனைவியை இழந்திருந்த இவர் பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்ததாகவும் கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்ததாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. (ம-8)

# தெல்லிப்பழை கூட்டுறவுப் பரிசோதகரின் இடமாற்றத்துக்கு ஊழியர்கள் கடும் எதிர்ப்பு

வலி. வடக்கு, ஏப். 2

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவுப் பரிசோதகரின் இடமாற்றத்தால் ஊழியர்கள் மத்தியில் சில குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் தொடர்ச்சியாக நஷ்டத்தில் இயங்கிய நிலையில் ஊழியர்களின் கட்டாய சேமிப்புப் பணமான 33 லட்சம் ரூபாவை ஊழியர்களின் சம்மதத்துடன் பெற்ற கூட்டுறவுப் பரிசோதகர் அதனை முதலீடாகக் கொண்டு சங்கத்தை இயங்க வைத்தார் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் அவர் இடமாற்றம் செய்யப்பட்டார். இதனை ஊழியர்களில் ஒரு பகுதியினர் எதிர்க்கின்றனர்.

இது தொடர்பான துண்டுப் பிரசுரம் ஒன்றையும் ஊழியர்கள் வெளியிட்டுள்ளனர்.

**குறிப்பிட்ட இடமாற்றம் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டது.**

''சகல பணியாளர்களிடம் இருந்தும் ஒப்பம் பெறப்பட்டு நிலையான வைப்பில் இருந்து பெற்ற பணத்தை மீண்டும் வைப்பிலிடுவது யார்? எமக்கு இன்னும் வருமதியாக இருக்கும் இரு மாத வேதனம் தருவது யார்? எமது சங்கம் 15 .11. 2011இல் இருந்து வளர்ந்து வரும் இந்த வேளையில் கூட்டுறவுப் பரிசோதகர் சி.குணாளன் மாற்றப்படுவது ஏன்? எமது சங்கம் மீண்டும் படுகுழியில் செல்வதை நாம் அனுமதிக்கலாமா? 2011 ஆம் ஆண்டு 4 மாத வேதனம் வழங்க முடியாதிருந்த நிலையை மாற்றி 2012 ஆம் ஆண்டு தொடர்ச்சியாக இன்று வரை எமக்கு வேதனம் வழங்கியது யார்? கூட்டுறவு பரிசோதகர் சி.குணாளனின் இடமாற்றம் உடனடியாக நிறுத்தப்படவேண்டும், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரே எமக்கு சரியான தீர்வு பெற்றுத் தரவேண்டும்''- என்றுள்ளது.

இது தொடர்பாக யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் விகே.அருந்தவநாதனுடன் தொடர்பு கொண்டபோது,

''குறிப்பிட்ட இடமாற்றம் வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டது. இந்த விடயம் தொடர்பாக வடமாகாண கூட்டறவு ஆணையாளருடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்''- என்று தெரிவித்தார். (ம-86)

# மஹிந்தவால் ஏவி விடப்பட்ட பொது பல சேனா கைமீறியது

## முற்றுகிறது முறுகல்

கொழும்பு, ஏப்.2

சிங்கள, பௌத்த மக்களின் வாக்குவங்கியைத் தக்கவைத்து நாட்டில் ஆட்சியைத் தொடர்வதற்காக ஜனாதிபதியால் ஏவிவிடப்பட்ட அடிப்படைவாதக் குழுவான பொது பல சேனா தனது தலைமைத்துவத்தின் கட்டளைகளை மீறிச் செயற்படுகின்றது. இதனால் பொது பல சேனாவுக்கும் அதன் தலைமைத்துவத்துக்குமிடையே தற்போது முறுகல் நிலை ஏற்படப்போகின்றது என்று ஏகாதிபத்திய எதிர்ப்பு மக்கள் இயக்கம் தெரிவித்துள்ளது.

1983ஆம் ஆண்டுக் கலவரம் நாட்டில் மீண்டும் ஏற்பட இடமளிக்கப்படக்கூடாது. அவ்வாறு செய்பவர்களுக்குத் தண்டனை வழங்கப்படும் என்று நாட்டு மக்களுக்குக் கூறும் ஜனாதிபதி, முதலில் கண்ணாடி முன் நின்று அதனைக் கூறிக்கொள்ள வேண்டும். அத்துடன், அவரது சகோதரருக்கும் பாடம் புகட்ட வேண்டும் என்றும் அந்த இயக்கத்தின் ஏற்பாட்டாளரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான தம்பர அமில தேரர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு நிப்பொன் ஹோட்டலில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டிலுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களிடையே பிரிவினையை ஏற்படுத்தும் 2 ஆம் அத்தியாயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படைவாத நடவடிக்கையைத்தான் பொதுபலசேனா அமைப்பு மேற்கொண்டு வருகின்றது. பொதுபலசேனாவின் வளர்ச்சி நாட்டில் எத்தகைய அபாயத்தை ஏற்படுத்தும் என்று நாம் அரசிடம் ஆரம்பத்திலேயே கூறினோம். ஆனால் அரசு அதனைக்கருத்திற் கொள்ளவில்லை.

நகத்தால் கிள்ளி எறியவேண்டிய பொது பல சேனாவை கோடரியால் வெட்ட வேண்டிய நிலைக்கு அரசு கொண்டுவந்துள்ளது. இருப்பினும், இந்த அமைப்பை அரசு தடை செய்யாது. ஏனெனில், இதை ஆரம்பித்து வைத்தது அரசுதானே.

பொதுபலசேனாவின் அடிப்படைவாத நடவடிக்கைகளை ஊக்குவித்து அதற்கு அங்கீகாரம் வழங்கும் வகையில் அதன் காரியாலயத்தைப் பாதுகாப்புச் செயலாளர் திறந்து வைத்தார். எனவே, பொதுபலசேனாவின் அனைத்து நடவடிக்கைகள் குறித்தும் பாதுகாப்புச் செயலாளருக்குப் பொறுப்புள்ளது.

ஜனாதிபதியால் ஏவிவிடப்பட்ட இந்த அடிப்படைவாதக்குழு அவரது கட்டளைக்கு மாறாக வரம்புமீறிச் செயற்படுகிறது. அதனால் தலைமைத்துவத்துக்கும் பொதுபல சேனாவுக்குமிடையே பிரச்சினை ஏற்படப் போகிறது.

மார்ச் 31ஆம் திகதியுடன் ஹலால் சான்றிதழ் நாட்டிலிருந்து இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்றும், பௌத்த சிங்களத்தைப் பாதுகாக்கும் உத்தியோகப்பற்றற்ற பொலிஸாக நாம் இருக்கவேண்டும் என்றும் பொது பல சேனா பகிரங்கமாகக் கூறியது. அதற்கு இந்த அதிகாரத்தை வழங்கியது யார்? இதே வேளை, இந்தக் கருத்தை ஒரு சாதாரண நபர் கூறியிருந்தால் என்ன நடந்திருக்கும்?

அதுமட்டுமல்ல, பொதுபலசேனாவின் காரியாலயத்தைத் திறந்துவைத்து பாதுகாப்புச் செயலாளர் அதற்கு நற்சான்றிதழ் வழங்கியுள்ளார். இதனைவிட வேறு என்ன ஆதாரம் வேண்டும்? பொதுபலசேனாவைக் கொண்டு இனிவரும் காலங்களில் அரசு தமது ஏவல் நடவடிக்கைகளைச் செய்து காட்டப்படும் என நான் சவால் விடுக்கிறேன் - என்றார் தம்பர அமில தேரர்.

## சர்வதேச...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இவர்களிடமிருந்து எப்படி நீதியை எதிர்பார்க்க முடியும்?

இறுதிப் போரில் 7 ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டதாகவும், இதில் பெரும்பாலானோர் விடுதலைப் புலிகள் என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவிக்கின்றார். ஐ.நா. செயலாளர் நாயகம் நியமித்த மூவர் குழுவின் அறிக்கையில் 40 ஆயிரம் பொதுமக்கள் வரையில் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா வின் உள்ளக அறிக்கை 70 ஆயிரம் பொதுமக்கள் வரையில் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கின்றது. மன்னார் ஆயரின் தரவுப் பிரகாரம் ஒரு லட்சத்து 40 ஆயிரம் பேர் காணாமல் போயுள்ளனர் அல்லது இறந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான நிலையில் கொல்லப்பட்ட மக்கள் தொடர்பில் உண்மை நிலையை எவ்வாறு கண்டறிவது?

உண்மை கண்டறியப்பட வேண்டும். அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். இதன் மூலமே நீடித்து நிலைக்கும் நல்லிணக்கத்தை இலங்கையில் உருவாக்க முடியும்.

உண்மை கண்டறியப்பட வேண்டுமாக இருந்தால் நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும். நீதியான விசாரணை நடக்க வேண்டுமாக இருந்தால் அது சர்வதேச விசாரணையாகத்தான் இருக்க முடியும்.

இலங்கை அரசால் ஒருபோதும் நீதியான விசாரணை நடத்த முடியாது. அவ்வாறு நடத்த முடியாதென்பதை இலங்கை அரசு பல தடவைகள் நிரூபித்திருக்கின்றது.

எனவேதான் நாம் சர்வதேச விசாரணையைக் கோரி நிற்கின்றோம் - என்றார். (த-5)

## தனித் தமிழீழம்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பட்டு வருகின்றன. இந்தப் போராட்டங்களினால் தமிழகத்தின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகவும் தனித் தமிழீழம் அமைத்திடவும் வலியுறுத்தி புதுடில்லியில் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

அனைத்து இந்திய தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பின் கூட்டம் சென்னையில் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றது.

இதில், இலங்கையில் நடந்த இறுதிப் போரில் நிகழ்ந்தேறிய இனப்படுகொலை தொடர்பில், ஐ.நா. அமைப்பினால் சர்வதேச சுயாதீன விசாரணை விரைவாக நடத்தப்பட வேண்டும். இலங்கையில் தனித் தமிழீழம் அமைய வேண்டும். இது தொடர்பில் ஈழத் தமிழர்களிடமும், புலம்பெயர் தமிழர்களிடமும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்ற பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து எதிர்வரும் 12 ஆம் திகதி கலைஞர் புதுடில்லியில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்துவதென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழர்கள் கலந்துகொள்வார்கள் என்றும் இந்தப் போராட்டத்தின் மூலம் ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பில் இந்திய மத்திய அரசுக்கு அழுத்தங்களை வழங்கவுள்ளதாகவும் தமிழ்ச் சங்கக் கூட்டமைப்பின் செயலாளர் இரா.முகுந்தன் மேலும் கூறினார். (த-5)

## புதிய...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

தும் அதிகாரங்கள் முறையற்ற இந்தப் புதிய யோசனை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் புதிய யோசனை பொதுமக்களின் கலந்துரையாடல்கள் மூலம் முன்வைக்கப்படவுள்ளது. இதனை அங்கீகரித்து நடைமுறைப்படுத்துவதற்கு அனைத்து அரசியல் கட்சிகளும் முன்வரக் கூடுமென நம்புவதாகவும் சிவில் அமைப்புக்கள் ஒன்றியம் கூறுகிறது. (த-22)

## தமிழ் மக்களின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இருக்கின்றது என்பதை மறந்து, இலங்கைக்குள்தான் உலகம் இருக்கின்றது என்று அரசு நினைக்கின்றது.

குத்துச்சண்டை வீரர் மைக் டைசன், பாதாளக் கொள்ளையரான ஜுலம்பிட்டிய அமரே ஆகியோர் போன்று சர்வதேசத்துடன் செயற்பட முடியாது. சர்வதேசத்துடன் ஒன்றிணைந்து செயற்பட புத்திக்கூர்மை வேண்டும். ஆனால் அது இந்த அரசிடம் இல்லை.

ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கமைய 2014 ஆம் ஆண்டுவரை அரசுக்கு வழங்கப்பட்டுள்ள கால அவகாசம் இடைவேளை அல்ல. அது ஒரு 'கமா'தான் வழங்கப்பட்டுள்ளது. எனவே, இதனைக் கருத்திற்கொண்டு அரசு செயற்படவேண்டும்.

அயல்நாடான இந்தியா, மத்திய கிழக்கு நாடுகள் உள்ளிட்ட ஏனைய ஆசிய நாடுகள், ஐரோப்பா, அமெரிக்கா முதலான நாடுகளுடனான நட்புறவை எவ்வாறு பேணுவது என்பது குறித்து இராஜதந்திர ரீதியில் அரசு சிந்தித்துச் செயற்படவேண்டும்.

### போர்க் கள ஆடையை அரசு கழற்ற வேண்டும்

போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு நான்கு வருடங்கள் கடந்துள்ளன. அதனால் போர் காலத்தில் அரசு அணிந்திருந்த ஆடையை, கொண்டிருந்த மனநிலையை இப்போது கொண்டிருக்கக் கூடாது. எனவே, அந்த போர்க் கள ஆடையை அரசு உடனடியாகக் கழற்றிவிட வேண்டும்.

போர்க் காலத்தில் புலிகள் பயன்படுத்திய போர் டாங்கியொன்றை ஆனையிறவில் அரசு காட்சிப்படுத்தியுள்ளது. இது உடனடியாக அங்கிருந்து அகற்றப்பட வேண்டும். ஏனெனில், அதைப் பார்க்கும்போது தமிழர்கள் மனதில் ஒரு தாக்கம் ஏற்படும். போர் முடிவடைந்து நான்கு வருடங்கள் கடந்த பின்னரும், அதனை மறுபடியும் நினைவுபடுத்தும் வகையில் ஞாபகச் சின்னங்களை அமைப்பது தவறு. எனவே, போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் காயங்களை ஆற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

## மருத்துவர் விவகார...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

அங்கிருந்தபடியே தொலைபேசி மூலம் என்னுடன் தொடர்பு கொண்டு ''வைத்திய சாலையிலுள்ள உங்கள் அறையின் திறப்பை என்னிடம் ஒப்படையுங்கள். இல்லாவிட்டால் பொலிஸார் மூலமாக கதவை உடைத்து அறையைப் பொறுப்பேற்க வேண்டி இருக்கும்.'' - என்று எச்சரிக்கும் தொனியில் கூறினார். ஆனால் உண்மையில் வைத்தியசாலையில் எனக்கென்று அறையெதையும் நான் வைத்திருக்கவில்லை. புற்றுநோய் சிகிச்சைப் பிரிவை அண்மித்து 3 அறைகள் உள்ளன. அதில் ஒன்றில் தென்பகுதியைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் ஒருவரும், மற்றைய இரண்டிலும் நோயாளிகளுக்கு இரவில் அவசர தேவையின் பொருட்டு சிகிச்சையளிப்பதற்கான இரு மருத்துவர்களும் தங்கியுள்ளனர். மற்றும்படி எனக்கென்று அறையெதுவும் இருக்கவில்லை. வைத்தியர்களின் விடயங்களைக் கையாள்வதற்கும் விசாரணை செய்வதற்கும் உரிய அதிகாரிகள் உள்ளனர். அதற்கு மாறாக இத்தகையோரின் செயற்பாடுகள் எமக்கு மனவேதனை அளிக்கின்றன - என்றார்.

இதேவேளை பெயர் குறிப்பிட விரும்பாத மருத்துவர் ஒருவர் தகவல் தருகையில் -

யாழ். போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திக் கூட்டம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்ற போதே, அந்தக் குழுவின் செயலாளராக இரா. செல்வவடிவேல் நியமிக்கப்பட்டார். இந்தக் குழு இதுவரை உருப்படியான காரியங்கள் எதனையும் வைத்தியசாலைக்குச் செய்யவில்லை.

25 கட்டில்கள் தேவையென்று கோரிக்கை விடுத்தபோது, 200 கட்டில்கள் தருவதாகப் பத்திரிகைகளுக்குக் கருத்துத் தெரிவித்திருந்தனர். ஆனால் அப்படியெதுவுமே நடக்கவில்லை. அரசியல் வாதிகளினதும், அவர்களது உதவியாளர்களினதும் தலையீடுகள் எமது விடயத்தில் தேவையற்றவை. அதனை நாங்கள் ஒருபோதும் விரும்புவதுமில்லை. மருத்துவர்களுக்கும் தாதியர்களுக்கும் விடுதி வசதியைப் பெற்றுக் கொடுப்பதில் இந்த அரசியல் வாதிகள் எதிராகவே செயற்படுகிறார்கள் - என்றார்.

இதுதொடர்பாக வைத்தியசாலை அபிவிருத்திக்குழுச் செயலாளர் இரா.செல்வவடிவேலைத் தொடர்புகொள்ள பலமுறை தொலைபேசி ஊடாக முயற்சித்தபோதும் நேற்றிரவுவரை சாத்தியமாகவில்லை. (ங)

## பரந்தனில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யில் சேர்க்கப்பட்டார்.

கண்டாவளையைச் சேர்ந்த எஸ்.ரஜீவன் (வயது-21) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

இதேவேளை, விபத்து நடந்ததும் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்தவர் அந்த இடத்திலேயே மோட்டார் சைக்கிளை விட்டுவிட்டுத் தலைமறைவாகிவிட்டார் எனக் கூறப்பட்டது.

இது தொடர்பான விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-400-426-06)

## மருத்துவர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

பில் எவரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதான வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சொலமன் றெஜி புருசோத்மன் (வயது -25) என்பவரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 10.30 மணியளவில் அவரது வீட்டுக்கு முன்பாக சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வீட்டுக்குச் சென்றபோது அவரது வீட்டுக்கு முன்பாக 8 தொடக்கம் 10 பேர் வரையான குழுவினர் நின்று மது அருந்தியுள்ளனர். அத்துடன் வீட்டின் முன்பாகக் கழிவு நீர்வாய்க்காலை மூடிப் போடப்பட்டிருந்த சிமெந்துக் கல்லையும் அந்தக் குழுவினர் எடுத்துத் தூர எறிந்துள்ளனர்.

இதனைத் தடுத்தபோதே அந்தக் குழுவினர் மருத்துவர் மீது கம்பியினால் தாக்கியுள்ளனர். இதன்போது மருத்துவர் அணிந்திருந்த கைச்சங்கிலி அறுந்து விழுந்துள்ளது. அதனையும் அந்தக் குழுவினர் எடுத்துச் சென்றுள்ளனர்.

'ஹன்ரர்' வாகனத்துடன் அந்தக் குழுவில் சிலர் திரிவதாகவும், அவர்களில் சிலர் ஓட்டோ சாரதிகள் என்றும் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அவர்கள் வீட்டுக்கு அருகிலுள்ள வழிபாட்டுத்தலம் ஒன்றுக்கு அருகில் நின்று தினமும் மது அருந்துவதாகவும் பின்னர் அந்த வழியே பயணிப்போருடன் தகராறில் ஈடுபடுவதாகவும் அந்தப் பகுதியைச் சேர்ந்தவர்கள் தெரிவித்தனர். (த-4)

## அவசரமாக...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

உறவுகளில் இறுக்கம் ஏற்பட்டுள்ள நிலையில், ரணில் விக்கிரமசிங்கவுக்கு டில்லி அழைப்பு விடுத்துள்ளது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

டில்லியின் அழைப்பை ஏற்று இந்தியா புறப்பட்ட ரணில் விக்கிரமசிங்க, எதிர்வரும் வியாழக்கிழமை கொழும்பு திரும்புவார் எனத் தெரியவருகிறது.

டில்லியிலிருந்து கொழும்பு திரும்பிய பின்னர் வட பகுதிக்கான விஜயம் ஒன்றை ரணில் விக்கிரமசிங்க மேற்கொள்வார் என்றும் நம்பகரமாக அறிய முடிகிறது.

எதிர்வரும் செப்ரெம்பரில் வடக்குத் தேர்தல் நடத்தப்படும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ள நிலையில், டில்லி விஜயத்தை முடித்துக் கொண்டு அவசரமாக வட பகுதிக்கு ரணில் விஜயம் செய்வதன் பின்னணியில் இந்தியா உள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எதிர்வரும் 23, 24 ஆம் திகதிகளில் ரணில் வடக்குக்கு விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகள் குறித்து ஆராயவுள்ளார்.

நேற்றுமுன்தினம் மட்டக்களப்பில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் நடத்திய சந்திப்பு ஒன்றில், இலங்கையின் தற்போதைய சூழ்நிலையில் இந்தியாவினால் எதனையும் செய்ய முடியாது என்று ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தார்.

இலங்கையில் நீடித்து நிலைக்கக் கூடிய அமைதியையும், அதிகாரப் பகிர்வையும் கொண்டுவருவதற்கு இந்தியா மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்து விட்டதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

இதேவேளை, போரின் இறுதிக் கட்டத்தின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும் என்றும், 13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறும் வடக்கில் நிலை கொண்டுள்ள படைகளை குறைக்குமாறும் இந்தியா வலியுறுத்தியுள்ளது.

இந்நிலையிலே டில்லியின் அழைப்பையேற்று ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பேரினவாதம் உயர்ந்து எழுகிறது; தடுக்க ஒன்றுபட்ட உழைப்புத் தேவை

அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைக்குக் கொண்டு வருவதாகவும் –

அதற்கும் மேலே சென்று தமிழ் மக்களுக்கான உரிமைகளை வழங்குவதாகவும் –

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்திய அரசிடம் உறுதியளித்திருந்தார்.

அந்த உறுதி மொழியை நிறைவேற்றச் செய்வதில் இந்திய அரசு இலங்கை அரசிடம் தோற்றுவிட்டது.

இந்தக் கண்டுபிடிப்பை வெளிப்படுத்தியிருப்பவர் வேறு யாருமல்லர். எதிர்க்கட்சித் தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமர்களில் ஒருவருமான ரணில் விக்கிரமசிங்கவே.

மட்டக்களப்பில், அங்குள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசியபோதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்ட கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராகப் பதவி வகித்த 2002 ஆம் ஆண்டிலேயே அப்போதைய அரசுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அவ்வேளை நிறைவேற்று ஜனாதிபதியாக பதவி வகித்த சந்திரிகா பண்டாரநாயக்க, அதனை அலட்சியப்படுத்தியதால் அது புதையுண்டுபோனமை பழைய கதை, சங்கதி.

எனினும்–

அவ்வேளை போதிய அதிகாரங்கள் இல்லாதிருந்த ரணில் விக்கிரமசிங்கவின் இப்போதைய கழிவிரக்கம் கருத்தில் கொள்ளக்கூடிய ஒன்றே.

1957 ஆம் ஆண்டில் கைச்சாத்தான பண்டா – செல்வா ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது முதல், உள்நாட்டில் சிங்கள அரசியல் தலைவர்களுக்கும் தமிழ்த் தலைவர்களுக்கும் இடையில் கைச்சாத்தான அரசியல் ஒப்பந்தங்கள் யாவும் அவ்வப்போது பொசுங்கிப்போன வரலாறே மிஞ்சியது.

மாவட்ட சபைகள் சட்டம் முதல் அவ்வப்போது தலைகாட்டிய சகலனவும் தென்னிலங்கையின் அரசியல் நெருப்புக்குள் இடப்பட்டன.

உள்நாட்டில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் தோல்வி அடைந்த நிலையில், தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்ட நிலையில், வெளிநாடு ஒன்றுடன் செய்து கொள்ளப்பட்ட முதலாவது ஒப்பந்தம் ராஜீவ் – ஜே.ஆர். ஒப்பந்தமே.

பிரேமதாஸவின் கடுமையான எதிர்ப்புக்கு மத்தியில் ஜே.ஆர். அந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். தமிழீழ விடுதலைப் புலிகளும் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை.

அந்த ஒப்பந்தத்தில் தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள், அப்போதைய சூழ்நிலையில் பிரச்சினைகளுக்குத் தீர்வாகக் கருதப்பட்டவைகள் என்று அடையாளம் காணப்பட்ட முக்கிய விடயங்களே மாகாண சபைகளுக்கான பொலிஸ், காணி அதிகாரங்கள்.

போர் முடிவுக்கு வந்த பின்பு இந்தியாவுக்கும் ஐ.நா. பொதுச் செயலாளருக்கும் ஜனாதிபதி ராஜபக்ஷ அளித்த வாக்குறுதி அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தம் மூலம் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் என்பதே. 13 ஆவது திருத்தத்துக்கு அப்பால் சென்று தீர்வுகாணத் தயார் என்றும் இந்தியாவுக்குப் பல தடவைகள் வாக்குறுதி அளிக்கப்பட்டது. 13 பிளஸ் என்பது செனற் சபை என்றும் பின்னர் வியாக்கியானம் செய்யப்பட்டது.

தற்பொழுது அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் குறித்து கருத்துச் சொல்வதை அரசு நிறுத்தி விட்டது. நாடாளுமன்றத் தெரிவுக்குழு மூலமே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்கிறது அது. மாகாண சபைகள் முறைமை ஒழிக்கப்பட வேண்டும், 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் ஒழிக்கப்பட வேண்டும் என்று அரச உயர்மட்டத்தில் இருந்து கருத்துக்கள் வெளிக்கிளம்பி வருகின்றன. 13 ஆவது அரசமைப்புத் திருத்தம் உயிர் பிழைப்பது கடினமாகி வருகிறது.

ஒப்பந்தத்தின் பிரகாரம், அரசமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு இலங்கைக்கு இந்தியா அழுத்தம் கொடுத்திருக்க முடியும். ஆனால் இந்தியாவும் அதனைச் செய்யவில்லை. ஏன்? 2006 ஆம் ஆண்டில் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் துண்டாடப்பட்ட வேளையிலும் இந்தியா மௌனமாகவே இருந்தது.

மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் இருந்திருந்தால் தமிழர்கள் தமது நிலத்தை ஓரளவேனும் பாதுகாத்திருக்க முடியும். தந்தை செல்வா எந்த நிலத்தில் தமிழர்களுக்குப் பாதுகாப்பு இருக்கிறது என்று கருதினாரோ, எந்த நிலத்தில் தமிழரின் ஆட்சியை நிலைநாட்ட வேண்டும் என்று அகிம்சைப் போராட்டங்களை நடத்தினாரோ, அந்த நிலத்தை அபகரித்துத் தமிழர்களுக்கு இன அடையாளமே இல்லாமல் செய்யும் நிகழ்ச்சி நிரல் ராஜபக்ஷ அரசினால் மிகவும் சூக்குமமாகவும் தந்திரமாகவும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

வடமாகாண சபைக்கு தேர்தலை நடத்தினால், போரின் பின்னரான நிகழ்ச்சி நிரல் பாதிக்கப்பட்டு விடும் என்று அரச தரப்புக் கருதுகிறது. அந்த வெளிப்பாட்டின் முதல் அங்கமே, நேற்று இப்பக்கத்தில் தொட்டுக்காட்டப்பட்ட தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட அராஜகம்.

அதற்கு மேலதிகமாகவும் வடக்கை இராணுவ மயப்படுத்தி, தமிழர்கள் அதனைத் தமது சொந்த மண் என்று கருதுவதற்கு இடமளிக்கக் கூடாது என்று பேரினவாதம் உயர்ந்து எழுவதற்கான ஆரம்பம் இது. இந்த எச்சரிக்கையை மனதில் இருத்தி, அதனை நிறுத்த ஒன்றுபட்டு உழைக்க வேண்டிய வேளை இது.

# போரால் பாதிக்கப்பட்ட முல்லை.ஆசிரியருக்கு உரிய நஷ்டஈடு இதுவரை வழங்கப்படவில்லை

## மாதாந்த சம்பளத்தை அதிகரித்து வழங்கக் கோருகிறது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

யாழ்ப்பாணம், ஏப். 2

போரின்போது முல்லைத் தீவில் வீடு, வாசல், சொத்துக்களை இழந்த ஆசிரியர்களுக்கு உரிய நஷ்டஈடு வழங்கப்படவில்லை.

இந்த நிலையில் ஆசிரியர்களுக்கான தற்போதைய சம்பளத் தொகை மூலமாக வாழ்க்கையைக் கொண்டு நடத்த முடியாதுள்ளனர்.

எனவே, மாதாந்த அடிப்படைச் சம்பளத்தை 30 ஆயிரம் ரூபாவாக அதிகரித்து வழங்க வேண்டும் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள தாவது:-

அதிபர், ஆசிரியர்கள் எந்த வித இடையூறுகளும் இன்றி சுதந்திரமாகவும் மகிழ்ச்சியாகவும் பணியாற்றும் நிலை உருவாக்கப்பட வேண்டும்.

அண்மையில் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் நடை பெற்ற ஆசிரியர் கலந்துரையாடலின்போது, ஆசிரியர்களுக்கான சம்பள நிலுவைகள் வழங்கப்படவுள்ளதாகவும் அநேக ஆசிரியர் களின் கோவைகள், ஆவணங்கள் இல்லாததால் பூரணப்படுத்த முடியாதுள்ளதாகவும் இடர்கொடுப்பனவுக்கு விண்ணப்பித்த பெரும் பாலான ஆசிரியர்களுக்கு இடர் கொடுப்பனவு கொடுக்கப்படவில்லை என்றும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இலங்கையில் சராசரியாகக் குடும்பம் ஒன்றுக்கு மாதாந்தம் 40 ஆயிரம் ரூபா வாழ்க்கைச் செலவுக்குத் தேவைப்படுகிறது. இந்த நிலையில் ஆசிரியர்களுக்கான சம்பளத்தை 30 ஆயிரம் ரூபாவாக அதிகரித்தல் வேண்டும்.

வடமாகாணத்தில் உள்ள ஆசிரியர்கள் அதிபர்களுக்கான நிலுவைப் பணமாக ஒரு கோடி 75 லட்சம் ரூபா பணம் செலுத்த வேண்டியுள்ளது.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

# சமுர்த்திக் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டன

வலி. வடக்கு, ஏப். 2

சமுர்த்தி முத்திரை பெறும் பயனாளிகளின் நன்மை கருதிச் சமுர்த்தி சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் சமுர்த்தி அதிகார சபையால் பண ரீதியாக அதிகரிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் சமுர்த்திப் பயனாளிகளுக்கு 250 ரூபா, 350 ரூபா, 615 ரூபா, 925 ரூபா, ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான முத்திரைகள் வழங்கப்பட்டு வந்தன.

தற்போது இந்த தொகைகளில் மாற்றம் செய்யப்பட்டு 750 ரூபா, ஆயிரத்து 500 ரூபா முத்திரைகள் மட்டுமே சமுர்த்திப் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு வருகின்றன.

முத்திரைகளில் மாற்றம் செய்யப்பட்ட போதிலும் சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் சகல சமுர்த்திப் பயனாளிகளும் இந்த புதிய திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டுள்ளனர்.

இதனால் குறிப்பிட்ட பயனாளிகள் குடும்பத்தில் இடம் பெறும் திருமணத்துக்கான கொடுப்பனவு மூவாயிரத்து ஐநூறு ரூபாவில் இருந்து ஐயாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. குடும்பத்தில் இடம் பெறும் இரண்டு திருமணங்களுக்கு இந்தத் தொகை வழங்கப்படவுள்ளது.

குடும்பத்தவர்கள் வைத்திய சாலையில் ஏழு நாள்களுக்கு மேல் அனுமதிக்கப்பட்டு இருந் தால் ஒரு நாளுக்க இருநூறு ரூபா என்ற அடிப்படையில் 30 நாள்க ளுக்கு ஆறாயிரம் ரூபா உதவித் தொகையாக பெற முடியும். இதனைப் பகுதி பகுதியாகக் கூட பெற்றுக் கொள்ள முடியும்.

இதேவேளை இதுவரை காலமும் இரண்டு பிள்ளைகளின் பிறப்புக்கு மட்டும் வழங்கப்பட்டு வந்த தலா ஐயாயிரம் ரூபா தற்போது மூன்று பிள்ளைகளின் பிறப்புக்கு வழங்கப்படவுள்ளது.

மரணக் கொடுப்பனவும் கூட குறிப்பிட்ட நபரின் மரணக் கிரியைகள் இடம்பெறும் வேளையில் பத்தாயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்ட சுற்றறிக்கை சமுர்த்தி அதிகார சபையின் ஆணையாளர் சந்ரா விக்ரமசிங்காவால் அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. மார்ச் முதலாம் திகதியில் இருந்து இது நடைமுறைக்கு வரவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ம-86)

## சாவ.நகரசபை உறுப்பினரை தாக்கிய சந்தேக நபர் கைது

தென்மராட்சி, ஏப். 2

சாவகச்சேரி நகரசபையின் ஆளும்கட்சி உறுப்பினரை 15 பேர் கொண்ட கும்பல் தாக்கியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களில் சாவகச்சேரி சப்பச்சி மாவடியைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்து விசாரணை செய்த போது இந்தத் தகவல் வெளியாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புடைய ஒருவரைக் கைது செய்த சாவகச்சேரி பொலிஸார் நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்தினர். வழக்கை விசாரித்த பதில் நீதவான் செ.கணபதிப்பிள்ளை சந்தேக நபரை எதிர்வரும் பத்தாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கடந்த 22 ஆம் திகதி இரவு தாக்குதல் இடம்பெற்ற போதிலும் எவரும் கைது செய்யப்படவில்லையென 27 ஆம் திகதி இடம்பெற்ற சிவில் பாதுகாப்புக்குழுக் கூட்டத்தில் நகரசபை தலைவர் இ.தேவசகாயம்பிள்ளை சுட்டிக்காட்டியிருந்தார். இந்த நிலையில் தற்போது ஒருவர் கைதாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

# வடமொழியில் உள்ள பழம்பெரும் சுவடிகளை வாசிக்கக்கூடிய சிறந்த அறிஞர்கள் அவசியம்

## இந்திய அரசின் உதவியை நாடுவதாக இந்திய பிரதி தூதுவர் தெரிவிப்பு

**பல லட்சக் கணக்கான ஓலைச் சுவடிகளைப் படித்தால் தமிழ் மொழியூ டாக எல்லாவற்றையுமே தெரிந்துகொள்ள முடியும். மூன்று லட்சத் துக்கு மேற்பட்ட அபூர்வமான பல விடயங்களை உள்ளடக்கிய ஓலைச் சுவடிகள் 1267 இல் அச்சிடப்பட்ட புத்தகம் உள்ளது.**

யாழ்ப்பாணம், ஏப்.2

தஞ்சை சரபோகி நூலகத்தில் உள்ள வடமொழி கிரந்தம் போன்றவற்றில் உள்ள பழம்பெரும் ஏட்டுச் சுவடிகளை வாசிக்கக் கூடிய சிறந்த அறிஞர்களைத் தருவிக்க இந்திய அரசின் உதவியை நாடுவதாக யாழ்ப்பாணத்தில் உள்ள பிரதி இந்தியத் தூதுவர் வி.மகாலிங்கம் தெரிவித்தார்.

அகில இலங்கை இந்து மாமன்றத்திடம் பழம்பெரும் ஏட்டுச் சுவடிகள் பிரதி கையளிக்கும் நிகழ்வு சனிக்கிழமை சட்டத்தரணி க.நீலகண்டன் தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட பிரதித் தூதுவர் மகாலிங்கம் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தியாவில் பல லட்சக் கணக்கான ஓலைச்சுவடிகள், கல்வெட்டுகள் உள்ளன. கல்வெட்டைப் படிப்பதற்கும் ஓலைச் சுவடிகளைப் .படிப்பதற்கும் நிறைய வித்தியாசம் உள்ளன. இவற்றைப் படிப்பதற்கு ஆய்வாளர்கள் தேவை.

ஆன்மிகம் மட்டுமன்றி மருத்துவம் தொடர்பான சுவடிகளும் உள்ளன. பாண்டிச்சேரி பல்கலைக்கழகத்தில் எழுபது லட்சம் கையேடுகள் சைவசித்தாந்தத் தொகுப்புக்கள் வைக்கப்பட்டுள்ளன.

பிரான்ஸ் அரசே இதைச் சேகரித்துப் பாதுகாத்துள்ளது. பல லட்சக் கணக்கான ஓலைச் சுவடிகளைப் படித்தால் தமிழ் மொழியூடாக எல்லாவற்றையுமே தெரிந்து கொள்ள முடியும். மூன்று லட்சத்துக்கு மேற்பட்ட அபூர்வமான பல விடயங்களை உள்ளடக்கிய ஓலைச் சுவடிகள் 1267 இல் அச்சிடப்பட்ட புத்தகம் உள்ளது.

யாழ்ப்பாணத்தில் இதுபோன்ற நடவடிக்கைகளில் முன்னர் நாவலர் 19 ஆம் நூற்றாண்டில் அச்சுத் துறையூடாக புத்தங்களைத் தமிழ் உலகுக்கு அறிமுகப்படுத் தியவர்.

அந்த வழியில் செல்லும் ஹ வாய் சைவ ஆதீனத்தையும் இந்து மாமன்றத்தினரையும் வாழ்த்துவதுடன் அவர்கள் மேலும் பல அபூர்வமான பணிகளை முன்னெடுக்க வேண்டும்.

இந்திய அரசின் மூலம் ஏட்டுச் சுவடிகளைப் படிக்கக் கூடிய சிறந்த ஆய்வாளர்களின் உதவியைப் பெற்றுத்தர முயற்சி செய்வேன்.- என்று கூறினார். (ம-7)



ஒட்டுசுட்டான் பகுதியில் இடம்பெற்ற ஐ.லீட் நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பெண்கள் எழுச்சி நாள் நிகழ்வின்போது பதாகைகளைத் தாங்கியவாறு பெண்கள் ஊர்வலமாகச் செல்கின்றனர். (க-500)

# கல்வி அதிகாரிகளின் வெற்றிடங்களால் மாணவரின் முன்னேற்றத்தில் பாதிப்பு

புதுக்குடியிருப்பு, ஏப்.2

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் சில பிரிவுகளுக்கு உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்படாமையால் கல்வி வளர்ச்சியில் பாதிப்புக்கள் ஏற்படுவதாகத் தெரிய வந்துள்ளது.

ஆரம்பக் கல்வி மற்றும் முறைசாராக் கல்விப் பிரிவுகளுக்கே உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் நியமிக்கப்படாத நிலை காணப்படுகின்றது.

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் ஆரம்பக்கல்வி உதவிக் கணிப்பாளராகக் கடமையாற்றியவர் இதிலிருந்து விலகி பாடசாலைக்குச் சென்று மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் அவருக்குப் பதிலாக புதியவர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இதனால் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் கல்வி நிலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக கல்விச் சமூகத்தினர் கவலை தெரிவித்துள்ளனர். குறிப்பாக தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு இது பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் இப்பதவிக்கு ஒருவரை நியமிக்காது பொறுப்புக்களை ஆசிரிய ஆலோசகர்களிடம் வழங்கியுள்ளதால் அவர்களும் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் தெரிய வந்துள்ளது.

இதேவேளை முறைசாராக் கல்விப் பிரிவுக்கும் ஆசிரிய ஆலோசகர்களோ அல்லது உதவிக் கல்விப் பணிப்பாளர்களோ இதுவரை நியமிக்கப்படாத நிலையே காணப்படுகின்றது. இதனால் முறைசாராக் கல்விப் பிரிவின் வளர்ச்சிக்கு வெளிநாடுகளிலிருந்து வழங்கப்பட்ட 10 இலட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட நிதி பயன்படுத்தப் படாது திரும்பிச் செல்லும் நிலை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் இவ்விடயத்தைக் கவனத்தில் கொண்டு மேலே குறிப்பிட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர்களை இருதுறைகளுக்கும் நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என கல்வி வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-410)

## அசௌகரியங்களை ஏற்படுத்தும் வவுனியா மில் வீதி வடிகால்கள்

நெளுக்குளம், ஏப்.2

வவுனியா உக்கிளாங்குளம் மில் வீதியில் அண்மையில் அமைக்கப்பட்ட வடிகால்களால் மக்கள் அசௌகரியங்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் அண்மையில்தான் வடிகால்கள் அமைக்கப்பட்டன. ஆனால் இவை உரிய வகையில் அமைப்படாததால் இவற்றிலிருந்து நீர் வெளியேறுவதுடன் வீடுகளுக்குள் புகுவதாகவும் மக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

இதனால் நீர் தேங்கி நின்று துர்நாற்றமும் வீசுகின்றது. அத்துடன் நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதனால் டெங்கு போன்ற நோய்கள் பரவக் கூடிய ஆபத்தான நிலையும் காணப்படுகின்றது. இது தொடர்பாக வவுனியா நகரசபை பிரதேச சபை, சுகாதாரப் பகுதியினர் ஆகியோருக்கு முறைப்பாடு தெரிவித்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வடிகால்களில் காணப்படும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்படுமாயின் இவற்றினூடாக நீர் சென்று நெளுக்குளத்தை இலகுவாக அடையுமெனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் நீர் இடைநடுவில் விரயம் ஆகாது குளத்தைச் சென்று அடைவதால் விவசாயிகளும் பயன்பெறுவரெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-402)

## உடையார்கட்டுப் பகுதியில் விடுக்கப்படும் அச்சுறுத்தல்

முல்லைத்தீவு, ஏப். 2

முல்லைத்தீவு உடையார் கட்டுப்பகுதியில் வர்த்தகர்களையும் பொதுமக்களையும் அச்சுறுத்தும் வகையில் சிவில் உடைகளில் வரும் இராணுவத்தினர் செயற்பட்டு வருவதாக இந்தப் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர்களும் பொதுமக்களும் தெரிவித்துள்ளனர்.

கடந்தசில நாள்களாக சிவில் உடையில் வரும் இராணுவத்தினரும் இராணுவப் புலனாய்வாளர்களும் வர்த்தக நிலையங்களுக்குச் சென்று வர்த்தகர்களிடம் பல்வேறு முரண்பாடான கேள்விகளைக் கேட்பதுடன் அவர்களை அச்சுறுத்தும் தொனியில் விசாரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. மேலும் இந்தப் பகுதியில் உள்ள சில வீடுகளுக்கு செல்லும் இவர்கள் வீட்டில் உள்ளவர்களின் விபரங்களைக் கேட்டறிந்து விபரங்களைத் திரட்டி வருகின்றனர்.

அத்துடன் கடந்த புதன்கிழமை, மற்றும் வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் உடையார்கட்டுப் பகுதியில் உள்ள புத்தக விற்பனை நிலையங்களுக்கும் பத்திரிகை விற்பனை நிலையங்களுக்கும் சென்று தமிழ் பத்திரிகைகளைக் கொண்டு வரும் விநியோகஸ்தர்களின் விபரங்களைக் கேட்டு அறிந்து கொண்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (க-6)

## ஒட்டுசுட்டான் பகுதியில் தனியான பிரதேச சபை

### அப்பகுதி மக்கள் கோரிக்கை

ஒட்டுசுட்டான் பகுதியில் தனியான பிரதேச சபையை அமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவையும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவையும் உள்ளடக்கிய வகையில் புதுக்குடியிருப்புப் பிரதேச சபை அமைந்துள்ளது. இது பரந்த பிரதேசங்களைக் கொண்ட ஒரு சபையாகக் காணப்படுகின்றது.

ஏ-9 வீதியின் திருமுறிகண்டி முதல் மாங்குளம் வரையான பகுதியையும் ஏ-35 வீதியின் நெத்தலியாறு முதல் புதுமாத்தளன் சந்தி வரையான பகுதிகளையும் கொண்டு ஒட்டுசுட்டான் கற்சிலைமடு, தரிப்பட்ட முறிப்பு, கற்சிலைமடு ஆகிய பரந்த பகுதிகளையும் உள்ளடக்கியதாகக் காணப்படுகின்றது.

இந்த நிலையில் விசுவமடு, உடையார்கட்டு, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், கற்சிலைமடு, மாங்குளம் ஆகிய பகுதிகளில் உள்ள பெரிய சந்தைகளையும் சிறிய சந்தைகளையும் புதுக்குடியிருப்புப் பிரதேச சபையே பராமரித்து வருகின்றது.

மேலும் பிரதேச செயலர் பிரிவொன்றில் பிரதேச சபையொன்று அமைய வேண்டிய நிலையும் உள்ளது.

இந்த நிலையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் தனியான பிரதேச சபையை அமைக்குமாறு இங்குள்ள மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-6)

## தறிகெட்ட வாகன ஓட்டத்தால் செத்து மடிந்தன 6 மாடுகள்

நெளுக்குளம், ஏப்.2

ஏ-9 வீதியில்முறிகண்டிப் பகுதியில் வீதியில் படுத்திருந்த மாடுகளை வேகமாக வந்த கனரக வாகனம் மோதியது. இதில் 6 மாடுகள் சம்பவ இடத்திலேயே இறந்துபோயின.

முறிகண்டிப் பகுதியில் கட்டாக்காலிகளாக அலைந்து திரியும் மாடுகளின் தொகை அண்மைக்காலமாக அதிகரித்துக் காணப்படுகின்றது. இந்த மாடுகள் ஏ-9 வீதியிலும் நடமாடித் திரிகின்றன. மேலும் அருகில் உள்ள வயல் நிலங்களுக்குள் சென்று பயிர்களை நாசமாக்கி வருகின்றன. மேலும் ஏ-9 வீதியில் இந்த மாடுகளினால் வீதி விபத்துக்களும் ஏற்பட்டு வருகின்றன.

இதேவேளை மாடுகளின் இறப்பும் அதிகரித்துச் செல்வதை அவதானிக்க முடிகின்றது. இந்த நிலையில் கடந்த சனிக்கிழமை கனரக வாகனம் மோதியதில் 6 மாடுகள் அந்த இடத்திலேயே துடிதுடித்து இறந்தன. (க-402)

## பொருளியல் பாட செயலமர்வு

மாணவர்களுக்கான பொருளியல் பாட செயலமர்வு கிளிநொச்சியில் இன்று இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் இன்று காலை 8.30 மணியளவில் இந்தப் பொருளியல் பாட செயலமர்வு நடைபெறவுள்ளது. இந்தச் செயலமர்வில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து 2013 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள பொருளியல் பாடம் கற்றும் மாணவர்களைக் கலந்து கொள்ளுமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (க-405)

## மன்னாரில் தந்தை செல்வா பிறந்த நாள் நிகழ்வுகள்

### நேற்று சிறப்பாக நடந்தன



மன்னார், ஏப்.2

ஈழத்துக் காந்தி என்றழைக்கப்படும் தமிழ்த் தேசியத்தலைவர் அமரர் தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் 115 ஆவது பிறந்த தின விழா நேற்று திங்கட்கிழமை காலை தந்தை செல்வா அறங்காவலர் அமைப்பின் தலைவர் பேதுரு அந்தோனி மார்க் தலைமையில் இடம் பெற்றது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக அமைந்திருக்கும் தந்தை செல்வாவின் திருவுருவச் சிலைக்கு மலர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து மன்னார் அரச பஸ் தரிப்பிடத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இதன் போது சிறப்புரைகளும், சமயத் தலைவர்களின் ஆசியுரைகளும் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் மன்னார் நகர சபைத் தலைவர் எஸ்.ஞானப்பிரகாசம், உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், மன்னார் பிரதேச சபைத் தலைவர் மார்ட்டின் டயஸ், உப தலைவர் அந்தோனி சகாயம், நகர சபை, பிரதேச சபை உறுப்பினர்கள், மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை செபமாலை அடிகளார், தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ) மாவட்டப் பொறுப்பாளர் இராசேந்திரம் பற்றிக் உட்பட பலர் கலந்து கொண்டனர். (க-12)

# கிளிநொச்சியில் கூட்டமைப்பினரை தாக்கியவர்களை உடன் கைது செய்க

## அமைச்சர் றிசாத், ஹுனைஸ் பாரூக் எம்.பி. கோரிக்கை

மன்னார், ஏப்.2

கிளிநொச்சியில் இடம்பெற்ற சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட வேண்டும். இவ்வாறு அமைச்சர் றிசாத் பதியுதீன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் ஆகியோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சியில் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் அலுவலகம் தாக்கப்பட்ட சம்பவம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கப்படத்தக்கது. குறித்த சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அமைச்சர் றிஸாத் பதீயுதின் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹுனைஸ் பாரூக் ஆகிய இருவரும் இணைந்து ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இன்று இலங்கையில் வித்தியாசமான பயங்கரவாத நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் சட்டத்தைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் பொலிஸார் தவறியுள்ளனர்.

கடந்த 30 வருடங்கள் இடம்பெற்ற போரில் அப்பாவி உயிர்களை இழக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த நிலை மீண்டும் ஏற்படக்கூடாது. இனவாதம், மதவாதம் பேசப்பட்டு இன்று மக்கள் மத்தியில் மீண்டும் பிரிவினைகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன.

இந்த நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தப்பட வேண்டிய பொறுப்பும், சட்டத்தை நிலை நாட்டவேண்டிய பொறுப்பும் பொலிஸாருக்கு உள்ளது. அதே போன்று இந்த நாட்டின் ஜனாதிபதிக்கும் ஒரு பொறுப்புள்ளது. இந்த நாட்டில் சமாதானத்தையும், நாட்டில் வாழ்கின்ற அனைத்து இன மக்களுக்கும் பாதுகாப்பையும் கொடுக்க வேண்டிய ஒரு பொறுப்பு ஜனாதிபதிக்கு உள்ளது.

எனவே கிளிநொச்சியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் காரியாலயம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் எவராக இருந்தாலும் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும்.

இந்தத் தாக்குதல் தொடர்பாக பல தரப்பட்ட கருத்துக்கள் வெளியாகியுள்ளன. எவராக இருந்தாலும் அவர்கள் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்படும் போது தான் எதிர் காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதைத் தவிர்த்துக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-12)

## புதுவருடச் சந்தைகள்

தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் புதுவருடச் சந்தைகள் இடம்பெறவுள்ளதாக கிளிநொச்சி அரச அதிபர் அறிவித்துள்ளார்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இந்தச் சந்தைகளில் புத்தாண்டுடன் தொடர்புடைய அனைத்துப் பொருள்களையும் சந்தைப்படுத்த முடியுமெனவும், மக்கள் மலிவான விலையில் பொருள்களைக் கொள்வனவு செய்ய முடியுமெனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார்.

இந்தச் சந்தைகள் எதிர்வரும் 5, 6 ஆம் திகதிகளில் கண்டாவளை, (புளியம்பொக்கணைச் சந்தி), 7,8 ஆம் திகதிகளில் பூநகரி (வாடியடி), 8,9 ஆம் திகதிகளில் கரைச்சி (ஸ்கந்தபுரம்), 9,10 ஆம் திகதிகளில் பச்சிலைப்பள்ளி (பளை நகரம்) 11,12 ஆம் திகதிகளில் மாவட்டச் சந்தையாக கரைச்சிப் பிரதேச சபை வளாகம் ஆகிய இடங்களில் இடம்பெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க)

## மட்டுவில் கத்தரிக்காய்க்கு நல்ல கிராக்கி

யாழ்ப்பாணம், ஏப்.2

மட்டுவில் வெள்ளைக் கத்தரிக்காய்க்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது.

இந்தக் கத்தரிக்காய் இந்தப் பிரதேச விவசாயிகளால் பயிரிடப்பட்டு வழமையாக இந்த மாதத்தில் சந்தைக்கு எடுத்து வரப்படுவது வழக்கம்.

தற்போது இந்தக் கத்தரிக்காய்கள் சந்தைக்கு பெருமளவில் வந்து சேர்ந்ததும் அவை உடனடியாக விற்றுத் தீர்ந்து விடுகின்றன.

மக்கள் இந்த வெள்ளைக் கத்தரிக்காய்களை மிகவும் விருப்பமாக வாங்கிச் செல்கின்றனர். கிலோ 40 ரூபாவாக விற்கப்படுவதால் ஏனைய உள்ளூர் மற்றும் தம்புள்ள கத்தரிக்காய்களின் விலை கிலோ 30 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

## நயினாதீவு- குறிகாட்டுவான் கடற்பாதை சேவை விரைவில்

யாழ்ப்பாணம், ஏப். 2

நயினாதீவுக்கும் குறிகாட்டுவானுக்கும் இடையிலான கடற்பாதை சேவை இன்னும் மூன்று மாத காலப் பகுதிக்குள் ஆரம்பித்து வைக்கப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

**மூன்று மாத காலப் பகுதிக்குள் ஆரம்பித்து வைக்கப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபை கூறுகிறது**

தற்போது இந்தக் கடற்பாதைக்கான 75 வீதமான கட்டுமானப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

தென் பகுதியில் இருந்து வருகை தந்த தொழில்நுட்பவியலாளர்களால் இந்தக் கடற்பாதை சீர் செய்து அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பாதை சிறிது காலம் கிடப்பில் இருந்ததால் அதன் உட்பகுதி துருப்பிடித்த நிலையில் உள்ளது. அதைச் சீர் செய்து மீளப் புனரமைப்பதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. விரைவாக இந்தச் சேவையை ஆரம்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனைவிட இந்தப் பாதையை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக நயினாதீவு மற்றும் குறிகாட்டுவான் இறங்கு துறைகளும் புனரமைக்கப்பட்டும் வருகின்றன.

பாதை கரைக்கு வந்து நிற்க கூடிய வகையில் இந்த இரண்டு துறைகளும் அதற்கேற்றவாறு நிர்மாணிக்கப்பட்டும் வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-17)

## கல்வி வலயங்களுக்கு வருகின்றன 4 'பிக்கப்'கள்

யாழ்ப்பாணம், ஏப்.2

யாழ். குடாநாட்டின் கல்வி வலயங்களின் பாவனைக்கு நான்கு பிக்கப் வாகனங்கள் விரைவில் எடுத்து வரப்படவுள்ளன. வடக்கு மாகாண சபையின் உதவியுடன் இந்த நான்கு பிக்கப் வாகனங்களும் இந்த மாத நடுப் பகுதிக்குள் கொழும்பில் இருந்து எடுத்து வரப்படவுள்ளன.

யாழ். கல்வி வலயம் மற்றும் வலிகாமம், தென்மராட்சி, வடமராட்சி போன்ற கல்வி வலயங்களுக்கு இந்த நான்கு 'பிக்கப்' வாகனங்களும் வழங்கப்படவுள்ளன.

இந்தக் கல்வி வலயங்களில் தற்போது ஹயஸ் வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. போதிய வாகன வசதியின்மையால் கல்வி வலயப் பணிகளை உரிய வேளையில் மேற்கொள்ள முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

தற்போது எடுத்து வரப்படும் இந்த 'பிக்கப்' வாகனங்கள் வலய கல்விப் பணிப்பாளர்களின் பயன்பாட்டுக்கு வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ம-17)

# வெங்காயச் செய்கையாளர் சங்கங்களை மீண்டும் செயற்படுத்த நடவடிக்கை

அச்சுவேலி, ஏப். 2

யாழ். மாவட்டத்தில் வெங்காயப் பயிர்ச் செய்கையாளர் கூட்டுறவுச் சங்கங்கள் மீண்டும் செயற்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

அண்மைக் காலத்தில் வெங்காயப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் எதிர்கொண்டுவரும் பாதிப்புக்களுக்கு கூட்டுறவு அடிப்படையில் விமோசனம் பெறும் நோக்குடனும் பயிர்ச் செய்கை தொடர்பானவண்மை விருத்தியை மேம்படுத்துவதற்கு வசதியாக விவசாயிகள் அமைப்புகள் வெங்காயப் பயிர்ச் செய்கையாளர் கூட்டுறவுச் சங்கங்களை மீண்டும் செயற்பட வைக்க முன்வந்துள்ளன. இதற்கு விவசாயத் திணைக்களமும் அனுசரணை வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

யாழ். மாவட்டத்தில் பயிர்ச் செய்கை அடிப்படையில் வெங்காயச் சங்கங்கள் கிராம வாரியாக செயற்பட்டு வந்தன. 1945 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இருந்து வெங்காய உற்பத்தியிலும் வெங்காயத்தை சந்தைப் படுத்துவதிலும் வெங்காயப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுவந்த விவசாயிகளுக்கான நலனோம்பு நடவடிக்கையிலும் வெங்காயச் சங்கங்கள் பெரும் பணியாற்றி வந்தன.

1972 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அவற்றின் செயற்பாடுகள் ஸ்தம்பிதம் அடைந்ததோடு வெங்காயச் சங்கத்தின் சொத்துக்கள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கட்டமைப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டன.

யாழ். மாவட்டம் வெங்காயச் செய்கையில் பெற்று வந்த தனித்துவமான நிலையில் சின்ன வெங்காயத்துக்கு யாழ்ப்பாண வெங்காயம் என்ற பெயரேவழங்கப்பட்டு வந்தது.

தேசிய ரீதியில் வெங்காய உற்பத்தியில் 75 வீதத்துக்கு மேல் யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்பட்டதோடு நாடளாவிய ரீதியில் உற்பத்தி செய்வதற்கான விதை வெங்காயத்தையும் யாழ். மாவட்ட விவசாயிகள் செய்கை பண்ணி உரிய முறையில் களஞ்சியப் படுத்தி நடுகைக் காலத்தில் வெளிமாவட்டங்களுக்கு வழங்கிவந்தனர்.

இந்த நிலையில் மாற்றம் ஏற்பட்டிருப்பதோடு அண்மைக் காலத்தில் வெங்காயச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் எதிர்பாராத வருமான இழப்புக்கும் பாதிப்புக்கும் ஆளாகி வருகின்றனர்.

இந்த நிலையில் விவசாயிகளைப் பாதுகாக்கும் நோக்கோடு வெங்காய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் மீண்டும் உருவாக்கப்படவுள்ளது.

''யாழ். மாவட்ட விவசாயிகள் வெங்காயப் பயிர்ச் செய்கையில் இந்த வருடம் எதிர்பாராத பாதிப்புக்களுக்கு உள்ளாகி உள்ளனர். இந்த வருடம் விதை வெங்காயத்துக்கே பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நிறுவனப் படுத்தப்பட்ட நிலையில் விவசாயிகள் அமைப்பு ரீதியில் செயற்படும்போது பல்வேறு உதவிகளை தொண்டு நிறுவனங்கள் ஊடாகவும் திணைக்கள ரீதியிலும் பெற்றுக் கொடுக்க முடியும்'' என்று யாழ். மாவட்ட விவசாயத் திணைக்களப் பணிப்பாளர் தெரிவித்தார். (ம-11)

## யாழ். பிறவுண் வீதிக்கு விடிவு

யாழ்ப்பாணம், ஏப்.2

யாழ். பிறவுண் வீதி புனரமைக்கப்பட்டு 'காப்பெற்' வீதியாக மாற்றப்படவுள்ளது.

கடந்த சில வருடங்களாக புனரமைப்பு இன்றி பெரும் சேதப்பட்டு இந்த வீதி காணப்படுகின்றது.

வீதியில் ஏற்பட்ட சேதத்தால் மழை காலங்களில் வெள்ளம் அதிகளவில் தேங்கியும் காணப்படுவது வழமை.

குறித்த வீதி மிகவும் மோசமாகச் சேதமடைந்து காணப்படுவதால் மக்கள் சிரமப்பட்டும் வருகின்றனர். தற்போது இந்த வீதியின் புனரமைப்புக்காக கற்கள் பறிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்த வீதி புனரமைக்கப்பட்டு 'காப்பெற்' வீதியாக மாற்றப்படவுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம-17)

## மோட்டர்கள் திருட்டு

தென்மராட்சி, ஏப்.2

நுணாவில் மத்தியில் உள்ள அரிசி ஆலை ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த மோட்டர்கள் நேற்று முன்தினம் இரவு திருடர்களின் கைவரிசைக்கு இலக்காகின.

நுணாவில் மத்தி வயல் கரையை அண்டிய பகுதியில் அந்த அரிசி ஆலை அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாகச் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் அண்மைக்காலமாக வீடுகளிலும் அரிசி ஆலைகளிலும் மோட்டர்கள் திருட்டு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## சாவ. ஆஸ்பத்திரியில் தொண்டை, மூக்கு, காது கிளினிக் ஆரம்பிக்குக

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் தொண்டை, மூக்கு, காது கிளினிக் ஆரம்பிக்குமாறு பிரதேச மக்கள் கோரியுள்ளனர்.

தொண்டை, காது, மூக்கு நோய்களால் பாதிக்கப்படுவோர் கிளினிக்குக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு செல்ல வேண்டியுள்ளது. இதனால் பொதுமக்களுக்கு நேரவிரயம் ஏற்படுகிறது.

யாழ். போதனா வைத்தியசாலையில் நடைபெறும் பெரும்பாலான கிளினிக்குகள் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையிலும் நடைபெறுவதால் தென்மராட்சி, பூநகரி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு உட்பட பல பிரதேச மக்கள் நன்மையடைந்து வருகின்றனர்.

இதேபோன்று தொண்டை, காது, மூக்கு கிளினிக்கையும் சாவகச்சேரி வைத்தியசாலையில் நடத்துமாறும் இதன் மூலம் இந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் நன்மையடைவர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## மாநகரத் தொழிலாளர்கள் நேற்றுப் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 2

நாவாந்துறைப் பகுதியில் மாநகர தொழிலாளர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து தொழிலாளர்கள் நேற்றுப் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் இந்தப் பகுதி சந்தைக் குத்தகைகாரர்களுக்கும் மாநகர சுத்திகரிப்புத் தொழிலாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாகியது.

இதில் ஐந்து மாநகர தொழிலாளர்கள் வாள்வெட்டுக்கு இலக்காகி காயப்பட்டனர்.

இதனை அடுத்து நேற்று மாநகர தொழிலாளர் தமது சுத்திகரிப்பு பணிகளை இடைநிறுத்தி பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

தொழிலாளர்களின் இந்த பணிப்புறக்கணிப்பால் மாநகர சபைப் பகுதியில் உள்ள கழிவகற்றும் பணிகள் யாவும் முடங்கின.

அதனைவிட மாநகர பகுதியில் உள்ள சந்தைகளின் துப்பரவுப் பணிகளும் நேற்று முடங்கிக் காணப்பட்டன. (ம-17-7)



கொழும்பில் இந்து வித்தியா விருத்திச் சங்கத்தை முதன் முதலில் ஆரம்பித்துத் தொண்டாற்றிய சேர்.பொன்.இராமநாதன், தம்பையா போன்ற 25 பெரியார்களை நினைவுகூரும் வகையில் அகில இலங்கை இந்து மாமன்றம் யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட 24 மாணவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கியது. பல்கலைக்கழக மாணவர் ஒருவருக்கு துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் மடிக்கணினி வழங்குகிறார். (ம-7)

## கடித்துச் சண்டைபோட்ட குழுவினர்

வலி வடக்கு, ஏப். 2

அராலி வடக்கு செட்டியார் மடத்தடியில் இரண்டு இளைஞர் குழுக்களுக்கு இடையே இடம்பெற்ற சண்டையில் இரு குழுக்களும் ஒருவரையொருவர் கடித்து காயப்படுத்திய சம்பவம் இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இரு இளைஞர் குழுக்களும் ஒன்றாக இருந்துள்ளன. பின்னர் இவர்களுக்கு இடையே இடம்பெற்ற கைகலப்பில் ஒருவரை ஒருவர் கடித்துக் கொண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதன்போது ஒருவர் தலை, நெஞ்சு மற்றும் கன்னம் ஆகிய பகுதிகளில் கடித்து காயப்படுத்தப்பட்டுள்ளார். இதற்குப் பழி தீர்க்கும் வகையில் எதிரணியினர் மற்றொருவரின் காதை கடித்து காயப்படுத்தியுள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-86)

## மட்டுவில் கண்ணகை அம்பாள் ஆலயத்தில் திரண்ட அடியவர்கள்

பிரசித்தி பெற்ற மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய மூன்றாம் திங்கள் பொங்கலில் நேற்று பெரும் எண்ணிக்கையான அடியார்கள் கலந்து கொண்டனர்.

காலை 6 மணி தொடக்கம் ஆலயத்தின் நான்கு வீதிகளிலும் பொங்கல் இடம் பெற்றது. காலை தொடக்கம் ஆலய வீதிகளிலும் அதனை அண்டியுள்ள வீதிகளில் காவடிகள், பறவைக் காவடிகள், பாற் செம்புகளுடன் பெரும் எண்ணிக்கையான அடியவர்கள் வருகை தந்த வண்ணம் இருந்தனர்.

ஆலயச் சுற்றாடலில் பெரும் எண்ணிக்கையான பொலிஸார் சீருடையிலும் சிவிலிலும் காணப்பட்டனர். அடியார்களுக்குத் தேவையானவற்றை வழங்குவதற்கு ஏற்ற ஒழுங்குகளை ஆலய நிர்வாகத்தினர் மேற்கொண்டனர்.

அடியார்களின் நலன்கருதி ஆலயத்துக்குவரும் அனைத்து வீதிகளிலும் தண்ணீர்ப் பந்தல் அமைக்கப்பட்டது தாக சாந்தி இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## ரஜனியின் மனைவி ஆரம்பித்தார் 'நான் இந்தியாவுக்காக' அமைப்பு



சென்னை, ஏப். 2

நடிகர் ரஜினிகாந்த்தின் மனைவி லதா 'நான் இந்தியாவுக்காக' என்ற அமைப் பை ஆரம்பித்தார். இதன் ஆரம்ப நிகழ்வும் சிறப்புக் கண்காட்சியும் ராகவேந்திரா திருமண மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

கண்காட்சியில் இந்திய பாரம்பரியம் மற்றும் தொன்மை, இசை, நடனம், வணிகம் தொடர்பான கலை வடிவங்கள் இடம்பெற்றன. ரஜனிகாந்த் தொடர்பாக வெளிவந்த புத்தகங்கள், அவரைப் பற்றிய குறும்படங்கள், தகவல் பெட்டகங்கள், திரைப் படங்களின் இறுவட்டுகளும் இடம்பெற்றிருந்தன.

இதுகுறித்து லதா ரஜனிகாந்த் தெரிவித்ததாவது:-

மாற்றத்தைப் பற்றி பேசிக் கொண்டிருக்காமல் அதனை உருவாக்குபவர்களாக இருக்க வேண்டும் என்று நினைப்பவள் நான். பல ஆண்டுகளாக பொது வாழ்க்கையில் இருந்து மக்களோடு கலந்துரையாடி வருகிறேன். கல்வி, ஆரோக்கியம், உடல் நலம், கலாசாரம், பாரம்பரியம், சுற்றுப் புறச் சூழல் ஆகியவற்றின் அடிப்படையில் இன்றைய இளைஞர்கள் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும். அதற்காகத்தான் இந்த அமைப்பை ஆரம்பித்திருக்கிறேன் - என்றார். (வ)

# அடிப்படை ஆதாரமற்றது இலங்கைத் தூதரின் கருத்து

## மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி சாடல்



மீனம்பாக்கம், ஏப்.2

வடமாநிலங்களை பூர்வீகமாக கொண்டவர்கள் தான் சிங்களவர்கள் என்ற இலங்கைத் தூதரின் கருத்து அடிப்படை ஆதாரமற்ற வரம்பு மீறிய செயல் என்று மத்திய இணை அமைச்சர் நாராயணசாமி தெரிவித்தார்.

நேற்றுக் காலை சென்னையில் இருந்து விமான மூலம் டில்லிக்குப் புறப்பட்டுச் சென்ற அவர் முன்னதாக விமான நிலையத்தில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கை தூதர் காரியவசம் இந்தியாவின் வடமாநிலங்களை பூர்வீகமாக கொண்டவர்கள்தான் சிங்களவர்கள் என்று பேசியிருப்பது அடிப்படை ஆதாரமற்ற வரம்பு மீறிய செயல். அவர், தூதரக அதிகாரி என்ற பணியை செய்யாமல் வேறு பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார். இதை அனுமதிக்க முடியாது.

தமிழக மற்றும் காரைக்கால் மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட்டு வருகின்றனர். இந்தப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காண்பதற்காக இலங்கை மற்றும் இந்திய மீனவர்களிடையே பேச்சு நடத்த வேண்டும் என முடிவு செய்யப்பட்டுள்ளது. அது தொடர்பாக இந்திய வெளியுறவு துறை அமைச்சகம் தமிழக அரசுக்கு இருமுறை கடிதம் எழுதியும் இதுவரை எந்த பதிலும் வரவில்லை. இதனால் இந்த பேச்சு நடத்த முடியாத சூழ்நிலை உள்ளது.(வ)

## பாக்.எல்லைக்குள் தவறுதலாக நுழைந்த இந்தியச் சிறுமி மாயம்

பாகிஸ்தான் எல்லைக்குள் கவனக்குறைவாக நுழைந்த பூஜா என்ற 7 வயதுச் சிறுமி காணாமற் போயுள்ளார்.

ராஜஸ்தான் மாநிலம், பிகானீர் மாவட்டத்தில் உள்ள காஜூவாலா பகுதியில் விளையாடிக் கொண்டிருந்த பூஜாவைக் கடந்த வெள்ளிக்கிழமை முதல் காணவில்லை. அவர், விளையாடிய இடத்தை ஆய்வு செய்ததில் சிறுமி பாகிஸ்தான் எல்லைக்குள் சென்றுள்ளமை தெரிய வந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். அதைத் தொடர்ந்து எல்லைப் பாதுகாப்புப் படையினர், பாகிஸ்தான் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு தகவலைத் தெரிவித்துள்ளனர். இதேவேளை பூஜாவைத் தேடும் பணி இடம்பெற்று வருவதாக மாவட்ட ஆட்சியாளர் ஆர்த்தி டோக்ரா தெரிவித்தார்.

## விரைவில் அயோத்தியில் ராமர் கோயில் அமைக்குக

### ஆர்.எஸ்.எஸ்.வலியுறுத்து

அயோத்தியில் விரைவில் ராமர் கோயிலை அமைக்க வேண்டும் என்று ஆர்.எஸ். எஸ், இயக்கத் தலைவர் மோகன் பாகவத் வலியுறுத்தியுள்ளார்.

பா.ஜ.க. ஆட்சிமன்றக் குழுவில் நரேந்திர மோடி சேர்க்கப் பட்டுள்ள நிலையில், அகமதாபாத்தில் வி. எச்.பி. சார்பில் நடைபெற்ற இந்து சங்கம் என்ற புதிய அமைப்பின் ஆரம்ப நிகழ்வில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அயோத்தியில் விரைவில் பிரம்மாண்டமான ராமர் கோயி லைக் கட்ட வேண்டும். பாரதத்தில் நேர்மையான, உண்மையான இந்துக்களை உருவாக்க வேண் டும். எதிர்காலத்தில் உலகமே இந்துக்களைப் பின்பற்றப் போகிறது-என்றார். (வ)

## திருப்பதியில் இரவுநேர முக்கியஸ்தர் தரிசனம் ரத்து

திருப்பதியில் இரவு நேர முக்கியஸ்தர்களின் தரிசனம் ரத்துச் செய்யப் பட்டுள்ளது.

கோடைவிடுமுறையை யொட்டி பக்தர்கள் கூட்டம் அதிகரித்துள்ளது. கடந்த 3 தினங்களாக தொடர் அரச விடுமுறை என்பதால் லட்சத்துக்கும் அதிகமான பக்தர்கள் திரண்டனர். மேலும் முக்கியஸ்தர்களும் குவிந்ததால் சாதாரண பக்தர்கள் தரிசனம் செய்ய மணிக் கணக்கில் வரிசையில் காத்திருந்தனர்.

இதனால் அவர்கள் கோயில் ஊழியர்களுடன் வாக்குவாதத்தில் ஈடு பட்டனர். பக்தர்களைச் சமாளிப்பதில் தேவஸ் தானம் படாதபாடுபட்டது. நேற்று முன்தினம் காலை தொடக்கம் இரவு வரை 75ஆயிரம் பக்தர்கள் ஏழுமலையானைத் தரிசனம் செய்தனர்.

# மத்திய அரசை நீக்க ஹஸாரே ஆரம்பித்த 'ஜனதந்திர யாத்திரை'




-மத்தியில் ஆளும் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசை அகற்றுவதற்கான 'ஜனதந்திர யாத்திரை' என்ற பெயரில் சமூக ஆர்வலர் அன்னா ஹஸாரே சுற்றுப் பயணத்தை ஆரம்பித்தார்.

அரவிந்த் கெஜ்ரிவால் பிரிந்த பின்னர் 'ஜனதந்திர மோர்ச்சா' என்ற அமைப்பை உருவாக்கிய ஹஸாரே அந்த அமைப்புக்கு ஆதரவு திரட்டி வருகிறார். அவருடன் இராணுவ முன்னாள் தளபதி வி.கே. சிங்கும் இணைந்துள்ளார்.

இந்தநிலையில், 'ஜன தந்திர யாத்திரை' என்ற பெயரில் நாடு முழுவதும் சுற்றுப் பயணத்தை நேற்று முன்தினம் ஹஸாரே ஆரம் பித்தார். பஞ்சாபின் அமிர்தசரஸ் நகரில் உள்ள பொற்கோவில் மற்றும் துர்க்கா கோயிலில் வழிபாடு செய்த அவர், ஜாலியன் வாலாபாக் நினைவிடத்தில் இருந்து பேரணியை ஆரம்பித்தார். இதன் போது அவர் தெரிவித்ததாவது:-

மத்தியில் ஆளும் காங்கிரஸ் தலைமையிலான, ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசை அகற்றுவதற்காகவே இந்தப் பேரணியை ஆரம்பிக்கின்றேன். நாடு முழுவதும் ஏற்படும் விழிப்புணர்வு தான் ஊழலற்ற அரசை மத்தியில் அமைக்கும். லோக்சபா தேர்தலுக்கு இன்னும் குறைந்தளவு மாதங்களே உள்ளன.

. முதற்கட்டமாக, 5 மாதங்களின் பின் டில்லியில், மிகப்பெரிய பொதுக் கூட்டம் நடத்தப்படும். அந்தக் கூட்டம், இந்த ஊழல் அரசுக்கு முற்றுப் புள்ளி வைக்கும்- என்றார். (வ)

## அணு உலையிலிருந்து புகை போராட்டக்குழு முறைப்பாடு

கூடங்குளம் அணு உலையில் பயங்கர சத்தத்துடன் புகை வெளியேறி வருவதாக அணுசக்தி எதிர்ப்புப் போராட்டக் குழுவினர் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

கடந்த 3 தினங்களாக அணுமின் நிலைய நிர்வாகம் ஏதோ விஷப்பரீட்சை நடத்தி வருவதாகவும் போராட்டக் குழுவினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்ததாவது:-

கடுமையான சத்தத்துடன் புகையும் நாற்றமும் வெளியேறுவதால் மக்கள் அச்சத்துடன் உள்ளனர்.

கூடங்குளம் பகுதி மக்கள் கண் எரிச்சலால் அவதிப்படுகின்றனர். அணு மின் நிர்வாகத்தைக் கண்டித்து நாளை செட்டிக்குளம் அணு மின் நகரியம் முற்றுகையிடப்படும்.

அன்றைய தினம் திரு நெல்வேலி மாவட்ட மீன வர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லாமல் அணு உலை நிர்வாகத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பர்-என்றுள்ளது. (வ)


**சைவ வித்தியா விருத்திச் சங்கம் ஆண்டுப் பொதுக் கூட்ட அறிவித்தல்**

சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டம் 11.05.2013 அன்று நடைபெறும். யாப்பின் திருத்தப்பட்ட உறுப்புரை 05.09 இற்கமைய 2013 ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் உறுப்பினராகியோரும், தமது உறுப்புரிமையைப் புதுப்பித்தோருமே கூட்டத்தில் கலந்து கொள்ள உரித்துடையவராவர்.

பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்க வேண்டிய பிரேரணைகள் 15.04.2013 இக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

கலாசாலை வீதி, திருநெல்வேலி.. (C/8033) (10.6.7)

தி.செல்வமனோகரன் செயலாளர்.

**கண்ணீர் அஞ்சலி**



கரித்தாஸ் யாழ்ப்பாணம் கியூடெக் நிறுவனத்தின் ஊழியரான திருமதி றோகினி ஜெபரட்ணம் அவர்களின் அன்புத் தாய்

திருமதி பிலோமினம்மா நீக்கிலஸ்

அவர்களின் ஆன்மா சாந்தியடைய இதயம் நெகிழ்ந்து அஞ்சலிக்கின்றோம்.

இயக்குநரும் பணியாளர்களும் (C/8034) (6.7.2)

கரித்தாஸ் யாழ்ப்பாணம் - கியூடெக் யாழ்ப்பாணம்.

**தவறிவிட்டது**

வெளிப்புலன் கருவி ஒன்று புராடி லேனுக்கும் புங்கன் குளம் வீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (35563)(6.7.2)

தொடர்பு: 0779231151

**வீடும் காணியும் விற்பனைக்கு**

சாவகச்சேரி, பெருங்குளம் மட்டுவில் வீதி, கல்வயலில் வீட்டுடன் கூடிய 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0773013755 (சி/9238)(2.6.7)

**31ஆம் நாள் நினைவஞ்சலியும், அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்**



மலர்வு 10-02-1938

உதிர்வு 04-03-2013

அமரர் மகேஸ்வரி இராசையா

கடந்த 04.03.2013 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் பிரிவால் துயருற்றிருந்த போது பல வழிகளிலும் ஆறுதல் வழங்கியவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, நாளை (03.04.2013) புதன்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனைகளிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மத்தோனி, கரவெட்டி.

பிள்ளைகள்: கிரிஜா, உஷா, பாமா, ஸ்ரீதரன், நிஷா, ஆஷா, மருமக்கள்: மகேசன், திருவருட்செல்வன், ரதீஸ்குமார், நாராயணன், பேரப்பிள்ளைகள்.

# காப்பாற்றும் வல்லமை எமக்குண்டு

## அமெரிக்கா பெருமிதம்



நியூயோர்க், ஏப்.2

எம்மையும் எமது நட்பு நாடுகளையும் காப்பாற்றக் கூடிய வல்லமையுடனேயே அமெரிக்கா உள்ளது. அது குறித்து நாம் அலட்டிக் கொள்ளப் போவதில்லை. நாங்கள் அறிக்கை விடுவதை விடுத்து நடவடிக்கைகளில் இறங்கியுள்ளோம் - என்று தெரிவித்துள்ளது அமெரிக்கா.

வடகொரியா நேற்றுமுன்தினம் தென்கொரியா மீது போர் பிரகடனம் செய்தது. அத்துடன் நேற்று வட கொரிய எல்லையில் செயற்பட்டு வரும் தொழில் வளாகத்தை மூடப் போவதாக அறிவித்தது.

இது குறித்து அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு குழுவின் செய்தித் தொடர்பாளர் கைட்லின் ஹெய்டன் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர்மேலும்கூறியதாவது:-

''வடகொரியா வெளியிட்டு வரும் ஆக்கப்பூர்வமற்ற அறிக்கைகளை நாங்கள் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறோம். அந்த அச்சுறுத்தல்களைத் தீவிரம் மிக்கதாகவே கருதுகிறோம். எங்களையும் நட்பு நாடுகளையும் காப்பாற்றும் திறன் எங்களுக்கு உள்ளது. நாங்கள் பதில் அறிக்கை விடுவதை நிறுத்தி, வடகொரியாவின் அச் சுறுத்தல்களை எதிர்க்க தேவையான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டுள்ளோம்''- என்றார்.

இதேவேளை, வடகொரியா நெருப்போடு விளையாடுகின்றது என்று தெரிவித்துள்ளது ஜேர்மனி.

வடகொரியா ஐ.நா.வுடன் இணைந்து செயற்படாவிட்டால் ஜேர்மனி வடகொரியாவுடன் சேர்ந்து செயற்பட்ட அணுசக்தி திட்டத்தைத் தகர்த்தெறிய நேரிடும் என்றும் எச்சரித்துள்ளது. (ற)

# தலிபான்கள் மீது தாக்க விடமாட்டேன்

## -இம்ரான்கான்

இஸ்லாமாபாத், ஏப்.2

நான் ஆட்சிக்கு வந்தால் தலிபான்கள் மீது அமெரிக்கா நடத்தும் தாக்குதல்களைத் தடுத்து நிறுத்துவேன் - என்று முன்னாள் கிரிக்கெட் வீரரும், தெக் ரிக்-இ-இன்சாப் கட்சியில் தேர்தலில் போட்டியிடுபவருமான இம்ரான்கான் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மே மாதம் 11ஆம் திகதி பாகிஸ்தானில் பொதுத்தேர்தல் நடைபெறவிருக்கிறது. அதையொட்டி அங்கு தேர்தல் பிரச்சாரப் பணிகள் தற்போதே ஆரம்பமாகிவிட்டன. இம்ரான்கான் போட்டியிடும் பாகிஸ்தான் தக் ரிக்-இ-இன்சாப் கட்சி சார்பில் கைபர் மாகாணத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட மக்கள் கூட்டத்திலேயே இம்ரான்கான் இவ்வாறு கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் அங்கு கூறியதாவது:-

''கைபர் பக்துன்கவா மற்றும் மலைவாழ் மக்கள் வாழும் பகுதிகளில் அமைதி நிலவ வேண்டும். தீவிரவாதத்தை ஒழிக்க அவர்கள் மீது தாக்குதல் நடத்துவது தீர்வாகாது. தீவிரவாதிகளுடன் அரசு அமைதி பேச்சுக்களை நடத்த வேண்டும். இதன் மூலம் அரசியல் ரீதியாக தீர்வு காண வேண்டும். இவ்வாறு கூறுவதால் என்னை தலிபான்கான் என்றும் அழைக்கிறார்கள். எனினும் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தலிபான்கள் மீது அமெரிக்கா நடத்தும் தாக்குதல்களை நிறுத்துவோம்'' - என்றார். (ற)

# மும்பை குண்டு வெடிப்பு வழக்கு 7 பேருக்கு அழைப்பாணை

இஸ்லாமாபாத், ஏப்.2

இந்தியாவின் மும்பை நகரில் 2008ஆம் ஆண்டு நடைபெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்துடன் தொடர்புடைய 7 பேருக்கு பாகிஸ்தான் தீவிரவாத தடுப்பு நீதிமன்றம் அழைப்பாணை விடுத்துள்ளது.

தாக்குதல் சம்பவத்துக்கு படகு மற்றும் படகு இயந்திரங்களைக் கொடுத்து உதவினார்கள் என்ற சந்தேகத்தின் பேரிலேயே அவர்களுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணை அடிலாபாத் சிறையில் நேற்று நடைபெற்றது. விசாரணைகளின் முடிவில் 7 பேருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டது.

''சாட்சிக்கு அழைக்கப்பட்டவர்களிடமிருந்து, குற்றம் சாட்டப்பட்டவர்கள் படகு, இன்ஜின் மற்றும் தகவல் தொடர்பு கருவிகளை வாங்கியுள்ளனர். மும்பையில் 4 சாட்சிகளிடம் நடக்கும் விசாரணையை பாகிஸ்தான் நீதித்துறை குழுவினர் பதிவு செய்யவும், குறுக்கு விசாரணை நடத்தவும் அனுமதிக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கு இந்தியா எந்தப் பதிலும் தெரிவிக்கவில்லை. ஏற்கனவே இந்த வழக்கு விசாரணை மிகவும் தாமதமாகியுள்ளது. எனவே தொடர்ச்சியாக இந்த வழக்கை விசாரித்து முடிக்குமாறு நீதிபதியிடம் மனு அளிக்கப்பட்டுள்ளது''- என்று தெரிவித்தார் அரச தரப்பு சட்டத்தரணி.(ற)




லத்தீன் அமெரிக்கா மற்றும் வட அமெரிக்காவில் ஈஸ்டர் திருநாளை முன்னிட்டு குதிரை அடக்கும் வீரர்களுக்கான (கௌவ் போய்) போட்டிகள் நடைபெறுவது வழமை. ஈஸ்டரை முன்னிட்டு கடந்தவாரம் பிரேஸிலில் குதிரை அடக்கும் வீரர்களுக்கான போட்டி ஒன்று நடைபெற்றது. முரட்டுத்தனமான குதிரைகளை அடக்கி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருபவரே வெற்றிபெற்றவராக அறிவிக்கப்படுவார். குதிரையை அடக்கிய ஒருவர் அதற்கான சமிக்ஞையைக் காட்டுகிறார்

# வறட்சிக்கு எதிரான மாநாட்டிலிருந்து கனடா விலகுவது கவலைக்குரியது

## ஐக்கிய நாடுகள் சபை தெரிவிப்பு

ஜெனிவா, ஏப். 2

வறட்சிக்கு எதிராகப் போராடும், சர்வதேச மாநாட்டிலிருந்து கனடா விலகுவது வருத்தம் தருகிறது என்று ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.

ஆபிரிக்காவிலும், ஏனைய பல நாடுகளிலும் நிலவும் வறட்சிக்கு எதிராகச் செயற்படுகின்ற ஐக்கிய நாடுகள் மாநாட்டிலிருந்து கனடா விலகிக் கொள்வதாக அந்நாட்டின் பிரதமர் ஸ்ரீபன் ஹுப்பர் நேற்று அறி வித்தார்.

இந்த மாநாட்டிற்கென அரசாங்கம் வருடந்தோறும் வழங்கும் 3 லட்சத்து ஐம்பதாயிரம் டொலரில் ஐந்தில் ஒரு பகுதியே நிகழ்ச்சித் திட்டங்களுக்கென செலவழிக்கப்படுவதை ஸ்ரீபன் ஹுப்பர்சுட்டிக்காட்டியிருந்தார்.

இது குறித்து மாநாட்டு செயலகம் வெளியிட்ட குறிப்பில்,

இந்த வருடம் மாநாடு முன்னர் ஒருபோதும் இல்லாத அளவிற்கு வலுவாக செயற்படும். இந்த நிலையில் அதிலிருந்து விலக கனடா எடுத்த முடிவு வருத்தமளிக்கிறது - என்று குறிப்பிட்டுள்ளது. (ற)

# சிரியாவில் அமைதி ஏற்பட வேண்டும்

## ஈஸ்ரர் உரையில் பாப்பரசர்

வத்திக்கான், ஏப்.2

சிரியாவில் அமைதி ஏற்பட வேண்டும் என்று தனது ஈஸ்ரர் செய்தியில் தெரிவித்துள்ளார் பாப்பரசர் முதலாவது பிரான்ஸிஸ்.

வத்திக்கான் நகரில் புனித பீற்றர் சதுக்கத்தில் உள்ள தேவாலயத்தில் நடந்த ஈஸ்டர் சிறப்புப் பிரார்த்தனையின் போதே பாப்பரசர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

''கடவுள் நம்பிக்கை அற்றவர்களும், கத்தோலிக்க பிரிவில் இருந்து வெளியேறியவர்களும், கடவுள் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். தன்னிடம் வருபவர்களுக்காக, இயேசு இரு கரங்களையும் விரித்து காத்திருக்கிறார். மக்கள் மனம் தளரக்கூடாது. சிரியா மற்றும் கொரியா தீபகற்பப் பகுதியில் அமைதி திரும்ப வேண்டும்''- என்று தனது பிரார்த்தனையில் அவர் குறிப் பிட்டார்.



இதேவேளை, இயேசு பிறந்த இடமான பெத்லஹேமிலும், இயேசு சிலுவையில் அறையப்பட்டு பின்னர் புதைக்கப்பட்ட இடமாகக் கருதப்படும் கோர்டன் டோம்ப் பகுதியிலும் ஈஸ்ரர் சிறப்புப் பிரார்த்தனைகள் நடைபெற்றன. (ற)

# ஹெலி விபத்து:

## தென்னாபிரிக்காவில் 5 இராணுவத்தினர் சாவு

கேப்டவுன், ஏப்.2

தென்னாபிரிக்காவில் இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தில் 5 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். குருகெர் தேசிய பூங்காவில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்த ஹெலியே விபத்தில் சிக்கியது.

குருகெர் தேசியப் பூங்கா பகுதியில் காண்டாமிருகங்களின் கொம்புகள் களவாடப்படுகின்றன. அவற்றைத் தடுக்கும் நோக்கிலேயே ஹெலிகள் மூலம் அரசு அந்தப் பகுதியைக் கண்காணித்து வருகின்றது.

நேற்றுமுன்தினம் இரவு வழமையான பறப்பை மேற்கொண்டிருந்த ஹெலி வீழ்ந்து நொருங்கியது. அதில் பயணம் செய்த 5 இராணுவ வீரர்களும் உயிரிழந்தனர்.

விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை என்று தெரிவித்துள்ள பொலிஸார், அதுகுறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ற)

# 2015ஆம் ஆண்டுவரையும் அசாஞ்சேக்கு விடிவில்லை?

லண்டன், ஏப்.2

லண்டனில் உள்ள ஈக்குவடோர் தூதரகத்தில் தஞ்சம் அடைந்துள்ள விக்கிலீக்ஸ் இணையத்தள நிறுவுநர் ஜூலியன் அசாஞ்சே, 2015ஆம் ஆண்டுக்கு முன் பிரிட்டனை விட்டு வெளியேற முடியாது போகலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

தூதரகத்தை விட்டு வெளியே வரும் பட்சத்தில் கைது செய்யப்படமாட்டார் என்று பிரிட்டனின் ஆளும் கன்சர்வேட்டிவ் கூட்டணி அரசு உத்தரவாதம் தரும் பட்சத்திலேயே அசாஞ்சே அங்கிருந்து வெளியேற முடியும். எனினும் அதற்கான சாத்தியங்கள் மிகக் குறைவே என்று கூறப்படுகிறது.

இந்தநிலையில் எதிர்வரும் 2015ஆம் ஆண்டு பிரிட்டனில் தேர்தல் நடைபெற்று எதிர்க் கட்சியான தொழிலாளர் கட்சி ஆட்சிக்கு வந்தால் மட்டுமே அசாஞ்சேக்கு விடிவு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கான முயற்சிகளில் ஈக்குவடோ அரசு கவனம் செலுத்தி வருவதாக லண்டனில் தகவல் வெளியாகியுள்ளது.

இதுகுறித்து தொழிலாளர் கட்சி செய்தி தொடர்பாளர் கூறுகையில், அசாஞ்சே குறித்து இதுவரை யாருடனும் பேசப்படவில்லை. ஆனால் ஈக்குவடோ அரசு பிரதிநிதிகளுடன் விரைவில் பேசப்படும் - என்று தெரிவித்தார். (ற)

# கட்டடம் இடிந்து வீழ்ந்து 20 பேர் சாவு

டோடோமா, ஏப்.2

தான்சானியாவில் புதிதாக கட்டப்பட்டு வந்த 16 மாடி கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் மாணவர்கள் உட்பட 20 பேர் உயிரிழந்தனர்.

பல அடுக்குகள் கொண்ட இந்தக் கட்டடத்தில் தற்போது 16 தளங்கள் கட்டி முடிக்கப்பட்டிருந்த நிலையில் கட்டடம் திடீரென இடிந்து விழுந்தது.

இடிபாடுகளில் கட்டடத் தொழிலாளிகளும், அங்கு செயற்பட்டு வந்த, இஸ்லாமிய வகுப்பு மாணவ, மாணவியருமே சிக்கிக் கொண்டனர் என்று கூறப்படுகிறது.

மீட்புப் பணிகள் இடம் பெறுவதுடன் விபத்துக் குறித்து விசாரணைகள் மேற்கொண்டுவருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ற)

# பிரான்ஸில் தீ விபத்து; 5 சிறுவர்கள் சாவு

பரிஸ், ஏப்.2

பிரான்ஸின் வடபகுதியில் வீடு ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 5 சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர்.

வீட்டில் தீப்பிடித்த சந்தர்ப்பத்தில், குறித்த சிறுவர்களும் அவர்களின் தந்தையும் தீக்குள் சிக்கிக் கொண்டனர். எனினும், சிறியளவான எரிகாயங்களுடன் சிறுவர்களின் தந்தை உயிர் தப்பியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மீட்புப் பணியாளர்களின் பலத்த போராட்டத்தின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. உயிரிழந்த சிறுவர்களின் சடலங்கள் மீட்கப்பட்டதுடன் பிரேதப் பரிசோதனைகளுக்காக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது. (ற)

# உள்ளூர் விமான நிலையங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

கொழும்பு, ஏப். 2

உள்ளூர் விமான நிலையங்களை அபிவிருத்தி செய்வதற்கு விமான சேவைகள் அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இந்த அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், இரத்மலானை, அம்பாறை, கொக்கலை, சீனத்துறைமுகம் மற்றும் பலாலி ஆகிய விமான நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்பட வுள்ளன. இந்த விமான நிலையங்கள் நகர்ப்புற விமான நிலையங்களாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் மூலம் உல்லாசப் பயணிகளை குழுக்களாக ஏற்றிவரும் விமானங்கள் தொடர்பான வர்த்தகச் சந்தையை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

விமான நிலையங்களில் அபிவிருத்திச் செயற்பாட்டால் பொருள், பண்டங்களை எடுத்துச் செல்லவும் வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-22)

# வீதி ஓரத்தில் சிசு மீட்பு



கொழும்பு,ஏப்.2

வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வட்டவளை பிரதேசத்தின் வீதி ஓரமாக கிடந்த சிசு ஒன்றை பொலிஸார் உயிருடன் மீட்டுள்ளனர்.

வீதியோரத்தில் சிசு ஒன்று கைவிடப்பட்டு இருந்தமை நேற்று திங்கட்கிழமை காலை பாடசாலைக்குச் சென்ற மாணவர்களால் இனங் காணப்பட்டதுடன் அதுகுறித்து பொதுமக்களால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து சிசு உயிருடன் மீட்கப்பட்டு வட்டவளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது என்று வட்டவளை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த சிசு துணியால் சுற்றப்பட்டு காணப்பட்டதாக பொலிஸார் கூறினர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## அரச ஊழியர்களுக்கான காணி விவகாரம்:

# எதற்கும் தயார்; நானும் தயார் வவுனியா அதிகாரிகள் சவால்

யாழ்ப்பாணம் , ஏப். 02

வவுனியா பிரதேச செயலர் உண்மைக்குப் புறம்பான விடயங்களைத் தெரிவித்து தப்பிக்க முயல்கிறார் எனவும், அவர் சட்டரீதியாக எடுக்கும் எந்த நடவடிக்கைகளையும் எதிர் கொள்ளத் தயாராக இருக்கிறார் எனவும் வவுனியா மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் அரச ஊழியர்களுக்கு காணி வழங்குவது தொடர்பில் தனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து வவுனியா மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் சு.கருணாநிதி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்திருந்தார்.

இவரது முறைப்பாடு தொடர்பில் வவுனியாப் பிரதேச செயலர் ஏ.சிவபாதசுந்தரன், கருணாநிதியின் குற்றச்சாட்டுக்களை மறுத்ததுடன், அவர் உண்மைக்குப் புறம்பான விடயங்களைத் தெரிவிப்பது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்போகிறார் எனவும் தெரிவித்திருந்தார்.

பிரதேச செயலரின் மறுப்புக ளுக்கு, உதவித்தேர்தல்கள் ஆணையாளர் சு.கருணாநிதி மீளவும் பதிலளித்துள்ளார்.

விண்ணப்பப் படிவம் ஒப்படைத்ததாகவும் அது உரியமுறையில் பூரணப் படுத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கும் பிரதேச செயலர் மோசடி நடவடிக் கைகளை மறைக்க முற்படுகின்றார். விண்ணப்பம் முறையற்றதாயின் எப்படி என்னை காணிக் கச்சேரிக்கு பிரதேச செயலர் அழைத் தார்?

காணிக் கச்சேரி நடத் தப்பட்டபோது நான் வவுனியாவில் வசிக்கவில்லை என்று தெரிவித்ததானது, பிரதேச செயலரின் இரண்டாவது கூற்று.

காணிக்கச்சேரி அழைப்புக் கடிதம் எனது முகவரிக்கு பிரதேச செயலரினால் அனுப்பப்பட்டுள்ளது. 1993 ஆம் ஆண்டிலிருந்து நான் வவுனியாவிலேயே வசித்து வருகிறேன். எனது ஆதாரங்கள் சமர்ப்பிக்கப் பட்டே எனது பெயர் தெரிவுப் பட்டியலில் இடம்பெற்றது.

வவுனியா மாவட்டத்தில் கடமையாற்றாதவர்களுக்கும், வவுனியாவில் வசிக்காதவர்களுக்கும் பிரதேச செயலரினால் காணி வழங்கப்பட்டுள்ளது.

மோசடி மறைப்பின் மூன்றாவது கருத்தாக, காணிக் கச்சேரிக்கு நான் சமுகமளிக்கவில்லை என்று தெரிவித்திருக்கிறார். இதுவும் பொய்யானது.

காணிக் கச்சேரிக்கு நான் செல்லவில்லை என்றால், எனது பெயர் எவ்வாறு தெரிவுப்பட்டியலில் இடம்பெற்றது.- என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் வவுனியா மாவட்ட பிரதேச செயலரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது, நான் அவருடன் பத்திரிகை வாயிலாக மோத விரும்பவில்லை. திணைக்கள ரீதியாக அவரைச் சந்திக்கின் றேன். அதனைவிட நீதிமன்றில் நான் அவரை எதிர் கொள்வேன்- என்றார். (ஒ-5)

60ஆவது பிறந்த தின வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்



திருமதி
திருக்குமாரி கணேசலிங்கம்
(ஆசிரியர் S.L.T.S-I)

சேவை விவரம்

| | |
|---|---|
| யா/ கன்வியர்மடம் த.ம.வி | 07.03.1979-01.05.1979 |
| யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி | 02.05.1979-15.01.1981 |
| யா/ உரும்பிராய் இந்துக்கல்லூரி | 16.01.1981-20.04.1982 |
| யா/ பலாலி சித்திவிநாயகர் வித்தியாலயம் | 21.04.1982-31.12.1982 |
| யா/ பலாலி ஆசிரியர் கலாசாலை | 01.01.1983-31.12.1984 |
| மன்/கருங்கண்டல் றோ.க.த.க பாடசாலை | 01.01.1985-31.11.1985 |
| கிளி/கனகபுரம் அ.த.க பாடசாலை | 01.12.1985-15.03.1990 |
| யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம் | 16.03.1990-01.04.2013 |

இன்று (02.04.2013) செவ்வாய்க்கிழமை ஓய்வு பெறும் தங்களை கற்பகவிநாயகர் அருளால் ஓய்வுக் காலத்தில் சிறப்புக்கள் பெற்றோங்க வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/உரும்பிராய் சைவத்தமிழ்
வித்தியாலயம்.
(c/6777)(10,6)

சங்கானையில் அலுவலக கட்டடம் தேவை
குத்தகைக்கு அல்லது வாடகைக்கு

ஆகக் குறைந்தது 1,800 சதுர அடி நிலத் தளத்தையும், வீதியை நோக்கியதாக 30 அடி அகலமான வாகன தரிப் பிடத்தையும் கொண்ட 3,000 தொடக்கம் 4,000 சதுர அடி பரப்பளவைக் கொண்ட வர்த்தக கட்டடமொன்று சங்கானை நகரத்தில் தேவைப் படுகின்றது.

தயவு செய்து பின்வரும் விவரங்களையும் விலையையும் கொண்ட விண்ணப்பத்தை, கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "குத்தகைக்கு அல்லது வாடகைக்கு கட்டடம்- சங்கானை" என்று குறிப்பிட்டு கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு 2013.04.1 9 ஆம் திகதி பி.ப 4.00 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக் கவும்.

1. தொடர்பு விவரங்கள்
2. தள வரைபடம்

உதவிப் பொது முகாமையாளர்
(ஆதனங்களும் சேவைகளும்) கொமர்ஷல் வங்கி,
21, சேர் ரசீக் பரீட் மாவத்தை, கொழும்பு-01
தொ.பே -011 248 6236
தொலைநகல்-011 234 1313 (c/7381) (6.7.11)

Study in MALAYSIA
மலேசியாவில் உயர்கல்வி

மலேசிய அரசாங்கத்தினால் அங்கீகரிக்கபட்ட SAL COLLEGE இனால் நடத்தப்படும்

HOTEL MANAGEMENT & CATERING FACULTY
Pastry Certificate Course - 1 Year

- 8 மாதங்கள் "3 Star" Hotel களில் பயிற்சி. மாதாந்த பயிற்சி ஊதியம் வழங்கப்படும்.
- பாடக்கட்டணம் visa பெற்ற பின் செலுத்தமுடியும்.
- IELTS தேவையில்லை.
- course முடிவின் பின் மலேசியாவில் வேலை பெறுவதற்கான தகைமை.
- மேற்படிப்பிற்காக UK, USA, CANADA, AUSTRALIA, NEW ZEALAND ஆகிய நாடுகளிற்கு transfer பெறமுடியும்.
- தகைமை:கணிதம், ஆங்கிலம் உட்பட O/L சித்தி.

ஏப்ரல் 3ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் சந்திக்கமுடியும்.

Call : 0777-767818

Mr. Jude James
Scholars Information Center
# 01, Vaverset Place, Wellawatte,
Colombo 06.
(35457)(6.7) (35457)(6.7.11)

மணிவிழாக் காணும் ஆசிரியர்
திருமதி திருக்குமாரி கணேசலிங்கம் அவர்களை
பாராட்டி வாழ்த்துகிறோம்



07.03.1979 தொடக்கம்
நல்ல ஆசிரியையாக முப்பத்து நான்கு ஆண்டுகள் கணிதத்துறையில் தன்னாலான ஆசிரியப் பணியை நல்கி 01.04.2013 இல் ஓய்வு பெறும் ஆசிரியை அவர்கள் தனது பணிக்காலத்தில் இருபத்து மூன்று ஆண்டுகள் யா/உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் நல்ல ஆசிரியையாகவும், அபிவிருத்திச் சபை உறுப்பினராகவும் சிறப்பான பணியை வழங்கி ஓய்வுபெறுகிறார். நாயகி தனது ஓய்வுக்காலத்தில் தேகாரோக்கியம் உடையவராகப் பல்வேறு சிறப்புக்களையும், நீண்ட ஆயுளையும் பெற்று இன்புற்று வாழ எல்லாம் வல்ல கற்பக விநாயகரின் திருவடிகளைப் பிரார்த்தித்து இறையருளை வேண்டி மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துபவர்கள்:- சகோதர, சகோதரிகள், மைத்துனர்கள், மைத்துனிகள்.
"சிவபதி", உரும்பிராய் வடக்கு, உரும்பிராய். T.P.021 321 7840
(8551)(8-6-7)

# பெண்கள் பிரச்சினையைத் தீர்க்க அமைச்சுகளில் விசேட அதிகாரிகள்

## சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சு தகவல்

கொழும்பு,ஏப்.2

பெண்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கில் அனைத்து அமைச்சுகளிலும் விசேட அதிகாரியொருவரை நியமிக்க சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

பணிபுரியும் அலுவலகங்களிலோ அல்லது வீடுகளிலோ பெண்கள், தாம் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வை குறித்த அதிகாரியூடாக பெற்றுக் கொள்ள முடியும் என்று அமைச்சின் மேலதிக செயலர் அசோக்க அலவத்த தெரிவித்தார்.

சிறுவர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கான தீர்வையும் அந்த அதிகாரியூடாக பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தி கொடுக்கப்படவுள்ளன என்று அவர் கூறினார்.

பெண்கள் பணிபுரிகின்ற இடங்களில் துஷ்பிரயோகம் மற்றும் உளரீதியில் பாதிக்கப்படுவதாக தகவல் கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எனினும் அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற்றுக் கொடுக்க உரிய நடைமுறைகள் இல்லாமையினால், பெண்கள் பல்வேறு பிரச்சினைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# ரயில் கட்டணங்கள் 40 வீதத்தால் உயர்வு

கொழும்பு,ஏப்.2

நகரங்களுக்கிடையிலான கடுகதி மற்றும் தபால் ரயில் சேவைக் கட்டணங்கள் 40 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன. அதற்கமைய நான்கு பிரிவுகளின் அடிப்படையில் இந்த கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன என்று ரயில்வே சேவைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

மூன்றாம்தர வகுப்புக்கான கட்டணங்கள் 150 ரூபாவிலிருந்து 180 ரூபாவாகவும், 220 ரூபாவிலிருந்து 280 ரூபாவாகவும், 270 ரூபாவிலிருந்து 320 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன. இரண்டாந்தர வகுப்புக்கான ஒதுக்கப்பட்ட ஆசனக் கட்டணங்கள் 220 ரூபாவிலிருந்து 280 ரூபாவாகவும் 380 ரூபாவிலிருந்து 450 ரூபாவாகவும் 450 ரூபாவிலிருந்து 500 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் முதற்தர வகுப்புக்கான கட்டணம் 750 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

பார்வையாளர் பிரிவுக்கான கட்டணம் 880 ரூபாவிலிருந்து ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளது.(ச)

## நினைவகலா முதலாமாண்டு



உருவாய்:
26.06.1958

அருவாய்:
14.03.2012

திருமதி
**மகாதேவன் பரமேஸ்வரி**

உங்களை உருக்கி எங்கள் வாழ்வில்
வசந்த காலத்தை உருவாக்கினீர்கள் !
உங்கள் அன்பெனும் மழையால்
நாங்கள் செழித்துவளர்ந்தோம்!
இன்று நீங்களில்லைஅன்பில்லாத்
துயருக்குள் துவழுகின்றோம்
உங்கள் அன்பை நினைத்து வாடுகின்றோம்
வானிலிருந்து வழி காட்டுங்கள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கைதடி நுணாவில்
சாவகச்சேரி.
(35514) (7.6.11)
குடும்பத்தினர்.

# மரக்கறிகள் கொள்வனவில் அரசு

## விலை வீழ்ச்சியை அடுத்து நடவடிக்கை

கொழும்பு,ஏப்.2

தம்புள்ளை பொருளாதார வர்த்தக நிலையத்தில் கடந்த மூன்று நாள்களாக சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரம் கிலோவுக்கும் அதிகமான மரக்கறிகள் குப்பையில் கொட்டப்பட்டு வீணாக்கப்பட்டன.

அதன் பின்னர் நேற்றுமுன்தினம் முதல் அவற்றைக் கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகின்றது.

மரக்கறிகளின் விலை வீழ்ச்சி மற்றும் அவற்றைக் கொழும்புக்கு ஏற்றுமதி செய்தல் போன்ற பிரச்சினைகளை மரக்கறி உற்பத்தியாளர்கள் கடந்த சில நாள்களாக எதிர்நோக்கினர்.

இந்தநிலையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனைக்கமைய குறித்த மரக்கறி உற்பத்தியாளர்களிடமிருந்து மரக்கறிகளைக் கொள்வனவு செய்ய அரசு தீர்மானித்துள்ளது.

இதற்கமைய ஒரு கிலோ ஐந்து ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கெனக் கொண்டுவரப்பட்ட வெள்ளரிக்காயை 10 - 15 ரூபாவுக்கு அரசு



கொள்வனவு செய்ததுள்ளது.

ஒரு கிலோ 15 ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கெனக் கொண்டுவரப்பட்ட பூசணிக்காயை 25 ரூபாவுக்கும், ஒரு கிலோ 10 - 15 ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கெனக் கொண்டுவரப்பட்ட கத்தரிக்காயை 30 ரூபாவுக்கும் அரசு கொள்வனவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

# சிவப்பு அறிவித்தல் பட்டியலுக்கு மேலதிக கட்டணங்கள் குறைப்பு

## மக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.2

சிவப்பு அறிவித்தல் அனுப்பப்பட்ட மின்சார பட்டியலுக்கு இலங்கை மின்சார சபை அறவிடும் மேலதிக கட்டணத்தை குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று மக்கள் பயன்பாட்டு ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதன் பின்னர் பட்டியலுக்கு அறவிடப்படும் கட்டணத்தை ரத்துச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இவ்வாறான மின்சார பட்டியலுக்கு அறவிடப்படும் 2 வீத அபராதத் தொகை 1.24 வீதமாக குறைக்கப்பட்டுள்ளது என்று ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தஅறிக்கையில்மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

நிதிச் சந்தையில் மேற் கொள்ளப்படும் மதிப்பீடுகளுக்கு அமைய எதிர்வரும் காலங்களில் குறித்த அபராதத் தொகையை அறவிடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. பட்டியலுக்கு கட்டணம் செலுத்துவதற்காக வீட்டுப் பாவனையாளர்களுக்கு 30 தினங்களும், தொழிற்சாலை, ஹோட்டல் மற்றும் அரச நிறுவனங்களின் பாவனையாளர்களுக்கு 15 தினங்களும் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அந்தக் கால அவகாசம் கடந்ததன் பின்னரே அபராதம் விதிக்கப்படும்.

- இதேவேளை பாவனையாளர்களின் முறைப்பாடுகளை கருத்திற்கொண்டு மின் இணைப்பு துண்டிக்கப்பட்டதன் பின்னர் அதற்காக அறவிடப்படும் அபராதத் தொகை இரத்துச் செய்யப்படவுள்ளது. மின்சாரக் கட்டணத் திருத்தம் தொடர்பில் பொது மக்களிடம் கருத்துக்களை கேட்கும் நடவடிக்கை எதிர்வரும் 7 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# பவுசரில் எரிபொருள் திருடிய சாரதி கைது

கொழும்பு,ஏப்.2

எரிபொருள் விநியோகிக்கும் பவுசர் ஒன்றிலிருந்து எரிபொருளைத் திருடி விற்பனை செய்த அதன் சாரதியும், நடத்துநரும் புத்தளம், முந்தல் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இந்த எரிபொருள் பவுசரிலிருந்து டீசல் திருடப்பட்டுக் கொண்டிருந்தபோதே அவர்கள் கையும் மெய்யுமாகப் பிடிபட்டனர். கொல்லாவையிலிருந்து புத்தளத்திலுள்ள தனியார் மின் உற்பத்தி நிலையத்துக்கு எரிபொருள்களை எடுத்துச்சென்று கொண்டிருந்த போதே அவர்கள் இந்தத் திருட்டில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
25★02★1951

மறைவு
03★03★2013



அமரர்
**சின்னத்தம்பி சிதம்பரப்பிள்ளை**

நாள்கள் முப்பத்தொன்று கழிந்தாலும்
ஆண்டவன் பாதம் நீங்கள் சென்று
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
ஆறிடுமா எம் துயரம்

கடந்த 03.03.2013 இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்தியம் இன்று (02.04.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்

61/9, மில் லேன், பிரம்படி,
கொக்குவில்.
(35495)(10.6.7)
குடும்பத்தினர்.

## கடை வாடகைக்கு

இல.08, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்த 40×19 சதுர அடி கொண்ட மாபிள் பதித்த கடை வாடகைக்கும் ✱லைற் இஞ்சின் விற்பனைக்கும் உண்டு.

தொடர்பு: 077 563 2526

(34946)(6.7.11)

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
01★09★1948

உதிர்வு
05★03★2013



அமரர்
ஆசிரியமணி **நல்லதம்பி இராஜதுரை**

கடந்த 05.03.2013 இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர் நல்லதம்பி இராஜதுரை அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து நேரில் வந்து அனுதாபம் தெரிவித்தோருக்கும், வெளிநாட்டிலிருந்து தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரங்கள், மலர் வளையங்கள் மூலம் துயர் பகிர்ந்தோருக்கும் மற்றும் பல வழிகளில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (02.04.2013) செவ்வாய்க்கிழமை கீரிமலையில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும், (04.04.2013) வியாழக்கிழமை மு.ப. 11 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

7ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.
குடும்பத்தினர்.

# யூனியன் அஷ்யூரன்ஸ் அறிமுகப்படுத்தும்
# உங்கள் குடும்பத்துக்கான பாதுகாப்பு

குடும்பங்கள் தங்களது சுகாதாரப் பராமரிப்பைச் சாதகமான முறையில் நிர்வகிப்பதற்காக அனைத்து நன்மைகளையும் உள்ளடக்கிய ஒரு சுகநல காப்புறுதியை அறிமுகப்படுத் துவதன் மூலம் யூனியன் அஷ்யூரன்ஸ் சுகாதார காப்புறுதியில் சவாலாக இருந்த தடையை அகற்றியுள்ளது. உயர்ந்துவரும் வாழ்க்கைத் தரங்களுக்கு ஏற்ப தரமான வைத்திய சிகிச்சைகள் மற்றும் சுகாதாரப் பராமரிப்பை வேண்டிநிற்கும் பெரும்பாலான இலங்கை மக்களுக்கு சுகாதார பராமரிப்புச் செலவுகளின் அதிகரிப்பும் அவற்றுக்குச் செலவிடுவதற்கான இயலுமைக் குறைபாடும் தொடர்ந்து அதிகரித்துவரும் ஒரு சுமையாகிவிட்டது. மேம்பட்ட சுகாதாரப் பராமரிப்பும் மற்றும் நவீன சிகிச்சை முறைகளும் தற்போது எமது நாட்டில் பெறக்கூடியதாக இருக்கின்றபோதும், அதி உயர் செலவுகள் காரணமாக மிகச் சிலரே அதற்கான வசதியை உடையவர்களாக இருக்கின்றனர்.

பல அபிவிருத்தியடைந்த நாடுகள் எதிர்பாராது ஏற்படும் வைத்தியச் செலவினங்களிலிருந்து தமது குடிமக்களைப் பாதுகாக்கும் கட்டாயமான கொள்கைகளைக் கடைப்பிடிக்கின்றன. இவ்வாறான தேவை பரந்துபட்ட சந்தை ஆய்வுகள் மூலம் யூனியன் அஷ்யூரன்ஸினாலும் கண்டுபிடிக்கப்பட்டதன் பெறுபேறாக, ஒரு முழுமையான வைத்தியச் செலவு மீள் வழங்கல் சாருரை அனுகூலமாக உள்ளதும் காப்புறுதிதாரரினால் ''யூனியன் லைவ் அட்வாண்டேஜ்''(Union Life Advantage) காப்புறுதித் திட்டங்களில் சேர்க்கப்பட கூடியதுமாக ''யூனியன் மெடி கார்ட்'' திட்டத்தின் வடிவமைப்பும் அபிவிருத்தியும் அமைந்துள்ளது.

யூனியன் மெடிகார்ட், சாதாரண காய்ச்சல் தொடக்கம் பாரிய நோய் வரையான பல்வேறு நோய்களுக்காகவும், அறுவைச் சிகிச்சைகளுக்காகவும் காப்புறுதிதாரர்களுக்குப் பாதுகாப்பு வழங்குகிறது. இந்த உற்பத்தி பிரதான காப்புறுதிதாரர், வாழ்க்கைத்துணை மற்றும் ஐந்து பிள்ளைகளுக்கும் பாதுகாப்பை வழங்கு வதுடன் இவ்வாறு ஒருவருக்கு வருடத்துக்கு ரூபா 500,000 வரையும், ஒப்பந்த முழுக்காலத் தில் ஒருவருக்கு ரூபா 2,500,000 வரையும் வைத்தியச் செலவை வழங்குகிறது. இந்தச் சேவை, மருத்துவமனை பண அனுகூலம், இயலாமை அனுகூலங்கள் மற்றும் தீவிர நோய்களுக்கான அனுகூலங்கள் ஆகியவற்றுடன் ஒப்பந்த முழுக்காலத்துக்கும் ஆயுள் காப்பீட்டை வழங்கும் ஒரு யூனியன் லைவ் அட்வாண்டேஜ் ஒப்பந்தத்தை உள்ளடக்கியத ாகும்.

யூனியன் மெடிகார்ட், 136 வகையான நாள் பராமரிப்பு அறுவைச் சிகிச்சை நடைமுறைகளுக்கு(Day-Care Surgical Procedures) காப்பீடு வழங்குவதுடன், தாதிச்சேவை மற்றும் அறைக்கட்டணங்கள், வைத்தியர் மற்றும் வைத்திய ஆலோசகர் கட்டணங்கள், அதிதீவிர சிகிச்சைப் பிரிவு செலவுகள் மற்றும் அறுவை சிகிச்சைக்குக் கூட கட்டணங்கள் ஆகியவற்றுக்கான காப்பீட்டையும் வழங்குகிறது. இந்த முழுமையான ஆயுள் மற்றும் சுகாதார பாதுகாப்பு நன்மைகளை பெறும் அதேவேளை முதலீட்டு இலாபத்தையும் காப்புறுதிதாரர்கள் பெறலாம். எதிர்பார்ப்புகளுக்கும் மேலாக வாடிக்கையாளரின் முதிர்ச்சி நிதி மூலம் அறிவிக்கப்படும் பங்குலாபத்தையும் பெறலாம்.

''ஆய்வுப் பெறுபேறுகளின் அடிப்படையில், நாம் வைத்தியச் செலவு மீள் வழங்கல் சுகாதார தீர்வுகளுக்காக சந்தையில் வெற்றிடம் இருப்பதை அறிந்து கொண்டோம். வாடிக்கையாளர்களும் இதனை ஒரு தேவையாக உணர்ந்த காரணத்தால் நாம் யூனியன் மெடி கார்ட் வைத்தியசெலவு மீள் வழங்கல் அனுகூலத்தை முதலீட்டு நன்மைகள் உட்பட பல்வேறு தனித்துவமான அம்சங்களுடன் அறி முகப்படுத்தி னோம்'' என்று யூனியன் அஷ்யூரன்ஸின் ஆயுள் வர்த்தக நாமங்கள் பிரிவின் சிரேஷ்ட முகாமை யாளர் அமிந்த உடிதகிலக கூறினார். (த)

# TATA வாகனங்களுக்கு நிதி குத்தகை
# அமானா வங்கி வழங்குகிறது




அமானா வங்கி DIMO நிறுவனத்தின் Batta மற்றும் Batti வாகனங்கள் உள்ளிட்ட TATA வர்த்தக வாகனங்களுக்கு விசேட நிதிக் குத்தகையை வழங்குவதற்காக DIMO நிறுவனத்துடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்துள்ளது.

TATA வர்த்தக வாகனங்கள் எவற்றையும் மாதாந்த வாடகை கொள்வனவுஅடிப்படையில் பெறுவதில் ஆர்வமுள்ள எந்தவொரு தனி நபரோ,வர்த்தக நிறுவனமோ. 100,000 ரூபா நிதியிடலுக்கு மாதாந்தம் வற் வரி உள்ளடங்கலாக.2554ரூபாவை ஐந்து வருடங்களுக்கு செலுத்துதல் வேண்டும்.


இது தொடர்பில் நுகர்வோர் வங்கிச் செயற்பாடுகள் மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான அமானா வங்கியின் துணைத் தலைவர் சித்தீக் அக்பா கூறுகையில், கடந்த ஏழு தசாப்தங்களாக மோட்டார் வாகன தொழிற்துறையில் உயர்நிலையில் வைத்து மதிக்கப்பட்டு வரும் ஒரு கம்பனியான DIMOவுடன் பங்காளித்துவத்தை ஏற்படுத்திக் கொள்வதில் அமானா வங்கி மகிழ்ச்சியடைகின்றது. வர்த்தகத்துறை நோக்கங்களுக்கான வாகனங்களுக்கான தேவைகள் அதி கரித்து வருகின்ற இக்காலப்பகுதி யில் கவர்ச்சிகரமான நிதிக்குத்தகைகளை வழங்கி ஒத்துழைப்பதில் அமானா வங்கி ஆர்வம் கொண்டுள்ளது எனத் தெரிவித்தார்.

இது தொடர்பில் TATA வர்த்தக வாகன விற்பனைக்கு பொறுப்பான DIMO பொதுமுகாமையாளர் விஜிது பண்டார கூறுகையில், தனித்துவமான ஒரு நிதி வழங்கல் திட்டத்தை முன்னெடுத்து வரும் அமானா வங்கி போன்ற ஒரு பங்காளியுடன் கைகோர்த்துச் செயற்படுவது பெருமகிழ்ச்சிக்குரியது. DIMO நிறுவனம் இலங்கையில் TATA வாகனங்களின் ஏகமுகவரும் விநியோகத்தினருமாக உள்ள அதேவேளை நாம் இலங்கையின் போக்கு வரத்து மற்றும் வழங்கல் துறையை மேம் படுத்துவதன் ஊடாக இளைஞர்களுக்கு சுயதொழில் வாய்ப்பையும் வழங்கிவருகின்றோம்என்றார்.

அமானா வங்கியின் குத்தகை தொடர்பான கொள்கைகள் இஜாரா அடிப்படை கொண்டவை இதன் பிரகாரம் வாடிக்கையாளருக்கு தேவையான வாகனத்தை வங்கி கொள்வனவு செய்வதுடன் அதனை வாடிக்கையாளருக்கு வாடகை அடிப்படையில் வழங்கவும் செய்கிறது. குத்தகை காலம்முடிவுற்ற நிலையில் வங்கி வாகனத்தை வாடிக்கையாளருக்கு நன்கொடையாக வழங்கும் போது அவர் அதன் முழு உரிமையாளர் ஆவார். அவசியமாயின் மாதாந்த காப்புறுதிக் கொடுப்பனவுகளும் ஏற்பாடு செய்யப்படும்.

இஸ்லாமிய வங்கி முறையில் இயங்கும் இலங்கையின் முதலாவது வர்த்தக வங்கி அமானாவாகும். செயற்திறன் மிக்க பங்கீட்டாளர்கள்,பாங்க் இஸ்லாம் மலேசியாபர்ஹாட், சவுதிஅரேபியாவின் இஸ்லாமிய அபிவிருத்தி வங்கி,பங்களதேஷ் ஏ.பி. வங்கி, ஆகியவற்றின் உறுதிமிக்கஆதரவுடன் வலுப்பெற்றுதிகழும் அமானா வங்கி இலங்கையின் வங்கித் துறையில் ஒரு சாதனைமிக்க பயணத்தை மேற்கொண்டு வருகின்றது. ஷரியா வங்கியியல் முறைமையை கடைபிடிக்கத் தொடங்கியுள்ள அமானா வங்கி இந்த எண்ணக்கருவை நாட்டின் அனைத்து சமூகத்தினர் மத்தியிலும் முன்னெடுத்து வருகின்றது.

## வட்டவளை பிளான்டேசன் நிறுவனத்துக்கு சிறந்த பிரதம நிறைவேற்று அதிகாரி விருது



வட்டவல பிளான்டேஷன்ஸ் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கலாநிதிடேன் சீவரட்ணம் 'Global CEO of the Year எனப்படுகின்ற வருடத்தின் உலகளாவிய சிறந்த பிரதம நிறைவேற்று அதிகாரிக்கான விருதை வென்றெடுத்தார்.

உலக மனிதவள விசேஷத்திறமை விருது (Global HR Excellence Awards 2012/2013) வழங்கும் நிகழ்வு இந்தியாவின் மும்பை நகரில் அண்மையில் நடைபெற்றபோதே அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

88நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகளுடன் போட்டியிட்டே அவர் இவ்விருதை வென்றெடுத்ததுடன் அதனை தன்வசப்படுத்திக்கொண்ட முதலாவது இலங்கையர் என்ற புகழையும் பெற்றார்.

பூகோள ரீதியாக பலர் தமது அனுபவங்களையும் கருத்துக்களையும் ஏனையவர்களுடன் பகிர்ந்துகொள்ளும் முக்கியமானதொரு தளமாகவும் உலக மனிதவள விசேஷத்திறமை விருது விழா கருதப்படுகின்றது.

வட்டவல பிளான்டேஷன்ஸ் பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றுகின்ற கலாநிதி. டேன் சீவரட்ணம் அதற்கும் அப்பால் தேயிலை ஆராய்ச்சி சபை, தெங்கு ஆராய்ச்சி சபை மற்றும் பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி சபையின் பணிப்பாளராகவும் இலங்கை பெருந்தோட்ட சேமலாப நிதியத்தின் தலைவராகவும் பணியாற்றுகின்றார்.

இலங்கை மனிதவள முகாமைத்துவ நிறுவனத்தால் 'வாழ்நாளுக்கான தங்க விருது 2012' மற்றும் 'ஆசிய பசுபிக் மனிதவள முகாமைத்துவ வாழ்நாள் சாதனையாளர் 2012' ஆகிய விருதுகளையும் அண்மையில் வென்றெடுத்த பெருமையும் கலாநிதி.டேன் சீவரட்ணத்தை சாருகின்றது.

## கல்விக் கண்காட்சி



சக்தி எப்.எம். அகரம் கல்விக் கண்காட்சி யாழ். வேம்படி மகளிர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வு எம்.பி.சி. நிறுவனக் குழுமப் பணிப்பாளர் திருமதி சாந்தி பகீரதன் தலைமையில் இடம்பெற்றது. இலங்கையில் உள்ள உயர்கல்விக் கூடத்தொகுதிகளோடு இணைந்து இந்தக் கண்காட்சி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் நடைபெற்று முடிந்த தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்புச் சித்திகளைப் பெற்ற 20 அதிர்ஷ்டசாலி மாணவர்களுக்கு பரிசில்களும் பாராட்டுப் பத்திரத்துடன், காசோலைகளும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பல மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களும் பெற்றோர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். (த-ரி)

**உதயன்** தொடர்புகளுக்கு

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066

நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789, 021 226 2395

சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' - மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, ஜோதி புக் சென்ரர் - மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'கோபி எலைக்ரிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஓட்டுசுட்டான் : 0775035571.

# வேதனையின் அரசியல்

பெண்களின் கண்ணீருக்கும் கோபத்துக்கும் சக்தி அதிகம். வரலாற்றின் ஏராளமான திருப்புமுனைகள் பெண்களின் கண்ணீரால் எழுதப்பட்டவை.

தன் கணவன் கள்வன் என்று வீண் பழி சுமத்தப்பட்டு கொல்லப்பட்டான் என்பதற்காக தன் கற்பின் கனல்கொண்டு மதுரையை எரித்தாள் கண்ணகி.

தன் கணவன்மாரால் சூதில் பகடைப்பொருளாக்கப்பட்டு தோற்றபின் துகிலுரியப்பட்டதால் திரௌபதி போட்ட சபதமே குருஷேத்திரப் போருக்கு வழி கோலியது.

இராவணனால் கவர்ந்து செல்லப்பட்ட சீதையை மீட்க வேண்டும் என்ற உந்துதலே இலங்கை மீது இராமனைப் படையெடுக்க வைத்தது.

இப்படி வரலாற்றின் ஒவ்வொரு பக்கத்திலும் துயர் ஏந்தி நிற்கும் பெண்களின் கண்ணீரே ஏராளமான அரசுகளைச் சாய்த்திருக்கிறது. புதிய ஆட்சிக்கான அத்திபாரத்தை இட்டிருக்கிறது.

பெண்களால் நிகழும் இந்த மாற்றங்கள் இதிகாசங்களோடு நின்றுபோய் விடவில்லை. அவை இன்னமும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றன. இலங்கையில் இழப்புகளையும் வேதனைகளையும் அவமானங்களையும் துயரங்களையும் சுமந்து நிற்கும் பெண்களுக்குக் குறைவில்லை. அவர்களே அசைக்கமுடியாதது எனக் கருதப்படும் தற்போதைய ஆட்சியை வீழ்த்தக் கூடிய திரும்பல் புள்ளியை உருவாக்கக் கூடியவர்கள்.

இதனை அறிந்துதானோ என்னவோ, தென்னிலங்கையில் அரசால் பாதிக்கப்பட்ட அல்லது தற்போதைய அரசு மீது அதிருப்தி கொண்ட மூன்று பெண்களைக் குறிவைத்து அரசியல் சதுரங்கம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் மனைவி அனோமா பொன்சேகா, முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க ஆகியோரே இப்போதைய அரசியல் சதுரங்கத்தின் முப்பெருந்தேவியர்.

சந்திரிகா, தன்னாலும், தனது பெற்றோராலும் கட்டிக்காத்து வளர்த்த கட்சியில் இருந்தே தீண்டத்தகாதவர் போல் ஒதுக்கப்பட்டுள்ளார்.

மூன்று தசாப்தங்களாக நீடித்த புலிகளுக்கு எதிரான போரை முன்னெடுத்து முடித்துக் கொடுத்த தனது கணவர் பொன்சேகா அத்தனை அதிகாரங்களும் பதக்கங்களும் ஓய்வூதியமும் பறிக்கப்பட்டு வீழ்த்தப்பட்டதை கண்முன்னே கண்டு கலங்கிக்கொண்டிருப்பவர் அனோமா.

எந்த அரசால் பிரதம நீதியரசர் ஆக்கப்பட்டாரோ அதே அரசால் ஊழல், பைத்தியக்காரி என்றெல்லாம் பழிச் சொல் சுமத்தப்பட்டு வீட்டுக்கு அனுப்பி வைக்கப்பட்டவர் ஷிராணி. இந்த மூன்று பெண்களுக்கும் அரசு இழைத்தது அநீதி என்ற கருத்து இலங்கை மக்களிடம், பொதுவாக பெண்களிடம் மேலெழுந்து உள்ளது. இதனை மிகச் சரியாகப் பயன்படுத்தி, திரிசூலப் பெண்களின் கண்ணீரை வைத்து ஆட்சிக் கட்டிலை அசைக்க எதிர்க்கட்சிகள் திட்டமிடுகின்றன.

தமிழர் பகுதிகளில் இந்தத் திரிசூலப் பெண்களைவிட இழப்புகளை அதிகம் சுமந்து நிற்கும் தமிழ்ப் பெண்களின் வேதனை எந்த அரசு வந்தாலும் தீரவா போகிறது?

# மொழியும் தேசிய ஒற்றுமையும்

■ ஜி.சுரேஸ்குமார்
மாற்றுக்கொள்கைக்கான நிலையத்தின் வடக்கு கிழக்கு இணைப்பதிகாரி.

பரிணாம வளர்ச்சியின் பயனாக கருத்துக்களை வெளிப்படுத்தும் மனித ஊடகமாக மொழி, ஒளி, ஒலி, சைகை, எழுத்து என எண்ணிலடங்கா மொழிகள் தோன்றிவிட்டன. உலகின் இயற்கை எழில் கொஞ்சும் நாடுகளின் பட்டியலில் தனக்கென ஓரிடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ள இலங்கையில் தமிழ், சிங்கள, முஸ்லிம், பறங்கியர் என பல இனத்தைச் சேர்ந்த ஏறத்தாழ 2 கோடியே 21 இலட்சம் மக்கள் வாழ்கின்றனர்

ஊடகங்களில் சிறந்த ஊடகமாக மொழி விளங்குகின்றது. உலக நாகரிகத்தின் விருத்தியாகவும், அச்சாணியாகவும் விளங்குவது மொழியே. ஐக்கிய நாடுகளின் புதிய கணக்கெடுப்புகளின்படி, உலகில் ஏறக்குறை 6000 மொழிகள் உள்ளன. அவற்றில் அண்ணளவாக 3000 மொழிகள் உலகை விட்டு மறையும் அபாயம் தோன்றியுள்ளது.

உலகில் இரு மொழிக்கொள்கையை தங்களது நாடுகளின் அரச கரும மொழிகளாக ஆக்கிக்கொண்ட நாடுகள் வரிசையில் பின்லாந்து, பெல்ஜியம், தென்னாபிரிக்கா, கனடா, அயர்லாந்து போன்ற நாடுகள் உள்ளன. குறிப்பிட்ட நாடுகள் வளர்ச்சியடையக் காரணமாக இருப்பவை இன,மத மொழி போன்ற பாகுபாடுகளின்றி இருப்பதே ஆகும்.

இலங்கையின் சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் தடையாக இருப்பது இன ரீதியாகவும், மொழி ரீதியாகவும், மத ரீதியாகவும், பல்வேறு பாகுபாடுகள், ஏற்றத்தாழ்வுகள் இருப்பதை யாரும் மறுக்க முடியாது. எமது நாட்டில் இல்லாத ஒன்றை அதாவது தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவது எவ்வாறு எனச் சிந்திப்பது ஒவ்வொரு மனிதனதும் தலையாய கடமையாக இருக்கிறது.

பூமியில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படை உரிமை என்பது பொதுவானதாகும். அதனை அனுபவிப்பதற்கான உரிமை அவருக்கு எப்போதும் உண்டு. எல்லா மனிதர்களும் சுதந்திரமாகவே பிறந்துள்ளனர். எல்லோரும் சமமானவர்களே. இன, மத, நிற, பால், மொழி அல்லது வேறு காரணிகள் சமூக ரீதியான, சொத்து, பிறப்பு ஆகிய எந்தவிதமான முக்கியத்துவமும் இன்றி எல்லா அடிப்படை உரிமைகளும் சகலருக்கும் உரித்தானவை என மனித உரிமைகளுக்கான சர்வதேச பிரகடனம் குறிப்பிடுகிறது. இந்த உரிமைகள் எந்தளவுக்குள்ளது என்பது ஆய்வு செய்யப்பட வேண்டியதொன்றாகும்.

இலங்கையில் 74 வீதமானோர் தாய்மொழியாக சிங்களத்தையும் 18 வீதமானோர் தமிழையும் 8 வீதமானோர் ஆங்கிலம், உட்பட பிற மொழிகளையும் பேசுகின்றனர். நாட்டின் மூவின சமூகத்தினதும் அடிப்படை உரிமை, மொழி உரிமை தொடர்பில் நாட்டில் அரசியல் அமைப்பில் எவ்வாறு குறிப்பிட்டுள்ளது என்பதை இந்த நாட்டில் பிறந்த பிரஜை என்ற வகையில் அறிந்திருப்பது எமது தலையாய கடமையாகும்.

இலங்கையில் 1956ஆம் ஆண்டு தனிச் சிங்களச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன் பிரதிபலன் இனங்களுக்கிடையில், நாட்டின் ஒருமைப்பாட்டை இழக்க நேரிட்டது என்பது வெளிப்படையான உண்மை. இவ்வாறாக வரலாற்றில் பல தசாப்த கால அரசியல் போராட்டத்தின் விளைவாக மொழி உரிமைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. 1972,1978ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசமைப்பில் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் 18,19 உறுப்புரை தமிழ் மொழியும் சிங்கள மொழியும் அரச கரும மொழியாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் பல அரசியல் சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. இன்று நடைமுறையில் உள்ள 13 ஆம் சீர்திருத்தத்தின் பிரகாரம் தமிழ் மொழிக்கு நிர்வாக ரீதியாக உரிய சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளதா என்பது கேள்விக்குரிய விடயமாகும்.

மேலும் 1991 ஆம் ஆண்டில் அரசமைப்புக்கான 18 ஆவது திருத்தத்தின் 5ஆம் அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளின்படி அமுலாக்கம் பற்றிய விசாரணை செய்து கண்காணித்தல், ஆணைக்குழுவின் செயற்பாடாகும். அரச கரும மொழிகள் அடிப்படை உரிமைகளைச் செயற்படுத்துவதையிட்டு பொறுப்புக் கூறலாகும். மேலும் 2009.09.30 ஆம் திகதி 165 .20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் தேசிய மொழி மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு உருவாக்கப்பட்டது. ஆனால் ஏட்டில் இருக்கும் தமிழ் மொழியின் நிர்வாக உரிமையை, நடைமுறைப்படுத்த ஆக்கபூர்வமான வழி முறைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளதா என்பதை பொறுப்புடன் சிந்திக்க வேண்டும், ஆராய வேண்டும்.

இன்று இலங்கை அரசு கடந்த 2012 ஆண்டை மும்மொழி ஆண்டாக பிரகடனப்படுத்தியது. இதன் ஆரம்ப விழாவும் பிரமாண்டமாக ஆரம்பிக்கப்பட்டது. இதன் பிரதான அதிதியாக உலகப் புகழ் பெற்ற அணு விஞ்ஞானியும், இந்தியாவின் முன்னாள் ஜனாதிபதியுமான டாக்டர் அப்துல் கலாம் கலந்து சிறப்பித்தார். உண்மையில் இது மக்களுக்கு பெரும் மகிழ்ச்சியானதோர் விடயமாகும். எமது நாட்டில் கடந்த கால வரலாற்றில் இவ்வாறான ஒரு முயற்சியையும் காணக் கிடைக்கவில்லை. நீண்ட காலமாகவே மொழி ரீதியான பாரபட்சங்களை அனுபவித்து வரும் சிறுபான்மை தேசிய சமூகத்திற்கு இது ஓர் முக்கிய வரப்பிரசாதமாகவும் இருந்தது.

எமது நாட்டின் அரசியலில் விதவிதமான கொள்கைகளையும், சட்டங்களையும் கொண்டு வந்தாலும் கூட இவை நடை முறையில் இல்லாதிருப்பது கவலைக்குரிய விடயமாகவுள்ளது. சிங்களமும் தமிழும் தேசிய மொழிகளாகும். சிங்களத்திற்குரிய சம அந்தஸ்து தமிழ் மொழிக்கும் அரசியல் அமைப்பில் வழங்கப்பட்டிருந்ததாலும் கூட ஏதோ ஒரு வகையில் தமிழ் மொழிக்குரிய உரிமை புறக்கணிக்கப்பட்டுக்கொண்டே வருகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர், மாகாண சபை உறுப்பினர் , உள்ளூராட்சி உறுப்பினர்களுக்கு அதே போல நிர்வாக மற்றும் நிறைவேற்று ரீதியான் அமைச்சுக்கள், ஆணைக் குழுக்கள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், கிராம உத்தியோகத்தர்கள் என அனைத்துத் துறைகளும் இரு மொழியிலும் பொது மக்களுக்கு சேவை செய்யக் கடமைப்பட்டுள்ளனர் என்பதைப் புரிந்திருத்தல் நல்லிணக்கத்துக்கான அடித்தளமாக அமையும். விஷேடமாக தனியார் துறையினர், நுகர்வோர் அதிகார சபையின் கீழ் மொழி உரிமையை கடைப்பிடிக்க வேண்டியது கட்டாயமாகும். நடைமுறையில் இது கேள்விக்குறியாக உள்ளமை சகலரும் அறிந்த விடயமாகும்.

சமாதானத்துக்கும் நல்லிணக்கத்துக்கும் தேசிய ஒற்றுமைக்கும் குரல் கொடுக்கும் மக்கள் பிரதிநிதிகள் மற்றும் தொழிற்சங்கங்கள், சமய, சமூக அமைப்புகள் தமது சக சமூகங்களின் உரிமைகளுக்காககுரல்கொடுக்க வேண்டியது அவசியம் ஆகும்.

நாட்டின் சட்ட அமுலாக்கமானது நாட்டின் நலனையும் இனங்களுக்கிடையிலுள்ள ஒற்றுமையையும் புரிந்துகொள்ளவும், இணக்கப்பாட்டை ஏற்படுத்தவும் சிறந்த வழி. ஒவ்வொருவரதும் தாய் மொழியை, அதன் உரிமையை அங்கீகரித்து நடைமுறைப்படுத்துவதாகும். அந்த வகையில் நாட்டில் மொழி உரிமையை மேம்படுத்தல் எனும் தொனிப்பொருளின் கீழ் மொழி உரிமைக்கான தீர்வை ஏற்படுத்த மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் பல முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. இதன் போது நாட்டின் நிர்வாகத் துறையில் உள்ள பல மொழி உரிமை மீறல்களைச் சுட்டிக்காட்டியதுடன் தீர்வாக மனித உரிமை ஆணைக் குழு மற்றும் மொழிகள் ஆணைக்குழு, உயர் நீதிமன்றம் போன்ற வை நீதித் துறையில் பல வழக்குகளைத் தாக்கல் செய்து வெற்றி கண்டுள்ளது. அவற்றில் கல்வித் துறை, போக்குவரத்துத் துறை,சுகாதாரத் துறை, தனியார்துறை,பாதுகாப்புத் துறை மற்றும் கூட்டுத்தாபனங்கள், நகர சபைகள், பிரதேசசபைகள், நுகர்வோர் அதிகாரசபை என தேசிய ரீதியாக மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. உதாரணமாக பொலிஸ் நிலையங்களில் இரு மொழியிலும் முறைப்பாடுகள் செய்தல், போக்குவரத்துச் சேவையில் எல்லா பஸ் வண்டிகளில் இரு மொழியில் பெயர் பலகை பொறிக்கப்பட வேண்டும் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

மத்திய வங்கியினால் வெளியிடப்படும் பண நோட்டுக்களில் தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும், புகையிரத நிலையங்களில் அறிவிப்புக்கள், மருந்துப் பொதியில் விபரக் குறிப்பு, தனியார் உற்பத்திப் பிரிவில் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருள்களில், இரு மொழிக்கும் சம அந்தஸ்து கிடைக்கப் பெற்றமை, அரச மற்றும் தனியார் துறைகளின் பெயர்ப் பலகைகளில் மொழி உரிமை பேணல் போன்றவை குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் பொது மக்கள் மத்தியில் பிற சமூகத்தின் உரிமைக்கு மதிப்பளிக்கும் மற்றும் சகிப்புத் தன்மை பழக்கப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. நடை முறையிலுள்ள 140 வழக்கில் விஷேடமாக தேசிய அடையாள அட்டையில் ஸ்ரீ லங்கா எனும் சொல், சிங்களத்தில்,தமிழ் மக்களுக்கு மாத்திரம் இரு மொழிப் பிரயோகம்,தொடர்வதை குறிப்பிட முடியும்.

மேலும் இரு மொழிக் கொள்கை தொடர்பான அரச மொழி ஒழுங்கு விதிகள் கொள்கை நடைமுறைப் படுத்தப்படுகின்றது. அதில் மொழி உரிமை மீறலுக்கான அவசர தொலைபேசி இலக்கமான 1956 பொறிக்கப்பட்ட பதாதைகள் வடக்கு, கிழக்கு மற்றும் மேல் மாகாணங்களில் ஆங்காங்கே காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இனப் பிரச்சினைக்கு அடித்தளமாகவுள்ள இந்த மொழி உரிமையை ஓர் இலங்கையர் என்ற அடிப்படையில் ஏற்றுக்கொள்வது தேசிய ஒற்றுமைக்கு பயன் தரக்கூடியதாகும். நாட்டில் திட்டம் வகுக்கப்பட்டாலும் அவை ஏட்டில் இல்லாமல் நடைமுறையில் இருக்க வேண்டும். மொழி உரிமையை நடைமுறைப்படுத்தலில் தனி ஒரு நபராலோ,சமூகத்தாலோ அல்லது ஒரு அமைப்பாலோ வெற்றி பெற முடியாது. அரசும், அனைத்து இன மக்களும், இன,மத,மொழி கட்சி வேறுபாடு இன்றி அனைத்து அரசியல் தலைவர்களும், புத்திஜீவிகளும், சமயத் தலைவர்களும், சமூக செயற்பாட்டாளர்களும் ஒத்துழைப்புடனும் அர்ப்பணிப்பு உணர்வுடனும் பங்காற்ற வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. ★

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடம்:** முக்கிய அலுவல்களை மற்றவர்களை நம்பி ஒப்படைக்காமல் நீங்களே செய்து முடிப்பது நல்லது. உறவினர், நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். உங்கள் மீது சிலர் வீண் பழி சுமத்துவார்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த சலுகைகள் தாமதமாகக் கிடைக்கும்.

**இடபம்:** நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வீண் விவாதங்களைத் தவிர்ப்பீர்கள். உத்தியோகத்தில் வேலைசுமை குறையும். சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும்.

**மிதுனம்:** தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் மதிப்பார்கள். பணப்பற்றாக்குறை நீங்கும். வியாபாரத்தில் லாபம் உண்டு. உத்தியோகத்தில் தடைபட்ட வேலைகள்ள விரைந்து முடிப்பீர்கள். வீண் அலைச்சல் நீங்கும்.

**கடகம்:** எடுத்த வேலையைத் தடையின்றி முடிப்பீர்கள். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். அரச அதிகாரிகளின் நட்புக் கிடைக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அயல் வீட்டாரின் அனபுத் தொல்லைகள் விலகும். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**சிங்கம்:** சொன்ன சொல்லைக் காப்பாற்ற அதிரடியாகச் செயற்படுவீர்கள். பணவரவு திருப்தி தரும். பிரியமானவர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். உடன் பிறந்தவர்கள் உறுதுணையாக நடந்துகொள்வார்கள்.

**கன்னி:** சிக்கனமாகச் செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். அரச காரியங்களிலிருந்த பின்னடைவு நீங்கும். விடாப்பிடியாகச் செயற்பட்டு பணிகளை முடிப்பீர்கள். வியாபாரத்தில் நம்பிக்கைக்குரியவர்களின் ஆலோசனையை ஏற்பீர்கள்.

**நாளை**

பங்குனி-21 புதன்கிழமை 03.04.2013
திதி: அட்டமி மு.இ.11.33 வரை
நட்சத்திரம்: பூராடம் பி.இ. 12.27 வரை
சுபநேரம்: 04.40- 06.10 வரை
இராகுகாலம்: 12.10- 01.40 வரை

**துலாம்:** வியாபாரத்தில் சுமுகமான லாபம் உண்டு. முன்கோபம், பதற்றம் விலகும். எடுத்த காரியங்களை முடிக்கமுடியாமல் அவதிப்பட்ட நிலை மாறும். சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**விருச்சிகம்:** சில நேரங்களில் வெறுப்பாகப் பேசுவீர்கள். தேவையற்ற விடயங்களை மனதில் நினைத்து குழம்பிக் கொண்டிருக்காதீர்கள். யாருக்கும் பணம், நகை வாங்கித் கொடுப்பதில் ஈடுபட வேண்டாம். உத்தியோகத்தில் மறதியால் பிரச்சினை வந்து நீங்கும்.

**தனுசு:** குடும்பத்தினரிடம் கோபத்தைக் காட்டாதீர்கள். திட்டமிடாத செலவுகளைப் போராடிச் சமாளிப்பீர்கள். அரசு விவகாரங்களில் அலட்சியத்தைத் தவிர்க்கலாம். திடீர் பயணங்கள் உண்டு. உத்தியோகத்தில் விமர்சனங்களைத் தவிர்ப்பது நல்லது.

**மகரம்:** மனதில் பட்டதைப் பளிச்சென்றுபேசி அனைவரையும் ஆச்சரியப்படுத்துவீர்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வியாபாரத்தில் மகிழ்ச்சி தங்கும். பழைய பொருள்களை புதிய யுக்தியால் விற்பீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும்.

**கும்பம்:** குடும்பத்தினருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள். சகோதர வகையில் உதவிகள் கிடைக்கும். உத்தியோகத்தில் பணிகளை விரைந்து முடிப்பீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். அயல் வீட்டாரின் அன்புத்தொல்லைகள் விலகும்.

**மீனம்:** அடிமனதில் இருந்த பயம் விலகும். துணிச்சலுடன் சில முடிவுகளை எடுப்பீர்கள். அலைச்சல் தந்த வேலைகளை உடனே முடிப்பீர்கள். வெளிவட்டாரம் மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 8 | 9 | 7 | |
| 8 | | | 7 | | 9 | | 1 | 4 |
| | 4 | | 3 | 1 | | | 2 | |
| | | 4 | | | 2 | 6 | | |
| 1 | | | 6 | 5 | 3 | | | 8 |
| | | 5 | 8 | | | 2 | | |
| | 6 | | | 8 | 5 | | 3 | |
| 5 | 7 | | 9 | | 1 | | | 2 |
| | 1 | 8 | 4 | | | | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 2 | 8 | 1 | 5 | 9 | 4 | 6 |
| 1 | 9 | 4 | 6 | 7 | 3 | 2 | 5 | 8 |
| 6 | 8 | 5 | 4 | 9 | 2 | 7 | 1 | 3 |
| 7 | 2 | 6 | 5 | 3 | 9 | 4 | 8 | 1 |
| 4 | 1 | 9 | 7 | 8 | 6 | 3 | 2 | 5 |
| 5 | 3 | 8 | 1 | 2 | 4 | 6 | 9 | 7 |
| 2 | 5 | 3 | 9 | 6 | 8 | 1 | 7 | 4 |
| 8 | 6 | 1 | 2 | 4 | 7 | 5 | 3 | 9 |
| 9 | 4 | 7 | 3 | 5 | 1 | 8 | 6 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



திருமதி

## இராஜரட்ணம் யோகேஸ்வரி

தோற்றம்:- 04*02*1936

மறைவு :- 03*03*2013

மற்றவர்கள் போற்றியே பேசும் அம்மாவே
மகிழ்வாக எங்களோடு பேசுகின்ற அம்மாவே
வற்றாத அன்பினிலே கலங்கரை விளக்கமானவரே
உற்ற பல கருமங்களை ஓய்வின்றி செய்பவரே
ஊர் போற்ற வாழ்ந்தவரே ஊருக்காய் உழைத்தவரே
வேதனைகளையும் சவால்களையும் வெற்றியாக்கி
சுகம் கண்ட அம்மாவே
நாடி வந்தோரை வரவேற்று அறுசுவை உணவூட்டிய அம்மாவே
தீராத சோகத்தில் புரண்டு அழும் எங்களுக்காய்
மீண்டும் வந்து ஆறுதல் தந்திடம்மா....

கடந்த (03.03.2013) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி **இராஜரட்ணம் யோகேஸ்வரி** அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (02.04.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற உள்ளதால் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்)**

17/2, சந்தனமாதா கோயில் ஒழுங்கை,
பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்.**



# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்மகிழ
09 * 03 * 1946

கண்நெகிழ
03 * 03 * 2013



அமரர்

## பெரியதம்பி சண்முகலிங்கம்

நாள்கள் முப்பத்தொன்று கழிந்தாலும்
ஆண்டவன் பாதம் நீங்கள் சென்று
ஆயிரம் ஆண்டுகள் சென்றாலும்
ஆறிடுமா எம் துயரம்

கடந்த 03.03.2013 இறைபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் பெரியதம்பி சண்முகலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (02.04.2013) செவ்வாய்க் கிழமை நடைபெற உள்ளதால் அவரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அண்ணாமலை வீதி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய்.

குடும்பத்தினர்,
பரமநாதன் (சகோதரன்)

(35507) (10.6.7)

# தீவிரவாத அமைப்புக்களை தடை செய்ய புதிய சட்டம்

## அமைச்சர் வாசுதேவ எடுக்கும் முயற்சி



கொழும்பு, ஏப்.2

நாட்டில் தற்போது தலைதூக்கியுள்ள பொதுபல சேனா, ராவணா பலய மற்றும் சிங்கள ராவய போன்ற தீவிரவாத அமைப்புக்களை தடைசெய்வதற்கான அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை தேசிய ஒருமைப்பாடு மற்றும் சமூக ஒருங்கிணைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தயாரித்து வ்ருகிறார்.

இந்த அமைச்சரவைப் பத்திரம் இரண்டு வாரங்களில் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் தெரிவித்ததாக ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

நாட்டில் சமயங்களுக்கிடையிலும் சமூகங்களுக்கிடையிலும் இந்த இயக்கங்கள் பகையை வளர்த்து வருவதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள் பகிரங்கமாக பகைமையை வளர்த்து வந்தாலும் பொலிஸார் எதுவித நடவடிக்கையும் எடுக்காமல் பார்த்துக்கொண்டிருப்பதாகத் தெரிவித்த அமைச்சர், இவைகளைத் தடைசெய்ய வேண்டியது பற்றி ஜனாதிபதிக்கு எழுதியிருப்பதாகவும் கூறியுள்ளார்.

எமது அரசமைப்பின் படி எவரும் தான் விரும்பும் எந்தச் சமயத்தையும் பின்பற்ற முடியும்.மக்கள் தாம் அச்சுறுத்தப்படுவதாக உணர்ந்தால் பொலிஸாரிடம் முறையிட முடியும், பொலிஸார் நடவடிக்கை எடுக்காவிட்டால் நீதிமன்றத்துக்குச் செல்ல முடியும் என்று அமைச் சர் தெரிவித்துள்ளார். (ப)

## பேராதனைப் பல்கலை துணை வேந்தருக்கு 'ஆனந்தகுமாரசுவாமி ஞாபகார்த்த பதக்கம்'



கொழும்பு, ஏப்.2

பேராதனைப் பல்கலைக் கழகத்தின் உபவேந்தரான பூகர்ப்பவியல் ஆய்வுப் பேராசிரியர் அத்துல சேனாரத்ன அந்தத் துறைக்கு ஆற்றியுள்ள மிகப் பெரும் சேவைக்காக இலங்கை பூகர்ப்பவியல் விஞ்ஞானச் சங்கத்தினால் ஆனந்தகுமாரசுவாமி ஞாபகார்த்தப் பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் பூகர்ப்பவியல் விஞ்ஞானத்துறையின் மேம்பாடு மற்றும் அபிவிருத்திக்காக மிகப்பெரும் சேவை ஆற்றியுள்ள பூகர்ப்பவியல் விஞ்ஞானிகளுக்கு வருடாந்தம் பூகர்ப்பவியல் விஞ்ஞானச் சங்கத்தினால் இந்த ஆனந்தகுமாரசுவாமி ஞாபகார்த்தப் பதக்கம் வழங்கப்பட்டு வருகிறது. இன்று வரையில் அத்தகைய சிறப்பான சேவையை ஆற்றியுள்ள விஞ்ஞானிகள் 14 பேருக்கு இந்தப் பதக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2012 ஆம் ஆண்டுக்கான இந்த ஞாபகார்த்தப் பதக்கம் பேராசிரியர் அத்துல சேனாரத்னவுக்குக் கிடைத்திருப்பதானது பேராதனைப் பல்கலைக்கழகத்துக்குக் கிடைத்துள்ள மிகப் பெரும் கீர்த்தியாகும் என்று 'பேராதனைப் பல்கலைக்கழகச் சமூகம் தெரிவிக்கிறது. (ஒ-22)

## உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை நிராகரித்தார் புதிய பாப்பரசர்

ரோம், ஏப்.2

புதிய பாப்பரசராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதலாவது பிரான்ஸிஸ் ஆண்டகை தமக்குரிய உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தை ஏற்க மறுத்துவிட்டார். அவர் வத்திக்கானில் உள்ள விருந்தினர்கள் தங்கிச் செல்வதற்காக ஒதுக்கப்பட்டுள்ள புனித மார்த்தா இல்லத்தின் அறை ஒன்றில் தங்கியிருப்பதற்குத் தீர்மானித்துள்ளதாக வத்திக்கான் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மீள் அறிவித்தலொன்றை விடுக்கும் வரையிலும் புதிய பாப்பரசர் 120 அறைகளைக் கொண்டுள்ள அந்தத் தங்கு விடுதியில் வசிப்பதற்காகச் சென்றிருப்பதாக வத்திக்கானின் பேச்சாளர் பெற்றிக்கோ லொம்பார்ட் தெரிவிக்கிறார்.

ஆர்ஜென்ரீனாவின் புவனர்ஸ் அயஸ் நகர கார்டினலான 76 வயதான ஜோர்ஜ்மாரியோ பர் கொக்லியோவே புதிய பாப்பரசராக நியமனம் பெற்றிருப்பவர் ஆவார். அத்தோடு லத்தீன் அமெரிக்க நாடொன்றுக்குப் பாப்பரசர் பதவியொன்று கிட்டியுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். அந்த வாய்ப்பு ஐரோப்பிய நாடு ஒன்று அல்லாத நாட்டுக்குக் கிடைத்துள்ள முதலாவது சந்தர்ப்பமும் இதுவே.

ஏழைகளுக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டவரும் தற்போதும் அவ்விதமே செயற்பட்டு வருபவருமாகப் போற்றப்படும் புதிய பாப்பரசர் எளிமையான, அமைதியான வாழ்க்கையை விரும்புவர் என்பதோடு அவர் தமக்குரிய உணவுக ளைத் தாமே தயார் செய்து கொள்கிறார். பாப்பரசராகப் பதவியேற்றதன் பின்னர் அவருக்கு உரிய லிமோசீன் உத்தியோக பூர்வவாகனத்தைக் கூட ஏற்கவில்லையென்றும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ஒ-22)

## கிரிக்கெட் போட்டியில் அநாகரிகம்; மதுபோதையில் 16 பேர் கைது

கொழும்பு,ஏப்.2

பல்லேகல சர்வதேச மைதானத்தில் மதுபோதையில் அநாகரிகமாக நடந்துகொண்ட 16 பேரை பொலிஸார் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கைதுசெய்துள்ளனர்.

பல்லேகல சர்வதேச மைதானத்தில், பங்களாதேஷ் மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டியை பார்வையிட சென்றவர்களே இவ்வாறு கைது செய்யபட்டுள்ளனர். (ச)

கண்ணீர் அஞ்சலி



எமது சக ஆசிரியர்
A.S. நிசாந்தன் அவர்களின்
அன்புத் தந்தையார்
மோசஸ் அமலதாஸ்
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஆசிரியர் சங்கம்
புனித பத்திரிசியார் கல்லூரி,யாழ்ப்பாணம். (c/8029) (6.7.11)

கண்ணீர் அஞ்சலி



கந்தசாமி சுரேந்திரநாதன்
(முன்னாள் தலைவர்- Rood (றூட்), கைத் தொழில் பேட்டை இணைப்பாளர் சமூக நலன்)
அன்னாரின் மறைவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த அனுதாபம் அடைவதோடு, குடும்பத்தினருக்கும் அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
செவிப்புலன் வலுவற்றோர் புனர் வாழ்வு நிறுவனம், 16/12,சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம். (35555)(6.7.11)
உறுப்பினர், அங்கத்தவர், நண்பர்கள்.

முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1996.04.09
மறைவு
2012.03.14
செல்வன்
பாலச்சந்திரன் மிதூர்சன்
ஓர் ஆண்டு ஆனதுவோ உன் முகம் கண்டு
ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீ
நித்தம் புலம்புகின்றோம்
உன் திருமுகம் காணாமல்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.
அம்மன் கோயிலடி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

TV கள் மலிவு விற்பனை

யாழ். நகரில் எங்குமில்லாத மலிவு விலையில் SONY Wega Flat TV கள் 21"- 12000/= முதல், 25"- 13600/=, , 29"- 16000/= Panasonic (பனசோனிக்) 29" -15000/= DTS அம்பிளிபயர், Box வகைகள், DVD -3000/=
(35552)(2.6) 56, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.

தவறிவிட்டது

தொடர்பு: 071 224 1788 (35553)(6.7.11)

வீடு வாடகைக்கு

ஆனைப்பந்தியடியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்பு:
071 514 0950 (35551)(6.7.11)

வயல் காணி விற்பனைக்கு

நவாலி வடக்கு, 'ஈச்சந் தரவை'யில் 28 பரப்பு வயல் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
077 617 9113 (35554) (6.7.11)

31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்
30.11.1944
மறைவு
03.03.2013
அமரர் மாணிக்கவாசகர் தங்கமணி
வாடுகின்றோம் நாளும் உம்மை நினைத்து
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவலைகள் — எம்
நெஞ்சை விட்டு அகலா
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.
கோண்டாவில் வடக்கு. குடும்பத்தினர்.

கண்ணீர் அஞ்சலி



கந்தசாமி சுரேந்திரநாதன்
(முன்னாள் தலைவர்-செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன விளையாட்டுக் கழகம்-யாழ்ப்பாணம)
இல.1/9, 2ஆம் ஒழுங்கை, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும், யாழ்ப்பாணம் செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன விளையாட்டுக் கழக முன்னாள் தலைவருமான கந்தசாமி சுரேந்திரநாதன் அவர்களின் மரணச் செய்தி அறிந்து அதிர்ச்சியும், கவலையும் அடைந்துள்ளோம்.
அன்னாருக்கு எமது கழகம் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்தித்து, குடும்பத்தாருக்கு எமது ஆறுதல்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!
16/12, சீனியர் லேன், கலட்டி, யாழ்ப்பாணம். (35556)(10.6.7)
செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன விளையாட்டுக் கழகம், யாழ்ப்பாணம்.

# யாழ்-கொழும்பு தனியார் பஸ் சேவையில் பயணிகளை ஏற்ற தரகர்கள் முண்டியடிப்பு

## யாழ்.பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம்,ஏப்.2

யாழ்ப்பாணம்- கொழும்பு சேவையில் ஈடுபடுகின்ற தனியார் பஸ்களில் பயணிகளை ஏற்றுவதற்கு தரகர்கள் முண்டியடித்து பயணிகளுக்கு இடையூறு விளைவிப்பதாக யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம்- கொழும்பு சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்களில் பயணிகளை ஏற்றுவதற்கென தரகர்கள் பஸ் தரிப்பிடத்தில் நின்று கூவி அழைப்பதுடன், பயணப் பொதிகளுடன் பயணிகளைக் கண்டால் அந்தப் பொதிகளைப் பறித்து இந்த் பஸ்ஸில் ஏறுங்கள் என்று கட்டாயப்படுத்தி ஏற்றுவதுடன் ஏனைய பஸ்களில் பயணிகளை ஏறவிடாது தரகர்கள் ஒருவருடன் ஒருவர் வாய்த் தர்க்கத்தில் ஈடுபடுவதாகவும் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயணிகளின் விருப்பத்துக்கு ஏற்ப பஸ் பிரயாணத்தை மேற்கொள்ளாதவாறு தரகர்கள் இவ்வாறு கட்டாயப்படுத்தி ஏற்றுவதால் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இது தொடர்பாக தனியார் பஸ் சங்கத்தின் உப தலைவரிடம் தொடர்பு கொண்டு கேட்ட போது;

தரகர்கள் பயணிகளுக்கு இடையூறு விளைவிப்பது தொடர்பாக பொலிஸார் என்னிடம் விளக்கம் கேட்டனர். இது தொடர்பாக சங்கத்தால் எந்தவித நடவடிக்கையும் எடுக்க முடியாது.

வீதிப் போக்குவரத்து பொலிஸாரே இதனைக் கண்காணிக்க வேண்டும். அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு தான் உடன்படுவதாகக் கூறியதாகத் தெரிவித்தார். (வ-14)

# போட்டிகளில் வெற்றிபெற்ற காரைநகர் கோட்ட மாணவர்கள்

காரைநகர், ஏப்.2

யாழ்.காரைநகர் மணிவாசகர் சபை சிவராத்திரி தினத்தை முன்னிட்டு காரைநகர் கோட்டப் பாடசாலைகளுக்கு இடையே பேச்சு, பண்ணிசை, மனனம், பஜனைப் போட்டிகளை நடத்தியது.

இந்தப் போட்டிகளில் தரம் ரீதியாக முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு:-

**பேச்சுப்போட்டி**

பிரிவு I தரம் 2,3 - ஜெ.புவியரசன் (யாழ்ற்ரன் கல்லூரி), செ.தர்சினி (யாழ்ற்ரன் கல்லூரி), வி.சரண்யா (யாழ்ற்ரன் கல்லூரி).

பிரிவு II தரம் 4,5 - ப.லனுசிகன் (காரை மெய்கண்டான் வித்தியாலயம்), சு.கம்சிகன் (யாழ்ற்ரன் கல்லூரி), ஜீவாணி (வலந்தலை வடக்கு அ.மி.த.க.பாடசாலை).

பிரிவுIII தரம் 6,7- அ.பிரணவரூபன்(கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.), அ.அரவிந்தன் (சுந்தரமூர்த்திநாயனார் வித்.), மு.அபிகரன் (சுந்தரமூர்த்திநாயனார் வித்தி.).

பிரிவு IV தரம் 8,9 - தே.ரொபின்சிகா (யாழ்ற்ரன் கல்லூரி), பா.குலமதி (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.), இ.லச்சிகா (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.).

பிரிவு V தரம் 10,11- சி.சாளினி (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.), த.திருமகள் (யாழ்ற்ரன் கல்லூரி), ம.நவனியா (யாழ்ற்ரன் கல்லூரி), வி.வேதாரணி (யாழ்ற்ரன் கல்லூரி).

பிரிவுVI தரம்12,13- செ.ஐஸ்வரியா (யாழ்ற்ரன் கல்லூரி), அ.சுஜீவா (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.), தி.செந்தூரன் (யாழ்ற்ரன் கல்லூரி).

**பண்ணிசைப்போட்டி**

பிரிவு I தரம் 2,3 - பா.நிசாந்தன் (யாழ்ற்ரன் கல்லூரி), க.கஜானா (சுந்தர மூர்த்தி நாயனார் வித்தியாலயம்), செ.வனஜா (காரை ஊரி. அ.மி.த.க.பாடசாலை).

பிரிவுII தரம் 4,5 - சி.தர்சினி (காரை மெய் கண்டான் வித்தியாலயம்), ரா.தமிழினி (சுந்தர மூர்த்தி நாயனார் வித்தியாலயம்), கி.மதுஷன் (காரை ஊரி அ.மி.த.க.பாடசாலை).

பிரிவுIII தரம் 6,7- ஆ.அமிர்தா (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.), இ.கல்யாணி (யாழ்ற்ரன் கல்லூரி), ம.கபிலேஷன் (யாழ்ற்ரன் கல்லூரி).

பிரிவுIV தரம்8,9- சோ.நிரோஜினி (யாழ்ற்ரன் கல்லூரி), ப.யாழினி (யாழ்ற்ரன் கல்லூரி), ஜெ.சரணியா (யாழ்ற்ரன் கல்லூரி), இ.நிருபமா (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.)

பிரிவு V தரம் 10, 11- ப.மகிபன் (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.), க.மதிவதனி (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.), இ.பவதாரணி (கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.). (எ-250)

(தொடரும்)

# பிரதேச சபையின் ஆதனங்கள்; எல்லைப்படுத்தத் தீர்மானம்

வடமராட்சி,ஏப்.2

கரவெட்டிப் பிரதேச சபைக்குச் சொந்தமான ஆதனங்களில் பெரும்பாலானவை எல்லைப் படுத்தப்படாமல் இருக்கின்றன. அவற்றைப் பொது மக்கள் அபகரிப்பதைத் தடுக்கும் வகையில் சிமெந்துத் தூண்கள் இட்டு எல்லைப்படுத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சபையின் மாதாந்தக் கூட்டம் சபைத் தலைவர் பொ.வியாகேசு தலைமையில் நடைபெற்ற போது இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கரணவாய் எள்ளங்குளம் மயானம் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டதுடன் அதனைப் பதிவு செய்வதென்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இது தவிர, நெல்லியடிச் சந்தையில் புதிதாகக் கட்டப்பட்ட கட்டடத்தை மழை நீர், வெயில் என்பனவற்றிலிருந்து பாதுகாப்பதற்கு ஏதுவாக மேலதிக அமைப்பு செய்ய வேண்டியுள்ளதால், இதற்கான மதிப்பீட்டை மேற்கொள்வதெனவும் தீர்மானிக்கப்பட்டது. (ந-8)

# மாணவர்களின் நலன் கருதி உதயபுரத்துக்கு விசேட பஸ்சேவை

அரியாலை தென்கிழக்கு உதயபுரத்துக்கான வடபிராந்திய போக்குவரத்துச் சபையினரின் பாடசாலை மாணவர்களுக்கான விஷேட பஸ் சேவை ஏப்ரல் மாதத்தில் இருந்து ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் மாணவர்களின் போக்குவரத்துக்காக பஸ் சேவையை ஆரம்பிப்பது தொடர்பாக நல்லூர் பிரதேச சபையின் உறுப்பினர் அ.இரவீந்திரதாஸ் வடபிராந்திய போக்குவரத்துச் சபையுடன் தொடர்புகொண்டு மகஜர் ஒன்றையும் கையளித்திருந்தார்.

இதற்கமைய இந்தச் சேவையை பாடசாலை இரண்டாம் தவணை ஆரம்பமாகும்போது ஆரம்பிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (ந-17)

# வெங்காயச் செய்கையில் விவசாயிகள் பெரும் ஆர்வம்

யாழ்ப்பாணம், ஏப்.2

தீவுப் பகுதியில் சிறுபோக வெங்காயச் செய்கையில் ஈடுபடுவதற்கு விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதற்கு முன்னேற்பாடாக விவசாயிகள் தமது விவசாய நிலங்களைத் தயார்ப்படுத்தி வருகின்றனர்.

அல்லைப்பிட்டி, வேலணை, நாரந்தனை, புளியங்கூடல் போன்ற பிரதேசங்களில் இந்தச் செய்கைக்கான ஆரம்ப கட்டப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.


குறிப்பாக மே மாத ஆரம்பத்தில் சிறுபோகத்திற்கான வெங்காய நடுகை இடம்பெறும். இந்தப் பிரதேசங்களில் இந்த முறை கூடுதலாக வேதாள வெங்காயச் செய்கையில் ஈடுபட விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். (ந-17)

## 5 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 30.11.1989

விண்ணில் 02.04.2008

**மகேந்திரராசா ஜெயபிரகாஷ்**



அன்பும் அறிவும் நிறைந்த
எம் இனிய பெரியண்ணாவே!
சின்னஞ்சிறு வயதில் சேர்ந்து
நாம் வளர்ந்து வந்தோம்
பாதி வழியினிலே பாதகன்
எமை விட்டுப் பறித்துச் சென்றான்
மீண்டும் ஒரு மறு பிறப்பு
உண்டானால் உங்கள் சகோதரராய்ப் பிறந்திட
இறைவனை வேண்டுகின்றோம் அண்ணா!

க.மகேந்திரராசா, (26267)(2.6.7)
வைத்தியசாலை வீதி, தருமபுரம்.

வளவன் (தம்பி),
ஆரணி (தங்கை)

## அறிவித்தல்

மானிப்பாய் கிராம உப அலுவலகம் (ஆனைக்கோட்டை)
வட்டாரம்- 04
சுதுமலை வீதி
ஆதன இலக்கம்- 89 (புதிய ஆதனம்)

வட்டாரம் 04 சுதுமலை வீதி, ஆனைக்கோட்டை ஆதன இலக்கம் 89 இல் அமைந்துள்ள (உறுதிப் படி வட மாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய் கோயிற் பற்று சுதுமலை இறை நாலுவராக் காடு எனும் பெயருள்ள விஸ்தீரணம் நிலப்பரப்பு இரண்டு குளி பதினேழு தசம் இரண்டு (நி.பர. 02 குளி 17.2) கொண்ட ஆதனம்) இந்த ஆதனமானது யாழ்ப்பாணம் சுதுமலை தெற்கைச் சேர்ந்த தர்மலிங்கம் கைம்பெண் பொன் மணியும் வேலுப்பிள்ளை சுப்பிரமணியம் கந்தையா சிவநேசன் என்பவர்களால் நன்கொடை உறுதி மூலமும் வெளிப்படுத்தல் மூலமும் நாகமணி -பரமேஸ்வரன் ஆகிய இவரால் குறித்த ஆதனம் பிரசித்த நொத்தாரிஸ் மாணிக்கம்-தியாகராசா முகதாவில் நிறைவேறிய 6503 ஆம் இலக்க 2003.11.24 ஆம் திகதிய நன்கொடையும் வெளிப்படுத்தல் உறுதி மூலம் குறித்த ஆதனமானது தமக்கு சொந்தம் என தெரியப்படுத்தி எமது மானிப்பாய் கிராம உப அலுவலக (ஆனைக்கோட்டை) ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். இந்த நாலுவராக்காடு நிலப்ரப்பு 2 குளி 17.2 உள்ளது. எனவே இவ் வாதனத்திற்கு உரிமை கோருபவர்கள் யாராவது இருந்தால் அவ்வுரிமையை உறுதிப்படுத்தும் உறுதிகள் ஆவணங்களுடன் எழுத்து மூலமாக 14 நாள்களுக்குள் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அவ்வாறு எவராவது எவ்விதஉரிமையும்14 நாள்களுக்குள் கோரப்படாதவிடத்து இவ் வாதனம் நாகமணி -பரமேஸ்வரன் என்பவர் பெயருக்கு மேற்குறித்த ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றேன்.

தவிசாளர் (35566) (6.7.11)

வலி. தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.

புலமைப் பெற்றோர்களே!

இதோ புதுப்பொலிவுடன் வெளிவந்துவிட்டது

உங்கள் பிள்ளைகளின் வெற்றிக்கான கையேடு

புலமை 25

உள்ளே...

எதிர்பார்க்கை வினாத்தாள்கள் உள்ளடங்கலாக

தமிழ், கணிதம், சுற்றாடல், ஆங்கிலம், சிங்களம், தரம் 4,5 மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள், மேலும் பல தகவல்களுடன்




உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்

தொடர்புகளுக்கு - 071 6850005, 011 5738855

வடமாகாணத் தொடர்புகளுக்கு - 071 6182182, 021 5677222

## மீண்டும் திறக்கப்பட்டது அருங்காட்சியகம்

கொழும்பு,ஏப்.2

படிக்கட்டு உடைந்து வீழ்ந்தமையால் சில நாள்களாக மூடப்பட்டிருந்த தேசிய அருங்காட்சியகம் மக்கள் பார்வைக்காக நேற்று மீளத் திறக்கப்பட்டுள்ளது.

எனினும் அருங்காட்சியகத்தில் இடர் ஏற்பட்ட பகுதி தொடர்ந்தும் மூடப்பட்டிருக்கும் என்று தேசிய மரபுரிமைகள் அமைச்சர் கலாநிதி ஜகத் பாலசூரிய குறிப்பிட்டார். (ச)

## இலங்கையின் ஏற்றுமதியில் வீழ்ச்சி

**ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்கில் தொழிலாளர்களுக்கான விசேட சலுகை வழங்கும் திட்டம் எதுவும் இல்லை.**

கொழும்பு,ஏப்.2

இலங்கையின் ஏற்றுமதியில் கடந்த வருடம் வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாக ஏற்றுமதி அபிவிருத்தி சபை தெரிவித்துள்ளது.


2011 ஆம் ஆண்டில் இலங்கையின் ஏற்றுமதி 23 வீதத்தால் உயர்வடைந்து காணப்பட்டது.

கடந்த வருடத்தில் ஏற்றுமதி ஆறு வீதத்தால் வீழ்ச்சி அடைந்துள்ளது என்று ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் தலைவர் யுசுப் மரிக்கார் தெரிவித்தார்.

ஏற்றுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டமைக்கான காரணம் குறித்து ஆராய்ந்த பின்னர் ஏற்றுமதியாளர்களுக்கான வரிச் சலுகை, தீர்வையற்ற வாகனங்கள் உள்ளிட்ட சலுகைகளை வழங்கி ஏற்றுமதித் துறையை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு முயற்சிக்கப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

ஏற்றுமதியை அதிகரிக்கும் நோக்கில் தொழிலாளர்களுக்கான விசேட சலுகை வழங்கும் திட்டம் எதுவும் இல்லை.

எனினும் ஏற்றுமதியில் மீண்டும் உயர்வு ஏற்பட்ட பின்னர் அவர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு முதலாளிமார் நடவடிக்கை எடுப்பார்கள் என்று அவர் மேலும் கூறினார். (ச)



உயிர்த்த ஞாயிறு ஆராதனை மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகையால் மட்டக்களப்பு சிறைச்சாலையில் நடத்தப்பட்டபோது...

## மின்சார சபைக்கு எரிபொருள் கடனாக வழங்கவே முடியாது

### பெற்றோலியத்துறை அமைச்சர் அதிரடி

கொழும்பு,ஏப்.2

மின் உற்பத்தி செய்வதற்காக எதிர்வரும் காலங்களில் மின்சார சபை, கடனுக்கு எரிபொருள் கொள்வனவை மேற்கொள்ள முடியாது என்று பெற்றோ லிய வளத்துறை அமைச்சர் அநுர பிரியதர்சன யாப்பா அதிரடியாகத் தெரிவித்துள் ளார்.

மின்சார சபை கடனுக்கு பெற்றுக் கொண்ட எரிபொருளுக்காக இதுவரையில் 6 ஆயிரத்து 500 கோடி ரூபா செலுத்த வேண்டியுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் காலத்தில் மின்சார உற்பத்திக்கான எரிபொருளை, மின்சார சபை பணம் செலுத்தியே பெற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் கூறினார்.

மின்சார சபை, எரிபொருளை கடனுக்கு பெற்றுக் கொண்டமையால், எரிபொருள் கூட்டுத்தாபனம் கடன் சுமையில் சிக்கிக் கொண்டுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதனால், எதிர்வரும் காலங்களில் பணம் செலுத்தியே மின்சார சபை எரிபொருள் கொள்வனவு செய்யவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் எரிபொருள் கூட்டுத்தாபனத்துக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# மனித உரிமைகள் குறித்த செயற்றிட்டம் வேண்டும்

### அதன் மூலம் சர்வதேச நாடுகளின் குற்றச்சாட்டை தவிர்க்கலாம் என்கிறார் ஆணையாளர் பிரதீபா

கொழும்பு,ஏப்.2

இலங்கையின் மனித உரிமை நிலவரங்கள் தொடர்பிலான செயற்றிட்டங்களை மேற் கொள்ள வேண்டும்.

இவ்வாறு இலங்கை யின் மனித உரிமைகள் ஆணையாளர் பிரதீபா மஹானாமஹேவா தெரிவித்தார்.

இலங்கையின் மனித உரிமை தொடர்பான குற்றச்சாட்டுகளை சர்வதேச நாடுகள் முன்வைத்து வருகின்றன.

**அறிக்கை சமர்ப்பித்து அது குறித்து சர்வதேச நாடுகளுக்கும் தெளிவுப்படுத்தப்பட வேண்டும்**

இந்த நிலையில் கடந்த 2012 ஆம் ஆண்டு அமைச்சர் மஹிந்த சமரசிங்க மற்றும் ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க தலைமையில் மனித உரிமைகள் செயல்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டது என்று அவர் குறிப்பிட்டார்.

எனினும் இது போன்ற திட்டம் எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு வரையில் இடம்பெற வேண்டும்.

அது 3 மாதங்களுக்கு ஒருமுறை தனது அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டியதுடன் அந்த அறிக்கை சர்வதேச நாடுகளுக்கும் தெளிவுப்படுத்தப்பட வேண்டும் என்று அவர் கோரியுள்ளார்.

இதன் மூலம் சர்வதேச நாடுகள் இலங்கை மீது முன்வைக்கின்ற குற்றச்சாட்டுகளை வலுவற்றதாக்கிக் கொள்ள முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## 36 ரயில் சேவைகள் நாளாந்தம் ரத்து

கொழும்பு,ஏப்.2

பல்வேறு பிரச்சினைகளினால் திட்டமிடப்பட்ட பல ரயில் சேவைகளை நாளாந்தம் இரத்து செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்று ரயில்வே தொழிங்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

நாளாந்தம் 316 பயண சேவைகள் திட்டமிடப்பட்டுள்ள போதிலும் 280 சேவைகள் மாத்திரமே இடம்பெறுகின்றன என்று அகில இலங்கை ரயில்வே பொதுச் சேவைகள் சங்கத்தின் பிரதம செயலர் சுமதிபால மானவடுவ தெரிவித்தார்.

ஊழியர் பற்றாக்குறை, ரயில்கள் உரிய முறையில் பராமரிக்கப்படாமை போன்றன இதற்கான காரணங்கள் என்று அவர் குறிப்பிட்டார். (ச)

## பொன்சேகாவின் கட்சிக்கு அங்கீகாரம்



கொழும்பு,ஏப்.2

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் ஜனநாயக கட்சி சட்ட ரீதியானதாக அங்கீகரிக்கப்பட்டதாக தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சரத் பொன்சேகாவின் ஜனநாயக கட்சியின் சின்னமாக தீப்பந்தம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகளது பரிந்துரைக்கு அமைவாக ஜனநாயக கட்சி பதிவு செய்யப்பட்டுள்ளது.

தனது கட்சியைப் பதிவு செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளமை தொடர்பில் பொன்சேகா ஏற்கனவே மனித உரிமை ஆணைக்குழு அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பெண்களுக்கு பள்ளிவாசல்



மட்டக்களப்பு,ஏப்.2

மட்டக்களப்பு, காத்தான்குடியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட பெண்கள் தொழுவதற்கான பள்ளிவாசல் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

காத்தான்குடி, பிரதான வீதியிலுள்ள மௌலானா பள்ளிவாசல் வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட பெண்கள் தொழுவதற்கான இந்தப் பள்ளிவாசல் மஸ்ஜிதுஸ் ஸய்யிதா பத்ரியா அஹமட் என்னும் பெயரைக் கொண்டமைந் துள்ளது.

காத்தான்குடி நகர சபை உறுப்பினர் சல்மா அமீர் ஹம்சாவின் வேண்டுகோளுக்கு அமைய இந்தப் பள்ளிவாசல் அமைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட ஜம் இய்யத்துல் உலமா சபையின் தலைவர் மௌலவி எஸ்.எம். அலியார் பலாஹி, காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனத்தின் பிரதித் தலைவர் ஏ.எல். அப்துல் ஜவாத் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)

# இனங்களுக்கு எதிராகச் செயற்பட்டால் சட்ட நடவடிக்கைக்கு அரசு தயங்காது

### மைத்திரிபால சிறிசேன கூறுகிறார்



கொழும்பு,ஏப்.2

இலங்கையில் வாழும் எந்தவொரு இனத்துக்கு எதிராகவும் நடந்து கொள்பவர்களுக்கு அரசு சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தயங்காது.

இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலரும், அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சிங்கள முஸ்லிம் இனங்களுக்கிடையில் ஒற்றுமையின்மையை ஏற்படுத்தக் கூடியதான வன்முறைச் சம்பவங்கள் கடந்த சில நாள்களாக இடம்பெற்று வருகின்றன.

30 வருடம் நடைபெற்ற போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு அனைத்து இன மக்களும் அமைதியான சூழ்நிலையில் வாழ்ந்து வருகின்றனர். இந்நிலையில், அமைதியைக் குழப்பும் வகையில் சில குழுக்கள் செயற்படுகின்றன.

இலங்கையிலுள்ள எந்தவொரு சமூகத்தின் பொதுச் சொத்துக்களுக்குப் பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ளும் நபர்களுக்கு எதிராக அரசு சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கும்.

நாட்டில் குழப்பநிலையொன்றை ஏற்படுத்தி அரசின் மீது அதிருப்தியை ஏற்படுத்துவதற்கே சிலர் முயற்சிகள் எடுக்கின்றனர்.

எனினும், இவ்வாறான குழப்ப சூழ்நிலைகள் தொடராமல் இருப்பதற்கு பொலிஸார் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு ஜனாதிபதி உரிய பணிப்புரைகளை வழங்கியுள்ளார்.-என்றார். (ச)

## சுயதொழில் வாய்ப்புக்கான 25 ஆயிரம் ரூபா 12 பேருக்கு

அச்சுவேலி,ஏப். 2
வலிகாமம் கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 12 அங்கவீனமுற்றவர்களுக்கு தலா 25 ஆயிரம் ரூபா வீதம் சுயதொழில் வாய்ப்புக்கான நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

புனர்வாழ்வு அளிக்கப்பட்ட அங்கவீனமுற்ற பயனாளிகளுக்கு சமூக சேவைகள் அமைச்சின் அங்கவீனமுற்றோருக்கான தேசிய செயலகம்இந்த உதவியை வழங்கியுள்ளது. இவர்களின், வாழ்வாதார மேம்பாட்டிற்கான தொழில் முயற்சியை ஆரம்பிப்பதற்கு வசதியாக 25 ஆயிரம் ரூபா வீதம் கொடுப்பனவை வலிகிழக்கு பிரதேச செயலக சமூக சேவை பிரிவின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது'

25 ஆயிரம் ரூபா வீதம் கொடுப்பனவைப் பெறும் பயனாளிகளின் பெயர் விவரம் வருமாறு:-

செல்லக்கண்டு ஈஸ்வரன் கலைமதி புத்தூர், திருமதி ஜெகன் சசிகலா - பூலசிட்டி அச்செழு, திருமதி திலிபன் நிர்மலா - உரும்பிராய் வடக்கு, செல்வி. வைரவநாதன் கிருஷ்ணகுமார் கோப்பாய் வடக்கு, சிவலை சிவநாதன் சிறுப்பிட்டி மேற்கு, திருமதி ரமேஷ் தர்சினி இலக்கடி கோப்பாய், மனோகரன் விமலதாஸன் சிறுப்பிட்டி மேற்கு, செல்வி அருமைத்துரை பிரிதர்சினி சர்வோதயா ஆவரங்கால், செல்வி குணேஸ்வரன் கவிதா. கல்லூரி வீதி உரும்பிராய், செல்லக்கண்டு சந்திரரூபன் - கலைமதி புத்தூர், திருநாவுக்கரசு சசிகுமார் நீர்வேலி மேற்கு, கோவிந்தன் ஜனார்த்தனன் - வேளாந்தோப்பு இருபாலை.



வல்வெட்டித்துறை தர்மகுலசிங்கம் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தினரால், சங்க உறுப்பினர்களின் சேமிப்பினை ஊக்குவிக்கும் முகமாக 5 பயனாளிகளுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் சங்கத் தலைவர் செயலாளர் உட்பட நிர்வாக உறுப்பினர்களையும் காணலாம். (ந-ரி 253)

## கோப்பாய் கல்விக் கோட்டத்தில் 9 பாடசாலைகள் புனரமைப்பு

அச்சுவேலி,ஏப். 2
மஹிந்த சிந்தனையின் ஐயாயிரம் ஆரம்பப் பாடசாலை புனரமைப்பு தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கோப்பாய் கல்விக் கோட்டத்தில் ஒன் பது ஆரம்பப் பாடசாலைகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

சிறுப்பிட்டி அ.த.க பாடசாலை, புத்தூர் பஞ்ஞசீக வித்தியாலயம், புத்தூர் இந்து ஆரம்பப்பாடசாலை வளலாய் அமெரிக்கன் மிசன் த.க.பாடசாலை, இருபாலை சீசீ தமிழ்க்கலவன் பாடசாலை-

நீர்வேலி தெற்கு இந்து தமிழ்க்கலவன் பாடசாலை, கோப்பாய் வடக்கு றோ.க. த.க பாடசாலை, கோப்பாய் தெற்கு கந்தவேள் த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளே புனரமைப்புச் செய்யப்படவுள்ள ஆரம்பப்பாடசாலைகளாகும். (ந-11)

## சங்கானை மீன் சந்தைக்கு 2 பரப்புக் காணி அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.2
யாழ். சங்கானையில் மீன் சந்தை அமைக்க 2 பரப்பு காணியை அன்பளிப்பாக வழங்க பிரான்ஸில் இருந்து வருகை தந்து சங்கானையைச் சேர்ந்த குமாரசிங்கம் முருகானந்தன் முன்வந்துள்ளார் என்று சங்கானை பட்டின அபிவிருத்தி சபை செயலாளர் க.குணசிறி தெரிவித்தார்.

இந்த விடயம் சம்பந்தமாக செயலர் மேலும் தெரிவித்ததாவது:-

சங்கானை அபிவிருத்திக்கு பல்வேறு வழிகளில் முருகானந்தன் உதவி புரிந்துள்ளார்.

கடந்த காலங்களில் சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்துக்கு உதவி புரிந்துள்ளார். தற்போது சுழிபுரம் பிரதேச சபைக்குட்பட்ட சங்கானை பட்டின மீன்சந்தை அபிவிருத்திக்கு இலவசமாக 2 பரப்பு காணியையும் 12 அடி அகலமும் கொண்ட பாதையையும் வழங்க முன்வந்தமை அபிவிருத்தியின் முதற்படி என்றார். (எ)

### ஆங்கில துணைவள நிலைய முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

வடமாகாண கல்வி திணைக்களத்தினால் மன்னார் மாவட்ட ஆங்கில துணைவள நிலையத்துக்கு முகாமையாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை கல்வி நிர்வாக சேவை அல்லது இலங்கை அதிபர் சேவை தரம் 1,2-1 அல்லது இலங்கை ஆசிரியர் சேவை தரம்1,2-1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இலங்கை கல்வி நிர்வாக சேவையில் தகுதியானவர்கள் விண்ணப்பிக்காத பட்சத்திலே அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களது விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படும்.

விண்ணப்பதாரி ஆங்கில மொழியைப் பாடமாகக் கொண்ட ஒரு பட்டதாரியாக அல்லது ஆசிரிய கலாசாலையில் ஆங்கில பயிற்சி பெற்றவராக அல்லது தேசிய கல்வியியல் கல்லூரியில் ஆங்கில டிப்ளோமா பட்டம் பெற்றவராக இருத்தல் வேண்டும்.தகுதியான விண்ணப்பதாரிகள் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் மாகாண கல்வி திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். (ந-13)

## பொதுசன மாதாந்தக் கொடுப்பனவைப் பெறலாம்

நீர்வேலி, ஏப்.2
சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவின் கீழ் பொதுசன மாதாந்த உதவிப் பணம் பெறுபவர்கள் ஏப்ரல் மாதத்திற்குரிய கொடுப்பனவு பிரதேச செயலகத்தினால் தபாலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

உரியவர்கள் இந்த மாதம் 4 ஆம் திகதியி லிருந்து எதிர்வரும் 15 ஆம் திகதிக்குள் பெற்றுக் கொள்ளுமாறு கேட் கப்பட்டுள்ளார்.

இதேவேளை ஆயிரம் ரூபா கொடுப்பனவைப் பெறுபவர்கள் 1 ஆம் திகதியி லிருந்து 7 ஆம் திகதிவரை பெற்றுக்கொள்ளுமாறும் பிரதேச செயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-100)

## செயல்திட்ட உதவியாளர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தினால் ஒப்பந்த அடிப்படையில் செயற்திட்ட உதவியாளர் பதவிக்கு விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப் பதாரிகள் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் பட்டதாரியாக இருத்தல் வேண்டும். நூலகத் துறையில் அனுபவம் இருப்பின் அது மேலதிக தகைமையாகக் கருதப்படும். விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப் பதாரிகள் எதிர்வரும் 09 ஆம் திகதிக்கு முன்னர் இலங்கை திறந்த பல்கலைக் கழகம், பிராந்திய நிலையம், பிறவுண் வீதி, கொக்குவில் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு யாழ்.பிராந்திய நிலைய இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (ந)

## நிர்வாக உறுப்பினர் தெரிவு

யாழ்ப்பாணம், ஏப்.2
வேலணைப் பிரதேச செயலகப் பிரிவுக்கான பகிரங்க சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியச் சங்கத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் கடந்த செவ்வாய்க்கிழமை வேலணைப் பிரதேச செயலக மண்ட பத்தில் நடை பெற்றது.

நிர்வாக சபை உறுப்பினர் களாக தெரிவு செய்யப்பட் டோர் விவரம் பின்வருமாறு:-

தலைவர் பொ. நடராசா, செயலாளர்- செ.சிவலோகநாதன், பொருளாளர்- இ.சற்குருநாதன், உபதலைவர் எஸ்.சண்முகலிங்கம், உப செயலாளர் பொ.பத்மநாதன், மேலும் நிர்வாக சபை உறுப்பினர்களாக சு.திசைநாயகம்பிள்ளை, திருமதி விஜயலட்சுமி நாவேந்தன் ஆகியோர் தெரிவாகினர். (எ-7)

2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
11.11.1965
மறைவு
02.04.2011



திருச்செல்வம் அமலதாஸ் (விஜி)
சீவியத்தில் என்னை நேசித்தவர்கள்
மரணத்தில் என்னை மறவாதீர்கள்

அச்சுவேலி வடக்கு,
அச்சுவேலி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
லீனஸ் குடும்பத்தினர்.

(35568)(2.6.7)

நீர்வேலி பாலர் பகல் விடுதி/ முன்பள்ளி
ஆசிரியர் தேவை

நீர்வேலி சமுதாய முன்னேற்றக் கழகத்தினால் ஐம்பத்தேழு வருடங்களுக்கு மேலாக நடத்தப்படும் மேற்படி முன்னணி முன்பள்ளியில் மாணவர்களுக்குக் கற்பிப்பதற்கு ஆசிரியர் தேவை.

தகைமை
க.பொ.த.(சா.த.) பரீட்சையில் கணிதம், தமிழ் பாடங்கள் உட்பட சித்தியடைந்திருப்பதுடன் முன்பள்ளி கற்பித்தலில் தேர்ச்சியும் அனுபவமும் கொண்டவர்கள், பாடல், ஆடல் ஊடாகவும் விளையாட்டினூடாகவும் கற்பிக்கும் ஆற்றல் கொண்டவர்கள், ஆங்கில அறிவு உள்ளவர்கள், கணினி அறிவுள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு:
அங்கீகரிக்கப்பட்ட முன்பள்ளி டிப்ளோமா மற்றும் கணினி டிப்ளோமா சான்றிதழ் உடையவர்கள் விரும்பப்படுவர்.

மேற்படி தகைமை உடையவர்கள் 10.04.2013 ஆம் திகதி புதன்கிழமை அன்று எமது நிலையத்துக்கு முற்பகல் 10 மணிக்கு சுயவிவரத்துடனும், சான்றிதழ்களுடனும் நேரடியாக சமுகம் தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

சம்பளம்: தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களின் திறமைக்கும் தகைமைக்கும் ஏற்ப பேசித் தீர்மானிக்கப்படும்.

பாலர் பகல் விடுதி/ முன்பள்ளி
சமுதாய முன்னேற்றக் கழகம்
கந்தசுவாமி கோயில் வீதி, நீர்வேலி. (35567)(2.6)

## வங்கிக் கிளைகள் திறப்பு

யாழ். மாவட்டத்தில் டி.எப்.சி.சி வர்த்தன வங்கியின் மூன்று கிளைகள் எதிர்வரும் ஏப்ரல் 4ஆம்,5 ஆம் திகதிகளில் திறந்து வைக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 4 ஆம் திகதி வியாழக் கிழமை மானிப்பாய், சுன்னாகம் ஆகிய இடங்களிலும், 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நெல்லியடியிலும் வங்கிக் கிளைகள் திறந்து வைக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இந்த வங்கியின் கிளை ஒன்று கடந்த சில ஆண்டுகளாக இயங்கி வருகின்றது குறிப்பிடத்தக்கது. (ந-8)

மூன்றாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
21.11.1930
மறைவு
06.04.2010



அமரர் வேலுப்பிள்ளை
கணபதிப்பிள்ளை

திதி: அபரபக்க ஸப்தமி (செவ்வாய்க்கிழமை)
02.04.2013

ஆண்டுகள் மூன்று அகன்றால் என்ன ஐயா
எம் அகத்தினை விட்டு நீங்கள் அகலவில்லையே
காலங்கள் எத்தனை கடந்தாலும்
காண்போம் உம்மை நாம் என்றும் எம்மில்......

மருதங்கேணி தெற்கு,
தாளையடி.

உங்கள் பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

(35307)(6.7.II)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## பஸ் மோதி யுவதி காயம்

தென்மராட்சி, ஏப் 2

வீதியில் நின்ற வாகனத்தைக் கடந்து வீதியின் மத்திக்கு வந்த சைக்கிளை வேகமாக வந்த கொழும்பு பஸ் மோதியதில் அதில் பயணித்த யுவதி தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை இரவு 7.30 மணியளவில் சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அருகில் ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

மட்டுவில் சந்திரபுரத்தைச் சேர்ந்த சாவகச்சேரியில் இயங்கும் காப்புறுதி நிறுவனப் பணியாளரான தம்பையா தர்சிகா (வயது-27) என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பாக பேருந்தின் சாரதியான பதுளையைச் சேர்ந்த மைத்திரிபால சம்பத் டியந்த வர்ணசூரிய என்பவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர். (ந-9)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் அதிபர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

வவுனியா வடக்கு கல்வி வலயத்துக்குட்பட்ட ஓமந்தை மத்திய கல்லூரி தரம் I ஏபி பாடசாலையினது அதிபர் பதவிக்கு இலங்கை அதிபர் சேவை தரம் I, 2-1 ஐச் சேர்ந்த மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1 ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதிபர் சேவையில் தகுதியானவர்கள் விண்ணப்பிக்காத பட்சத்திலேயே ஆசிரியர் சேவையினைச் சேர்ந்த விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். இந்தப் பதவிக்கு வவுனியா மாவட்டத்துக்குட்பட்ட வலயங்களைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மட்டுமே விண்ணப்பிக்க முடியும்.

தகுதியான விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்குமாறு வடமாகாண கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்துள்ளார். (ந-13)

கரைச்சி செயலகத்தில் போர் இழப்புக்களை பதிய

# கொளுத்தும் வெயிலில் காத்திருந்தோரை வீட்டுக்கு திருப்பி அனுப்பினர் அதிகாரிகள்

கிளிநொச்சி, ஏப்.2

போரால் பாதிக்கப்பட்ட மக்களின் உடைமை இழப்புக்களை பதிவு செய்வதற்காக வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்துக்காக பல மணி நேரம் கொளுத்தும் வெயிலில் காத்திருந்த மக்கள் திருப்பி அனுப்பப்பட்டனர்.

இந்தச் சம்பவம் நேற்று கரைச்சிப் பிரதேச செயலகத்தில் நிகழ்ந்துள்ளது.

பிற இடங்களில் இருந்து காலையிலேயே பிரதேச செயலகத்தில் குவிந்த மக்களை பிற்பகல் ஒரு மணியளவில் ''உங்கள் பெயர்களைப் பதிந்து விட்டு போய் நாளை வாருங்கள்'' என்று திருப்பி அனுப்பினர் பிரதேச அதிகாரிகள் என்று பாதிக்கப்பட்ட மக்கள் உதயனிடம் தெரிவித்தனர்.

போரால் பாதிக்கப்பட்ட மக்களின் இழப்பீடுகள் குறித்து விவரம் திரட்டும் செயற்றிட்டம் கடந்த வாரம் தொடக்கம் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்று வருகிறது.

இதற்கென பிரதேச செயலகத்தால் வழங்கப்படும் விண்ணப்பப் படிவத்தை பெற்று பூர்த்தி செய்து சமர்ப்பிக்க வேண்டும்.

சில தினங்களாக நடைபெற்ற இந்த வேலைத் திட்டம் மக்களின் காதுகளுக்கு உடனடியாக எட்டவில்லை. செய்தி அறிந்த மக்கள் தூர இடங்களில் இருந்து பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் நேற்று கரைச்சிப் பிரதேச செயலகத்தில் கூடினர்.

எனினும் அங்கு கூடிய மக்களுக்கு, படிவங்கள் முடிந்து விட்டதாக கூறி பெயர்களைப் பதிந்து விட்டு ''நாளை வந்து பெற்றுக் கொள்ளுங்கள்'' என திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இதனால் தூர இடங்களில் இருந்து பல்வேறு சிரமங்களின் மத்தியில் வந்த மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பியதாக அவர்கள் உதயனிடம் முறையிட்டனர். (ஐ)



நேற்றுமுன்தினம் உயிர்ப்பு ஞாயிறு பெருவிழாவை, கிறிஸ்தவர்கள் ஆலய வழிபாடுகள், வாழ்த்துப் பரிமாற்றங்கள், பொதுநிகழ்வுகளுடன் சிறப்பாகக் கொண்டாடினர். பல்வேறு தேவாலயங்களிலும் உயிர்த்த இயேசுவின் பவனிகள் இடம்பெற்றன. பாஷையூரில் உயிர்த்த இயேசுவின் சொரூப பவனி மக்கள் குடியிருப்பு ஊடாக பவனி வந்த வேளையில் (ந-135-23)

# வெளி மாவட்ட தனியார் பஸ்களுக்கான நிரந்தர பஸ் தரிப்பிடம் முற்றவெளியில்

யாழ்ப்பாணம், ஏப்.2

வெளி மாவட்ட தனியார் பஸ்களுக்கான நிரந்தர பஸ் தரிப்பிடத்துக்கான காணி யாழ்.முனீஸ்வரன் வீதி முற்றவெளிப் பகுதியிலேயே ஒதுக்கப்பட்டுள்ளது என்று தனியார் பஸ் சங்கத்தின் உப தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித்தார்.

வெளி மாவட்டங்களுக்கான சேவையில் ஈடுபடுகின்ற தனியார் பஸ்களுக்கு நிரந்தரமான பஸ் தரிப்பிடம் இல்லாமல் இருந்தது. அதனால் அடிக்கடி முற்றவெளிப் பகுதிக்கும், யாழ்.நகர் ஸ்ரான்லி வீதி ஒழுங்கைக்கும் மாற்றும் நடவடிக்கை தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

இதன் காரணமாக வெளி மாவட்டத்துக்குரிய பஸ்களை நாடும் பயணிகள் பஸ் தரிப்பிடம் எது என்பது தெரியாமல் அலைந்து திரிகின்றனர். இதனால் குறித்த நேர சேவையில் ஈடுபடுகின்ற வெளிமாவட்டங்களுக்கான தனியார் பஸ்களை பயணிகள் தவறவிட வேண்டிய நிலை ஏற்பட்டுவருகிறது.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் மேற்பார்வையில் யாழ். மாநகர சபையின் ஒழுங்கமைப்புடன் நிரந்தர பஸ் தரிப்பிடம் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டிய நிலையில் வெளி மாவட்டங்களுக்கான நிரந்தர பஸ் தரிப்பிடம் எங்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்பது தொடர்பாக தனியார் பஸ் சங்கத்தின் உப தலைவருடன் தொடர்பு கொண்டு கேட்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெளி மாவட்டங்களுக்கான தனியார் பஸ் தரிப்பிடத்துக்கான, நிரந்தரக் காணி யாழ். முற்றவெளிப் பகுதி வீரசிங்கம் மண்டபம் மற்றும் யாழ்.முனீஸ்வரன் வீதிக்கும் இடைப்பட்ட இடத்திலேயே ஒதுக்கப்பட்டுள்ளது.

தேசிய போக்குவரத்து ஆணைக் குழு யாழ்.மாநகர சபையுடன் இணைந்து நிரந்தர பஸ் தரிப்பிடத்தை அமைத்துத் தருவதாகக் கூறியுள்ளது.

இதன் காரணமாக தற்போது யாழ்.ஸ்ரான்லி வீதி ஒழுங்கையில் தனியார் ஒருவரின் காணியில் வாடகைப் பணம் கொடுத்து பஸ் தரிப்பிடம் தற்காலிகமாக அமைக்கப்பட்டுள்ளது.

பயணிகள் இளைப் பாறுவதற்கு ஏற்றதாக தகரக் கொட்டகை ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அது தனியார் காணி என்பதால் பஸ் தரிப்பிடத்தை அமைக்க முடியாது.

வெளி மாவட்டங்களுக்கான பஸ் தரிப்பிடத்துக்கான நிரந்தரக் காணியில் பஸ் தரிப்பிடம் அமைக்கப்பட்டவுடன் நிரந்தரமாக வெளிமாவட்டங்களுக்கான பஸ் தரிப்பிடம் யாழ். முனீஸ்வரன்வீதி முற்றவெளிப்பகுதியில் அமையும்-என்றார். (வ-14)

## வடமராட்சி வலய தமிழ்த்தினப் போட்டிகள்

வடமராட்சி,ஏப்.2

வடமராட்சி வலய மட்ட தமிழ்த்தினப் போட்டிகள் எதிர்வரும் 6, 7, 8 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

வலய, கோட்ட மட்டப் போட்டிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து இந்தப் போட்டிகள் இடம்பெறவுள்ளதாக வடமராட்சி வலயக் கல்வித் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ந-8)

# இடுப்பில் சாராயப் போத்தல்; சிகிச்சை பெற வந்தவரிடம்

தென்மராட்சி, ஏப்.2

இருவரின் தாக்குதலுக்கு இலக்கானதாகக் கூறி வைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட நபரின் இடுப்பினுள் மறைத்து வைக்கப்பட்டிருந்த சாராயப் போத்தல் வைத்தியசாலை ஊழியர்களால் மீட்கப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. எழுதுமட்டுவாழ் கிளாலிப் பகுதியில் மதுபோதையில் காணப்பட்ட இருவரால் தாக்கப்பட்டதாகக் கூறி 37 வயது குடும்பஸ்தரை வைத்தியசாலைக்கு அழைத்து வந்தனர்.

முகம் மற்றும் கால் பகுதியில் காயமடைந்த இவருக்கு சிகிச்சையளித்தபோது இடுப்பில் மறைத்து வைக்கப்பட்டிருந்த சாராயப்போத்தல் தவறிக் கீழே வீழ்ந்தது.

அதனை மீட்ட வைத்தியசாலை ஊழியர்கள் அதனை அழைத்து வந்தவர்களிடம் கையளித்தனர். தாக்குதலுக்கு இலக்கான அவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-9)

# புகையிலை அறுவடை தீவகத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப். 2

தீவுப் பகுதியில் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்டுள்ள புகையிலைச் செய்கையின் அறுவடை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

வேலணை, நாரந்தனை, புளியங்கூடல் போன்ற பகுதிகளில் அதிகமான விவசாயிகள் இந்த புகையிலைச் செய்கையை மேற்கொண்டிருந்தனர்.

புகையிலைச் செய்கையில் ஈடுபட்ட விவசாயிகள் தற்போது அறுவடையை ஆரம்பித்துள்ளனர்.

சில இடங்களில் மழையின் தாக்கத்தால் புகையிலையில் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன.

அனேகமான புகையிலைக் கன்றுகள் கடும் மழையின் தாக்கத்தால் வெண்ணிற புள்ளி நோயின் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளன. (ந-17)

# ஒன்றரை கோடி ரூபா மோசடி;

## யாழ்., ஹற்றன் வாசிகள் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஏப்.2

கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறி ஒன்றரைக்கோடி ரூபா பணத்தைப் பெற்று மோசடி செய்த பின்னர் ஹற்றனில் மறைந்திருந்த பிரதான சந்தேக நபர் உட்பட இரண்டு பேர் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற விசேட குற்றத்தடுப்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 7 பேரிடம் இருந்தே ஒன்றரைக்கோடி ரூபா பணம் பெறப்பட்டு மோசடி செய்யப்பட்டுள்ளது என்று விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வருடம் வரை ஒவ்வொருவராக 7 பேரிடமிருந்தும் இந்தத் தொகைப் பணத்தை இந்தச் சந்தேக நபர்கள் பெற்றுள்ளனர். சில மாதங்களில் கனடாவுக்கு அனுப்புவதற்கான சகல பணிகளும் நிறைவடைந்துவிடும். அதன்பின்னர் கனடாவுக்கு உங்களை அனுப்பி வைப்போம் என்றும் பணத்தைச் செலுத்தியவர்களிடம் அவர்கள் கூறியுள்ளனர். ஆனால் கடந்த ஜனவரியில் இருந்து குறித்த நபர்களுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது. மேற்கொண்டு எந்தப் பதிலும் அவர்களிடம் இருந்து கிடைக்காத நிலையில் அது தொடர்பில் 7 பேரும் பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தனர்.

சந்தேக நபர்களாக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரும் ஹற்றனைச் சேர்ந்த ஒருவரும் குறிப்பிடப்பட்டிருந்தனர். இது தொடர்பில் பொலிஸார் விசாரணை மேற்கொண்டிருந்த நிலையில் இரண்டுபேரும் ஹற்றனில் தலைமறைவாகி உள்ளதாக கிடைத்த தகவலை அடுத்து, யாழ்ப்பாணத்தில் இருந்து அங்கு சென்ற பொலிஸார் இருவரையும் கைது செய்தனர். யாழ். நீதிமன்ற உத்தரவுக்கமைய இருவரும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். (த-4)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஏப்.2

வேலணை மண்கும்பான் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை புதுவருட தினத்தன்று முற்பகல் 11 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும். (ந-7)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஏப்.2

நெடுந்தீவு மேற்கு நெழுவினி சித்தி விநாயகர் கோயில் வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 5 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்குக் கொடியேற்றத்தடன் ஆரம்பமாகி புதுவருடத்தினமாகிய 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை பத்துத்தினங்கள் நடைபெறும்.

14ஆம் திகதி புதுவருடத்தினத்தன்று முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் அன்றையதினம் பி.ப.4 மணிக்கு தீர்த்த உற்சவமும் இடம்பெறும். மறுநாள் திங்கட்கிழமை பூங்காவனத்திருவிழா நடைபெறும். (ந-7)

## தென்மராட்சி வலய பாடசாலைகளுக்கான மெய்வன்மைப் போட்டி

தென்மராட்சி, ஏப்.2

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கான வலய நிலை மெய்வன்மைப் போட்டிகள் நாளை மறுதினம் வியாழக்கிழமை பி.ப. 2 மணிக்கு மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக வட மாகாண கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசாவும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் ரி.ஈஸ்வரராஜ் ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர் பீ.முத்துலிங்கம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்க தொழிலதிபர் ஈ.எஸ்.பி.நாகரத்தினமும் கலந்துகொள்வர். (வ-9)




தனித் தமிழீழம் கோரி நடிகர் சூர்யா, கார்த்தி ரசிகர்கள் நேற்று முன்தினம் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டனர்.

## எழுத்தாக்கப் போட்டி

தென்மராட்சி,ஏப். 2

வடக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மாகாண நிலை தமிழ்த் தினப் போட்டியின் எழுத்தாக்கப் போட்டிகள் எதிர்வரும் 5 ஆம் திகதி காலை 8 மணி தொடக்கம் யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் நடைபெறும். வலய மட்டப் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்கள் மாகாண மட்டப் போட்டிகளில் கலந்து கொள்ளவுள்ளனர்.

போட்டி இல.01 தொடக்கம் இல.16 வரையான எழுத்தாக்கப் பேர்ட்டிகளான ஆக்கம், கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல், தமிழியற் கட்டுரை வரைதல், இலக்கணம், திறனாய்வு, குறு நாடக ஆக்கம், கவிதை ஆக்கம், சிறுகதை ஆக்கம், வாசிப்பு ஆகியவற்றில் முதலிடம் பெற்றவர்கள் மாகாண நிலைப் போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## தமிழக மீனவர்கள் தொடர்பில் மத்திய அரசு அசமந்த நிலை

### சாடுகிறார் கருணாநிதி



சென்னை, ஏப்.2

தமிழக மீனவர்கள் தொடர்பில் இந்திய மத்திய அரசு பாரபட்சமாகச் செயற்படுவதாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தமது கட்சி உறுப்பினர்களுக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

இலங்கைத் தமிழர் விடயத்தில் இந்திய மத்திய அரசு அசமந்தமான நிலையில் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் இரண்டு கேரள மீனவர்களை சுட்டுக் கொன்ற வழக்குத் தொடர்பில் இரண்டு இத்தாலியின் கடற்படை வீரர்கள் தொடர்பில் இந்தியா கடுமையான நடவடிக்கை எடுத்திருந்தது.

எனினும் இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படும் சந்தர்ப்பங்கள் குறித்து ஏன் இந்தியா மௌனமாக இருக்கிறது- என்றுள்ளது. (வ)

## மாகாண மட்ட நூல் தெரிவுக்கு விண்ணப்பிக்கலாம்

தென்மராட்சி,ஏப். 2

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் மாகாண மட்டத்தில் சிறந்த நூல்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கடந்த வருடம் (2012) வெளியிடப்பட்ட நூல்கள் போட்டியில் தெரிவு செய்யப்படவுள்ளதால் நூல்களை வெளியிட்டோர் அந்தந்தப் பிரதேச செயலக கலாசாரப் பிரிவுகளில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் நூலின் நான்கு பிரதிகளையும் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் தாம் வெளியிட்ட புத்தகங்களின் நான்கு பிரதிகளுடன் வருகை தருமாறு பிரதேசசெயலகத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## நாளை கல்லூரிகள் திறப்பு தமிழக அரசு அறிவிப்பு

கல்லூரிகளை மூடும் தமிழக அரசின் அறிவிப்பால் விடுதிகளில் இருந்து மாணவ–மாணவிகள் வெளியேற்றப்பட்டனர். எனினும் மாணவர்களின் போராட்டம் தொடர்ந்து கொண்டு தான் இருந்தது.

சென்னை, ஏப்.2

இலங்கைக்கு எதிரான மாணவர்களின் போராட்டம் சற்று ஓய்ந்த நிலையில் ஏப்ரல் 3 ஆம் திகதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் திறக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

இலங்கைக்கு எதிரான அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டும், இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும், தனித் தமிழீழம் அமைய பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைளை வலியுறுத்தி சென்னை லொயோலா கல்லூரி மாணவர்கள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

அதையடுத்து, தமிழகம் முழுவதும் மாணவர்களின் போராட்டம் வெடித்தது. அதைத்தொடர்ந்து அனைத்து அரச கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் கால வரையின்றி மூடப்பட்டன. தமிழக அரசின் இந்த அதிரடி அறிவிப்பால் விடுதிகளில் இருந்து மாணவ- மாணவிகள் வெளியேற்றப்பட்டனர். எனினும் மாணவர்களின் போராட்டம் தொடர்ந்து கொண்டு தான் இருந்தது.

தற்போது மாணவர்களின் போராட்டம் சற்று ஓய்ந்திருக்கிறது. இந்த நிலையில் நாளை அரச கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பொறியியல் கல்லூரிகள் திறக்கப்படும் என்று தமிழக அரசு நேற்று அறிவித்துள்ளது. (வ)

## தென்மராட்சி பிரதேச மகளிர் தின விழா இன்று

தென்மராட்சி,ஏப். 2

தென்மராட்சி பிரதேச செயலக மகளிர் தின விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

பிரதேச செயலக சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகாரப் பிரிவும், கெயர் நிறுவனமும் இணைந்து விழாவை நடத்தவுள்ளன.

பிரதேச செயலர் திருமதி அ.சாந்தசீலன் தலைமையில் நடைபெறும் விழாவுக்கு முதன்மை விருந்தின ராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினராக கெயர் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் திருமதி ஜோய் றோஸ் நாகேஸ்வரனும், கௌரவ விருந்தினராக மட்டுவில் சந்திரபுரம் அன்னை திரேசா மகளிர் சங்கத்தைச் சேர்ந்த திருமதி சிவனேஸ்வரி இராஜகோபாலும் கலந்துகொள்வர்.

நிகழ்வில் பிரதேச மகளிர் அமைப்புகளின் கலை நிகழ்வுகளும் மகளிர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகள், கவிதை, கட்டுரைப் போட்டிகள் ஆகியவற்றில் வெற்றியீட்டியவர்களுக்கு பரிசில் வழங்கலும் இடம்பெறும். (வ-9)

## தென்மராட்சி ஓய்வூதியர் கொடுப்பனவு ஏப். 5 இல்

தென்மராட்சி,ஏப். 2

தென்மராட்சி பிரதேச ஓய்வூதியர்களுக்கான ஏப்ரல் மாத கொடுப்பனவு எதிர்வரும் 5 ஆம் திகதி வழங்கப்படவுள்ளது. திறைசேரியால் வருட ஆரம்பத்தில் அனுப்பப்பட்ட சுற்றறிக்கைப் பிரகாரம் ஏப்ரல் மாத ஓய்வூதியம் எதிர்வரும் 9 ஆம் திகதி வழங்கப்படுமென குறிப்பிடப்பட்டிருந்தது.

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு ஏப்ரல் மாத ஓய்வூதியத்தை முன்கூட்டி வழங்குவது தொடர்பாக யாழ். அரச அதிபரினால் அனுப்பப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் ஓய்வூதியக் கொடுப்பனவை எதிர்வரும் 5 ஆம் திகதி பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (வ-9)

## ஈழத் தமிழர் சிந்திய ரத்தமும், வேதனைக் குரலும் வீண் போகா

### வைகோ தெரிவிப்பு



இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக அண்ணாநகர் எம்.ஜி.ஆர். பகுதியைச் சேர்ந்த பொது மக்களும் உண்ணாவிரதத்தில் குதித்துள்ளனர். இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ ஆரம்பித்து வைத்தார்.

உண்ணாவிரதப் போராட்டத்தில் இலங்கை அரசைக் கண்டித்தும், மத்திய அரசின் அணுகுமுறையை கண்டித்தும் கோஷங்கள் எழுப்பப்பட்டன. உண்ணாவிரதத்தை ஆரம்பித்து வைத்து வைகோ தெரிவித்ததாவது:-

இலங்கை இராணுவம் நடத்திய இனப் படுகொலை உலகில் எங்குமே நடந்திராத கொடுமை. இந்தக் கொடுமைக்கு பாடம் புகட்ட போர்க் குற்றவாளியான ராஜபக்ஷவை சர்வதேச குற்றவாளி கூண்டில் நிறுத்தி விசாரிக்கப்பட ஒட்டு மொத்த தமிழினமே கிளர்ந்து எழுந்துள்ளது.

எம் சொந்தங்கள், நம் உறவுகள் கண்ணீரும், கம்பலையுமாக கதறுவதைப் பாா்த்து பொதுமக்களே வீதிக்கு வந்து தங்கள் உடலை வருத்தி உண்ணாவிரதம் இருக்கின்றனர்.

இலங்கைத் தமிழர்களுக்கு இந்திய அரசு செய்த துரோகம் மன்னிக்க முடியாதது. தமிழக சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சல்மான்குர்ஷீத் ஏற்க முடியாது என்கிறார். இந்தப் பொது மக்களின் குமுறலும், இலங்கை தமிழர்கள் சிந்திய ரத்தமும், வேதனைக் குரலும் வீண் போகாது.

பொது வாக்கெடுப்புக் கோரி தமிழக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றியதைப் போல் நாடாளுமன்றத்திலும் தீர்மானம் நிறைவேற்றப்படும் நாள் வெகு தூரத்தில் இல்லை-என்றார். (வ)

## உயிர் பிரிந்த என்னுடலுக்கு புலிக்கொடி போர்த்துங்கள்

### சீமானிடம் சொல்லிய மணிவண்ணன்

அவரது இயக்கத்தில் அமைதிப்படை இரண்டாம் பாகம் திரைப்படம் தயாராகவுள்ளது. அதன் இசை வெளியீட்டுவிழா நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்றது.



என்னிடம் எதுவும் இல்லை. உயிர்மட்டும்தான் உள்ளது. அதை எம் அரசியல்வாதிகள் எடுத்தால் எனது உடலுக்குப் புலிக்கொடி போர்த்தி அடக்கம் செய்யுங்கள் என்று தம்பி சீமானுக்கு சொல்லி வைத்திருக்கிறேன். இவ்வாறு இயக்குநரும் நடிகருமான மணிவண்ணன் தெரிவித்தார்.

அவரது இயக்கத்தில் அமைதிப்படை இரண்டாம் பாகம் திரைப்படம் தயாராகவுள்ளது. அதன் இசை வெளியீட்டுவிழா நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

அமைதிப் படை 2ஆம் பாகம் அரசியல் படம் என்று சொல்கிறார்கள். உண்மைதான். எந்த அரசியல் கட்சியையும் தலைவரையும் தனிப்பட்ட முறையில் தாக்காமல், சமகால அரசியலைச் சொல்லும் திரைப்படம் இது. இதில் வரும் வசனங்களும் அப்படித்தான். படத்தைப் பார்த்து விட்டு தமது இயலாமையை வெளிப்படுத்த என் வீட்டு மீது ஒரு கல் விழுந்தாலும், தமிழகத்தில் ஒரு அரசியல்வாதியும் மேடை போட்டுப் பேசமுடியாத நிலை ஏற்படும்-என்றார். (வ)

## வேலையாள்கள் தேவை

சோடா போத்தல்களை வாகனங்களில் ஏற்றி இறக்குவதற்கு வேலை யாள்கள் தேவை

தொடர்பு:
021-2225595, 0772105286

(35570) (10,8,7)



உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு:
advt@uthayan.com
0215671111


# மரண அறிவித்தல்

## சிங்காரம் சுரேந்திரன் (சுரேஸ்)

(பொருளாளர், வாடகைக் கார் சங்கம், யாழ்ப்பாணம்)



கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிங்காரம் சுரேந்திரன்(சுரேஸ்) நேற்றுமுன்தினம் (31.03.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிங்காரம் மற்றும் மேரிகிரேஸ் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குமார் மற்றும் சந்திரா தம்பதியரின் அன்பு மருமகனும், தனபதியின்(பவுன்) அன்புக் கணவரும், விஜயகுமார், டிலேசியன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், விஜயகுமார்(ஜேர்மனி), ஜெயசீலி(பிரான்ஸ்), ஜெயரூபி (லண்டன்), ஜெயராணி(ஜேர்மனி), ஜெயகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும், மேரிபுஸ்பவதி(ஜேர்மனி), ராகுலன், சிவபாலன் (லண் டன்), சாலமோன்(ஜேர்மனி), காலஞ்சென்ற சத்தியலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜேசேவ், காலஞ்சென்ற ஆரோக்கியநாதன் மற்றும் மரியதாஸ், அலோசியஸ் ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (02.04.2013) செவ்வாய்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப.3.00மணியளவில் அடைக்கல அன்னை தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் நல்லடக்கத்துக்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
072 4154261

---

திருமதி

## தையல்நாயகி சண்முகரட்ணம்



மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும், இல. 74, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தையல்நாயகி சண்முகரட்ணம் நேற்று(01.04. 2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராஜா சண்முகரட்ணத்தின் (இளைப்பாறிய ஆசிரியர், றோயல் கல்லூரி) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகசபை- அன்னமுத்து தம்பதியரின் செல்வப் புதல்வியும், பாலசுப்பிரமணியம், சிவசுப்பிரமணியம்(ஆஸ்திரேலியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற காந்தாபத்மநாபன், பிரஸ்தர் மாவைக்கரசன்(இந்தியா) ஆகியோரின் பாசமிகு தாயும், ஜெயகுமாரி(மக்கள் வங்கி,யாழ்.கன்னாதிட்டி ), சாந்தினி(இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியும், நேமிபார்கவன், புருஷோத் சாமகீதன், நசிகேதன் அபர்ணா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(02.04.2013) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக துண்டி இந்துமயானம் கொழும்புத்துறைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

74, குருசோல்ட் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
திருமதி காந்தாபத்மநாபன்
(மருமகள்)

---

## திருமதி மேரி திரேசம்மா அமிர்தநாயகம்

மாதகலைப் பிறப்பிடமாகவும், யாழ் அச்சுகூட வீதி மற்றும் ஈச்சமோட்டை, கடற்கரை வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட மேரி திரேசம்மா அமிர்தநாயகம் கடந்த (31.03.2013) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வநாதன்-ஆசிர்வதம்மா (மாதகல் ஆச்சி) தம்பதியரின் ஆசை மகளும், காலஞ்சென்ற அமிர்தநாயகத்தின் (கட்டடப் பட வரைஞர்) அன்பு மனைவியும், அன்ரன், செல்வநாதன், எட்வேர்ட் செல்வநாதன், ஜோசப் செல்வநாதன் ஆகியோரின் அருமைச் சகோதரியும், திரேசம்மாவின் (ஆசிரியை, உயரப்புலம் ம.வி.-ஆனைக்கோட்டை) அன்பு மைத்துனியும், றொசாலியா, சுபோதினி, செலஸ்ரீன் கிருபைநாயகம், பிரிட்ஜெற் நிரஞ்சனி(ஆசிரியை சென்பீற்றர்ஸ் ஆரம்பப் பாடசாலை), நிமதி திருநாயகம், மிறியா அமிர்தினி ஆகியோரின் அன்புத் தாயும், ஜேசுதாசன், மேரிதிரேசா(சரஸ்) ஆகியோரின் ஆசை மாமியும், டர்மி, லவன்ஜா(லவனி) ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 02, ஈச்சமோட்டை கடற்கரை வீதியில் உள்ள அவரின் இல்லத்திலிருந்து இன்று(02.04.2013) செவ்வாய்க்கிழமை பி.ப.2.30 மணியளவில் எடுத்துச்செல்லப்பட்டு மாதகல் புனித தோமையர் ஆலயத்தில் பி.ப 3.30 மணியளவில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் மாதகல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 02, ஈச்சமோட்டை,
கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
075 2227479

தகவல்:
குடும்பத்தினர்.

---

# மரண அறிவித்தல்



திருமதி

## மனோன்மணி கனகலிங்கம்

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், மருதடி மேற்கு சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி கனகலிங்கம் நேற்று (01.04. 2013) திங்கட்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் கனகலிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா-நல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சுதர்சினி, ஹேமலதா(கொழும்பு தமிழ்ச்சங்கம்), கோபிகா, கிருஷாந்தி ஆகியோரின் பாசமிகு தாயும் ஜெயக்குமாரின்(சாவகச்சேரி பிரதேச சபை), அன்பு மாமியும் யதுராணனின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான தவமணி, மகேஸ்வரன் மற்றும் பரமேஸ்வரன்(கந்தசாமி), குணமணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, சுப்பிரமணியம் மற்றும் காசிப்பிள்ளை, தெய்வானைப்பிள்ளை ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2013) செவ்வாய்க்கிழமை பி.ப.1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

மருதடி மேற்கு,
சாவகச்சேரி.

---

# மரண அறிவித்தல்

## பேதுரு சிமியோன் (சின்னப்பு)



பலாலியைப் பிறப்பிடமாகவும், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பேதுறு சிமியோன் நேற்று (01.04.2013) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பேதுறு - அருணோதயம் தம்பதியரின் புத்திரனும் பிலிப்பு-எலிசபெத் தம்பதியரின் மருமகனும் குணகூந்தம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சவரிமுத்து, மாக்கிறெட் மற்றும் யுவானி, செபஸ்தியாம்பிள்ளை ஆகியோரின் சகோதரனும் கியோமர் மரியதாஸ் (ஓய்வு பெற்ற பாதுகாப்பு உத்தியோகத்தர், யாழ்.பல்கலைக்கழகம்), மாசில் மனோகரி, சாமுவேல் யோண்சன்(எழுதுவினைஞர், யாழ்.பல்கலைக்கழகம்), மரியமனோகரன் (இ.போ.ச-கிளிநொச்சி) ஆகியோரின் அன்புத் தந்தையும் யோசேப் ஞானரத்தினம் (புடவை வியாபாரி, சுன்னாகம்), மேரிகெலன் (ஆசிரியை, யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்), மரியடெய்சி, மரியபவளம் (ஆசிரியை, யா/ஸ்கந்தவரோதய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிறேஜன் (யாழ்.பல்கலைக்கழகம்), திருமதி கலஸ்ரின் பேனாட், திருமதி பசில்டா றெஜினோல்ட், கிறேசியன், அனோச் டிலக்சன், திருமதி பிறிடா பிரபுராஜ்(ஜேர்மனி), திருமதி லெனோஜினி கெமில்ட்டன்(ஜேர்மனி), கிறுசாந், றொசிற்றா, றோஸ் ஜெனற், அரவிந்தன், பேரிகிளாறன்ஸ் றியூபன் ஆகியோரின் அன்புப் பேரனும் அபிக்கேல், ஜோயன்னா ஆகியோரின் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.04.2013) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு புனித அந்தோனியார் ஆலய திருப்பலியின் பின் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள, நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible] வீதி,
(பஸ்நிலைய அருகாமை), சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.

---

# வீட்டுக்கிருத்திய அழைப்பு



அமரர்

## விக்னேஸ்வரன் கம்சா

கடந்த (16.02.2013) சனிக்கிழமை இறைபதமடைந்த விக்னேஸ்வரன் கம்சா அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (02.04.2013) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனைகளிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சங்கத்தானை,
சாவகச்சேரி.

தகவல்
குடும்பத்தினர்.

(35581)(8.16.14)

---

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு
20-04-1941

மறைவு
03-03-2013



## கோவிந்தன் கந்தையா

நீங்கள் எம்மை விட்டு
இறைவனிடம் சென்றீர்கள்
உங்கள் நினைவுகள் என்றும்
எங்களில் அலைபாய்கின்றன.
என்றென்றும் உங்கள் நினைவுகளுடன்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அன்புத்தெய்வத்தின் மரணச்சடங்கில் பங்கு கொண்டவர்களுக்கும், தங்கள் அனுதாபங்களை பகிர்ந்து கொண்டவர்களுக்கும், உதவிகள் புரிந்த அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

(35573)(6.16.6)

தகவல்
குடும்பத்தினர்.

---

# மரண அறிவித்தல்கள்

## நடராசா தயாபரன்(கிருபா)



காரைநகர் பொன்னம்பலம் வீதியைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா தயாபரன் (கிருபா) கடந்த சனிக்கிழமை (30.03.2013) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா மற்றும் ருக்குமணிதேவி தம்பதியரின் அன்புப்புதல்வனும் ரஜனியின் அன்புக்கணவரும் கயானன், நவீன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கிரிசா, காந்தன், பிரியா, நளினி ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற சீனிராசா மற்றும் புவனேஸ்வரி, தம்பதியரின் அன்பு மருமகனும் விசஜலக்சுமி, பானுமதி, சறோஜா, சிவச்செல்வி, திருக்குமரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

Viernheimer, str.64,
69469 weinheim, Germany.
பொன்னம்பலம் வீதி, காரைநகர்.

தகவல்:
குடும்பத்தினர்

---

## சிவரூபன் சுதர்சினி



வேலணை வடக்கு, 5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாக வும் கொண்ட சிவரூபன் சுதர்சினி (31.03. 2013) ஞாயிற்றுக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் சிவரூபனின் அன்பு மனைவியும், தரன்யா, தனுசியன், தட்சயன் ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ் சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் கிருஸ்ணாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ் சென்ற மகாதேவன் மற்றும் ராசமலர் தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அமரசீலன் மற்றும் பத்மசீலன், சுபாசினி, காலஞ்சென்ற தயாளசீலன் மற்றும் சற்குணசீலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ் சென்ற சிவகுமார் மற்றும் சுகிர்தன், சுமன், தீபா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2013) செவ்வாய்க் கிழமை மு.ப. 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

இலந்தைவனம் பிள்ளையார்
கோயில் அருகில்,
5ஆம் வட்டாரம்,
வேலணை வடக்கு.

(35571)(10.6.7)

தகவல்:
குடும்பத்தினர்.

## ஒஸ்ஏசியன் வெற்றிக் கிண்ண ஐந்துபேர் உதைபந்து

# மானிப்பாய் இந்து தேசியச் சம்பியன்

வலி. வடக்கு, ஏப். 02

அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான ஐந்துபேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி சம்பியனாகி சாதனை படைத்துள்ளது.

கொழும்பு தலவாக்கொல ஒஸ்ஏசியன் விளையாட்டுக் கழகம் நடத்திய ஒஸ்ஏசியன் வெற்றிக் கிண்ணத்துக்கான இறுதிப் போட்டி கொழும்பில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரியும், கொழும்பு வெஸ்லிக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகியதும் மைதானத்தைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இரு அணிகளும் கடுமையாகப் போராடின. ஆயினும் இந்தப் போராட்டத்தில் முன்னிலை பெற்ற மானிப்பாய் இந்துக் கல்லூரி முதல் பாதி ஆட்டத்தில் இரு கோல்களை அடித்தது. 2:0 என்ற ரீதியில் அந்த அணி ஆதிக்கம் செலுத்திய நிலையில் முதல் பாதி ஆட்டம் முடிவடைந்தது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் புதிய உத்வேகத்துடன் களமிறங்கின.

முதல் பாதியில் வாங்கிய அடிக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இரண்டாம் பாதி ஆட்டத்தில் வெஸ்லிக் கல்லூரி ஒரு கோலைப் பெற, ரசிகர்கள் பக்கம் ஆரவார ஒலி கிளம்பியது. இதனால் அந்த அணி வீரர்கள் முன்னரைக் காட்டிலும் தமது ஆட்டத்தை வேகப்படுத்தினர்.

எனினும் களநிலைமையை மிகச்சரியாக எடைபோட்டுக்கொண்ட மானிப்பாய் இந்துக் கல்லூரி வீரர்கள் தமது ஆட்ட வியூகத்தைச் சடுதியாக மாற்றினர். முன்னேறித் தாக்கும் முயற்சிகளை விடுத்து எதிரணியின் கோல் பெறும் முயற்சிகளைத் தடுத்தாடும் தற்காப்பு ஆட்டத்தைக் கைக்கொண்டது. இதனால் மேலதிக கோல்களை அடிக்க வெஸ்லிக் கல்லூரி எடுத்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. எனவே ஆட்டநேர நிறைவில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 2:1 என்ற கோல் கணக்கில் வெஸ்லி கல்லூரியை வீழ்த்தி தலவாக்கொல ஒஸ்ஏசியன் விளையாட்டுக் கழக வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது. ஆட்டநாயகனாக மானிப்பாய் இந்து அணியின் கோல் காப்பாளர் செந்தூரன் தெரிவானார். (ங-86-422)

> முதல் பாதியில் வாங்கிய அடிக்குப் பதிலடி கொடுக்கும் வகையில் இரண்டாம் பாதி ஆட்டத்தில் வெஸ்லிக் கல்லூரி ஒரு கோலைப் பெற, ர்சிகர்கள் பக்கம் ஆரவார ஒலி கிளம்பியது. இதனால் அந்த அணி வீரர்கள் முன்னரைக் காட்டிலும் தமது ஆட்டத்தை வேகப்படுத்தினர்.

## இன்றைய ஆட்டங்கள்



பருத்தித்துறை உதைபந்தாட்டலீக்கன் அனுசரணையுடன் நக்கிரன் விளையாட்டுக்கழகம் நடத்தும் 7பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**பி.ப. 3.30 மணி**

சென்.பீற்றர்ஸ் வி.க். எதிர் கலட்டி 'பி' அணி.

**பி.ப. 4.30 மணி**

இமையாணன் மத்தி 'பி' அணி எதிர் நெடியகாடு 'ஏ' அணி.

★ ★ ★

தெல்லிப்பழை நாமகள் சனசமூக நிலையம் விளையாட்டுக்கழகத்தின், 50ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை மின்னொளியில் இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரங்கள் வருமாறு:-

**இரவு 7மணி**

மருதனார்மடம் ஜிஸ்ரார் 'ஏ' அணி எதிர் தெல்லிப்பழை யுத்யூனியன் அணி.

**இரவு 8.30 மணி**

தொட்டிலடி ஞானவைரவர் 'பி' அணி எதிர் மருதனார்மடம் ஜீஸ்ரார் 'பி' அணி.

(ங-23-13-288)

## கொழும்பு மருத்துவர் அணியை மண்டியிட வைத்தது ஜொனியன்ஸ்

ஜனசக்தி காப்புறுதி நிறுவனத்தின் எற்பாட்டில் கொழும்பு மருத்துவர்கள் கிரிக்கெட் அணிக்கும், ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையிலான நட்புரீதியிலான கிரிக்கெட் ஆட்டத்தில் ஜொனியன்ஸ் அணி 15 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

யாழ்.மத்தியகல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிறுக்கிழமை நடைபெற்ற இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஜொனியன்ஸ் விளையாட்டுக்கழக அணி 22.2 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளை இழந்து 206 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அகிலன் 44 ஓட்டங்களையும், சஞ்ஜீவ் 24 ஓட்டங்களையும், காண்டீபன் 53 ஓட்டங்களையும், டக்சன் 26 ஓட்டங்களையும் தமது அணிசார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் கொழும்பு மருத்துவர்கள் அணி சார்பில் இசுறு 3 இலக்குகளையும் சுமிக்க, சிறீதரன், கௌரிபாகன் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.

207 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொழும்பு மருத்துவர்கள் அணி 30 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 191 ஓட்டங்களையே பெற முடிந்தது. இதனால் ஜொனியன்ஸ் அணி 15 ஓட்ட வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

கொழும்பு மருத்துவர்கள் அணி சார்பில் சிறிதரன் ஆட்டம் இழக்காமல் 60 ஓட்டங்களையும், கௌரிபாகன் 37 ஓட்டங்களையும், சுபுன் 29 ஓட்டங்களையும், மனத்துங்க 23 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் ஜொனியன்ஸ் அணி சார்பில் அகிலன் 2 இலக்குகளையும், சண்சேயன் 3 இலக்குகளையும், லவேந்திரா, டக்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு இலக் கினையும் வீழ்த்தினர். (ங-23)




## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

**கதிரவேற்பிள்ளை தர்மலிங்கம்**

(கட்டி அத்தான்)

எமது குடும்பத் தலைவரின் ஓராண்டு நினைவுப் பிரார்த்தனை இன்று (02.04.2013) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்விலும், தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

பெரியதம்பிரான் கோயிலடி,
பொலிகண்டி மேற்கு, வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்



*மயில்வாகனம் செந்தில்நாதன்*

*(ஒய்வுபெற்ற கிளை முகாமையாளர் சுன்னாகம் ப.நோ.கூ சங்கம்)*

சுன்னாகம் தெற்கு பெரிய மதவடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் செந்தில்நாதன் நேற்று (01.04.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கோப்பாயைச் சேர்ந்த இராமலிங்கம் -சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும், வேதநாயகியின் அன்புக் கணவரும், தமிழ்செல்வி (அபிவிருத்தி உத்தியோகத்தர், முகாமைத்துவ பயிற்சி நிறுவனம், வடமாகாணம்) சதீஸ்கண்ணன் (அமெரிக்கா), சுதாயினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், தனேசன் (ஆசிரியர்), ரூபச்சந்திரன் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவவர்களான கனகசுந்தரம், சண்முகராசா, சிவபாக்கியம் மற்றும் சந்திரசிங்கம், புஸ்பதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சாரூஸ், ரிசானா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2013) செவ்வாய்க்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.

பெரியமதவடி, சுன்னாகம்
தெற்கு, சுன்னாகம். (35582)

## கண்ணீர் காணிக்கை



எமது சக உத்தியோகத்தர் க.கோபிகாவின் அன்புத்தாயாரன திருமதி.கனகலிங்கம் **மனோன்மணி** அவர்களின் பிரிவால் துயரடைந்துள்ள குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளரும் சக உத்தியோகத்தர்களும்.

## வீடு வாடகைக்கு

இல-76, சம்பியன் லேன், கொக்குவிலில் 3 அறைகள் கொண்ட சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு- 0776156036, 0724914541

## துயர் பகிர்கின்றோம்

**சிவப்பிரகாசம் பிரியதர்ஷன்**




மாயமாய் போனதடா உந்தன் மரணம்!
ஆயிரம் கனவுகளுடன் சிறகடித்துப் பறந்தவனே
ஆண்டவன் மடியில் நீள் துயில் கொண்டவனே
ஆற முடியவில்லை உந்தன் பிரிவுத்துயர்
கனவுகள் கனிந்து வரும் காலம்
காலன் உன்னைக் கவர்ந்தது ஏனோ?
உலகை விட்டு நீ காற்றாய் மறைந்தாய்
உதிரமாக எம் விழிகளில் நீர் வரச் செய்தாய்
விதியா? சதியா? ஈரவிழிகள் காயவில்லை
தர்ஷா விரைந்து நீ சென்றதனால்?

அன்னாரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஜனசக்தி இன்சூரன்ஸ் பி.எல்.சி.
யாழ். பிராந்தியம்

(35539) (6.7.11)

# களம் திரும்புகிறார் கௌதம் கம்பீர்



மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டிருந்த கௌதம் கம்பீர் தற்போது பயிற்சிகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளார்.

இந்திய அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரரான கவுதம் கம்பீர் மஞ்சள் காமாலை நோயால் பாதிக்கப்பட்டிருந்தார். அதனால் ஆஸ்திரேலியாவுக்கு எதிரான கடைசி டெஸ்ட் அணியில் அவர் விளையாடவில்லை.

இந்தநிலையில் தற்போது பயிற்சிகளில் ஈடுபடத் தொடங்கியுள்ளார் கம்பீர். அதனால் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியின் அணித்தலைவரான அவர் ஐ.பி.எல். தொடரின் தொடக்க ஆட்டத்தில் விளையாடக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐ.பி.எல். தொடரின் தொடக்க ஆட்டத்தில் நடப்பு சம்பியனான கொல்கத்தா அணி, டெல்லியை எதிர்கொள் கிறது. (ற)

# மேலதிக சுமை வேண்டாம்

புனே வாரியஸ் அணிக்கு யுவராஜை தலைவராக நியமித்து அவருக்கு மேலதிக சுமையைக் கொடுக்க விரும்பவில்லை என்று தெரிவித்துள்ளார் அந்த அணியின் பயிற்றுவிப்பாளர் ஆலன் டொனால்ட்.

புனே வாரியஸ் அணித் தலைவரான கிளார்க் காயம் காரணமாக போட்டிகளில் இருந்து விலகியுள்ளார். அதையடுத்து அந்த அணியின் தலைவராக யுவராஜ் நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அணித்தலைராக இலங்கையின் மத்தியூஸ் நியமிக்கப்பட்டுள்ளார். இதுகுறித்துக் கருத்து வெளியிட்டபோதே பயிற்சியாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

''கிளார்க் இல்லாது அணிக்குப் பெரும் இழப்பே. யுவராஜ் சிறந்த துடுப்பாட்ட வீரர். அவருக்கு மேலதிக மான அணித் தலைமைப் பொறுப்பைக் கொடுத்து மேலதிக சுமையைக் கொடுக்க விரும்பவில்லை''- என்று தெரிவித்துள்ளார் டொனால்ட்.

(ற)

# 'நடுவில கொஞ்சம் பக்கத்தக் காணோம்'

அண்மையில் மதுபான விடுதியில் வைத்து இனந்தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு நியூஸிலாந்து வீரர் ரைடரின் உடல்நிலை வேகமாக முன்னேறி வருகின்றது.

தாக்குதலால் கோமா நிலைக்குத் தள்ளப்பட்ட ரைடர் தற்போது இயல்பு நிலைக்குத் திரும்பியுள்ளார். எனினும் வைத்தியசாலையில் அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

இந்தநிலையில் தனது தாயார் மற்றும் காதலியை அடையாளம் கண்டு பேசியுள்ளார் ரைடர். அப்போது கடைசியாக விளையாடிய டெஸ்ட் ஆட்டத்தில் தான் ஓட்டம் எதுவும் பெறாமல் ஆட்டமிழந்ததை நினைவுகூர்ந்த ரைடரால் தான் தாக்கப்பட்டதை சம்பவத்தை நினைவுபடுத்த முடியவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. (ற)

# முர்ரே சம்பியன்




அமெரிக்காவில் நடைபெற்றுவரும் 'ஏ.டி.பி. மாஸ் டர்ஸ்' ரென்னிஸ் ஆண்கள் ஒன்றையர் ஆட்டத்தில் முர்ரே சம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

பிரிட்டனின் அன்டி முர்ரேயும் ஸ்பெயினின் டேவிட் பெடரரும் இறுதியாட்டத்தில் மோதிக் கொண்டனர். பரபரப்பாக நடைபெற்ற இறுதியாட்டத்தில் முர்ரே 2:6, 6:4, 7:6 என்ற செற் கணக்கில் வென்று கிண்ணத்தைக் கைப்பற்றி னார்.

முதல் செற்றை 2:6 என்ற கணக்கில் இழந்த முர்ரே இரண்டாவது செற்றை 6:4 என்ற ரீதியில் கைப்பற்றினார்.

அதையடுத்து வெற்றியைத் தீர்மானிக்கும் 3 ஆவது சுற்றில் இருவரும் கடுமையாகப் போராடினார்கள். அதனால் மூன்றாவது செற் டைபிரேக்கர் வரை சென்றது. இறுதியில் முர்ரே 7-6 என்ற செற் கணக்கில் மூன்றாவது சுற்றைக் கைப்பற்றி சம்பியன் கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டார்.

(ற)



'நேட்ரோபிக் ஈஸ்ட்' கூடைப்பந்துத் தொடர் இந்தோனேஷியாவில் நடைபெற்று வருகின்றது. கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற போட்டியில் ஐரிஸ் ஸ்கைலர் டிக்ஸ் அணியும் நேற்ரே டாம் பைற்றர்ஸ் அணியும் மோதிக் கொண்டன. அதில் நேற்ரே டாம் பைற்றர்ஸ் அணி 96:87 என்ற ரீதியில் வெற்றி பெற்றது.

# வெற்றி

சண்டர்லாந்து அணிக் கெதிரான பிறீமியர் லீக் கால்பந்து போட்டியில் மான்செஸ்டர் யுனைடெட் வெற்றி பெற்றது. இங்கிலாந்தில் பிறீமியர் லீக் கால்பந்து தொடர் நடை பெற்று வருகிறது. இதன் லீக் போட்டியில் மான்செஸ்டர் யுனைடெட், சண்டர்லாந்து அணிகள் மோதின.

முடிவில், மான்செஸ்டர் யுனைடெட் அணி 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. பிற போட்டிகளில் மான்செஸ்டர் சிட்டி, நியூ கேசில் யுனைடெட்டை 4-0 என வென்றது.

## மரண அறிவித்தல்

### ஆருரையா நவரட்ணராஜா

(அத்துறு)

( ஓய்வு பெற்ற பணியாளர், மகாஜனக் கல்லூரி)



பன்னாலை மேற்கு, வலுவத்தையைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆருரையா நவரட்ணராஜா (அத்துறு) (ஓய்வு பெற்ற பணியாளர், மகாஜனக் கல்லூரி) நேற்று (01.04.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் ஆருரையா-அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், பொன்னையா-சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், திலகவதியின் அன்புக் கணவரும், கிரிஷாந், பிரசாந் அகியோரின் அன்புத் தந்தையும், சண்முகரத்தினத்தின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியகள் இன்று(02.04.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அளவெட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தகவல்:
குடும்பத்தினர்.

கேணிக்கரை,
அளவெட்டி மத்தி.

## மரண அறிவித்தல்



### ஆரோக்கியநாதர் இம்மனுவேல் இக்னேசியஸ் இரட்ணராஜா

(ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்)

மாதகலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆ.இ.இ.இரட்ணராஜா நேற்று (01.04.2013) திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆரோக்கியநாதர் -மரியநாயகி தம்பதியரின் அருமைப் புத்திரனும், காலஞ்சென்றவர்களான அந்திரேஸ்பிள்ளை (பொன்னுத்துரை) தங்கரட்ணம் தம்பதியரின் பாசமிகு மருமகனும், Dr.ஆரோக்கியநாதர் (லண்டன்), நவரட்ணராஜா (பாஸ்டர்) ஆகியோரின் சகோதரரும், Dr.மனோ (லண்டன்), காலஞ்சென்ற ராஜேஸ் மற்றும் பொன்ரோஸ்மலர் (பெனடிற்றா- ஓய்வு பெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர்) ஆகியோரின் மைத்துணரும், ஜன்ஸ்ரீன் பிரான்சிஸ் திலகராஜ் (திலகன்), துளசி யூக்கரிஸ்ரா, ஜீன்புளோரினா (கஸ்தூரி), காலஞ்சென்ற அந்திரேஸ் மற்றும் ஞானத்திருக்குமார், Dr.மாரியோ மசனேற் தீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருஷா, அருள்தேவன் (பிரபு), நரேஸ்செல்வன் (நறா) ஆகியோரின் பாசமிகு மாமனும், குறிஞ்சிமலர், அறிஞன், இளநிலா, நிர்மலன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பிரதானவீதி, மாதகல்.
T.P-0770692062

தகவல்:
குடும்பத்தினர்.

(35586)

## வீடு வாடகைக்கு

A-9 வீதி, தபாற்கட்டை சந்திக்கு அருகில் 4அறைகள் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்களுக்கு ஏற்றது. வாகனத்தரிப்பிட வசதிகள் உண்டு.

தொடர்பு:-
0777658041, 0778871573

## மணமகள் தேவை

திருகோணமலை இந்து கௌரவ குடும்பம், 27 வயது, ஆயிலிய நட்சத்திரம் 12இல் செவ்வாய் கிரகபாவம் 27 ½, தனியார் நிறுவனத்தில் சிரேஸ்ட அதிகாரியாகப் பணிபுரியும் மணமகனுக்கு உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ மணமகள் தேவை.

தொடர்பு: திருகோணமலை
0771449001, 0770204266

(35572)
(10,6,7)

## வேலணை பல நோக்கு கூட்டுறவுச்சங்கம்
## கூறு விலை கோரல்

எமது சங்கத்துக்கு சொந்தமான பின்வரும் சொத்துக்கள் விற்பனை செய்யப்படவுள்ளன. இவற்றை கொள்வனவு செய்ய விரும்புவோர் அலுவலக நேரத்தில் நேரடியாக பார்வையிட்டு 15.04.2013 இற்கு முன்னராக தங்களது கூறுவிலைகளை கிடைக்கக் கூடியவாறு தனித்தனியே ஒவ்வொரு சொத்துக்களுக்கும் கூறுவிலை குறிப்பிட்டு

தலைவர் வேலணை பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்,
வேலணை

என்னும் முகவரிக்கு கடித உறையின் மேல் மூலையில் கூறுவிலை கோரல் என் தலைப்பிட்டு நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

01. நெற்காணி 10 ஏக்கர் (செய்கைக்கு உகந்தநிலையில் உள்ளது) உறுதி இல 1834/ 07.08.1999 யூனியன் குளம், கோணாவில், அக்கராயன், கிளிநொச்சி
02. 42-1518 லங்கா அசோக்லேடன் லொறி
03. 24-9490 இசுசூ லொறி
04. RA0056 F240 நான்கு சக்கர உழவு இயந்திரம் (பெட்டி இன்றி)
05. 36-0859 நான்கு சக்கர உழவு இயந்திரம் (பெட்டி இன்றி)
06. இரு சில்லு உழவு இயந்திரம் (பெட்டி இன்றி)
07. கொள்கலன் (இரும்பு பவுசர்)
08. இரும்புப் பெட்டகம்
09. முதிரைப் பலகைகள் (01 சதுர அடி)
10. தீராந்திகள் 6 X 2 (அடி)
11. பனைமரங்கள் (முழம்)
12. விறகு (Kg)
13. இரும்பு வகை (Kg)

தலைவர்.
வேலணை பல நோக்கு
கூட்டுறவுச்சங்கம்,
வேலணை.

(சி/5038)

# மக்கள் விரோத நடவடிக்கைகள் ஈ.பி.டி.பிக்கு ஒன்றும் புதிதல்ல

## சரவணபவன் எம்.பி. காட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 02

ஈ.பி.டி.பியினருக்கு வன்முறைகள், மக்கள் விரோத நடவடிக்கைகள் ஒன்றும் புதிதல்ல. தேர்தல் பிரசாரங்களுக்காகச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது கொலை முயற்சித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதையும், கைது செய்யப்பட்ட ஈ.பி.டி.பி உறுப்பினர் வெளிநாட்டுக்குத் தப்பியோடி விட்டதையும் மறக்கவில்லை.

மக்களின் ஜனநாயக வழியிலான போராட்டங்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் மற்றும் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈ.பி.டி.பியினரின் பங்கும்-அரச பாதுகாப்பும் உண்டென்று மக்கள் கருதுவதை தவறென்றும் சொல்லிவிட முடியாது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது கிளிநொச்சியில் அரசியல் பின்னணி கொண்ட காடையர் கூட்டத்தினரால் பொலிஸார் முன்னிலையில் நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான தாக்குதலைக் கண்டிக்கிறேன்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் மெய்ப் பாதுகாவலர்கள் உட்பட அங்கு பதினொரு பொலிஸார் துப்பாக்கிகளுடன் கடமையில் நின்றிருந்தனர். ஓர் ஆகாய வெடி வைத்திருந்தால் கூட காடையர்கள் ஓடியிருப்பார்கள்.

இந்த நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய எமது பாதுகாப்புக்கு யார் பொறுப்பு? மக்களின் பாதுகாப்புக்கு யார் பொறுப்பு? தாக்குதல் தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸாருக்கு முன்கூட்டியே தெரியும். அவர்களின் ஆதரவுடனேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கக் கூடும் என்று திடமாக நம்புகிறோம்.

நாம் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு முறையிட்டதன் பின்னர் பொலிஸ் குழு அனுப்பப்பட்டது. அதன் பின்பே தாக்குதல் நடத்தியவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். தாக்குதல் நடத்தியவர்கள் தொடர்பில் சிலரைப் பொலிஸாரிடம் பிடித்துக் கொடுத்தோம். இருப்பினும் அவர்கள் உடனடியாகவே விடுவிக்கப்பட்டனர். பொலிஸ் ஊடகப் பேச்சாளர் புத்திக சிறிவர்த்தன, மேற்படி தாக்குதல் சம்பவம் தொடர்பில் யாரும் கைது செய்யப்படவில்லை எனத் தெரிவித்திருந்தார்.

நாம் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தவர்களையே விடுவித்துவிட்டு, இன்னும் எவரும் கைது செய்யப்படவில்லை என்று கூறினால் அதன் அர்த்தம் என்ன?

பொலிஸ் ஊடகப் பேச்சாளரின் கருத்துக்கள் உரிய முறையில் விசாரணை நடத்தப்பட மாட்டாது என்பதையும் குற்றவாளிகள் கைது செய்யப்படமாட்டார்கள் என்பதையும் கடமையைச் செய்யத் தவறிய பொலிஸார் மீது நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாதென்பதையும் இவை தெளிவாகவே உணர்த்துகின்றன.

பொலிஸாரால் ஒரு முழுமையான விசாரணையை எந்தவொரு அரசியல் தலையீட்டுக்கும் அடி பணிந்து போகாமல் நடத்தும்படி சவால் விடுக்கிறோம்.

எம்மால் பிடிக்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டவர்களில் ஒருவர்; தான் ஈ.பி.டி.பி. ஆதரவாளர் எனவும், இங்கு வன்னி மக்களுக்கு எதிராக ஒரு கூட்டம் நடப்பதாகவும் அதற்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யவே தான் அழைத்துவரப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

இதிலிருந்து இந்த வன்முறையை ஏற்பாடு செய்தவர்கள் யார் என்பதையும் தங்கள் ஆதரவாளர்களையேயே பொய் சொல்லி ஏமாற்றி எப்படிக் காடைத்தனத்தில் இறக்குகிறார்கள் என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்-என்றார். (த-5)

# மரண அறிவித்தல்

## திருமதி சௌந்தரநாயகி கிருஷ்ணப்பிள்ளை

(ஸ்ரீமுருகன் கிறைண்டிங் மில், கிளிநொச்சி)



புங்குடுதீவு 7ஆம் வட்டாரம், மடத்துவெளியைப் பிறப்பிடமாகவும், வட்டக்கச்சி, கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணப்பிள்ளை சௌந்தரநாயகி 30-03-2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சொக்கலிங்கம் (இளைப்பாறிய அதிபர் -புங்குடுதீவு கமலாம்பிகை வி.)- நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பெரியதம்பி -தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற பெரியதம்பி கிருஷ்ணப்பிள்ளையின் அன்பு மனைவியும், சௌந்தர்ராஜன் (நீல்வாணி என்டர் பிறைஸ் சுவிஸ்), சசிமாலா (சுவிஸ்), பிரபாகரன் (சுவிஸ்), சிறீகரன் (சுவிஸ்), உதயராணி (நீலவாணி சில்க் ஹவுஸ்-சுவிஸ்), விஜயகரன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயும், காலஞ்சென்ற சிவபாதசுந்தரம் மற்றும் சிவகாமசுந்தரி, சாரதாஅம்பாள், சிவகுருநாதன், சாவித்திரிதேவி, சிவானந்தவள்ளி, சகுந்தலாதேவி (பிரான்ஸ்), சதாசிவன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், தில்லைச்சொரூபி, விக்கினேஸ்வரன், ரேவதி, சுபா, ராசன் (அம்பாள்), அனோஜா அகியோரின் பாசமிகு மாமியும், கமலேஸ்வரி, அருளம்பலம் (அம்பலவாணர்), நெல்லைநாதன் (கனடா), அன்னபூரணம் (பிரான்ஸ்), நடராசா, உலகேஸ்வரி, இராஜேந்திரம், பத்மநாதன், காலஞ்சென்ற சிவராசலிங்கம் மற்றும் மகாலெட்சுமி, விக்கினேஸ்வரலிங்கம், தவராஜா, கனகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும், கீர்த்தனா, அனிதா, அகர்ஷன், ஜனனி, ஆரபி, மிருசா, பிரணவி, கஸ்தூரி, கார்த்திகன், கீர்த்திகன், கிஸ்ணவி, கார்மிதன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இல. 391, ஆறுமுகம் வீதி, வட்டக்கச்சி இல்லத்தில் வைக்கப்பட்டுள்ளது. அவரின் இறுதிக்கிரியைகள் 02.04.2013 செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: பிள்ளைகள்

T.P-0243248517, 0779455448 (c/8039)

# புத்தாண்டுக்குப் பின்னர் பஸ் கட்டணமும் உயரும்

புதுவருடக் கொண்டாட்டத்தின் பின்னர் பஸ் கட்டணங்களை உடனடியாக அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது- என்று தனியார் போக்குவரத்து அமைச்சு நேற்று திங்கட்கிழமை தெரிவித்தது.

இதன் பிரகாரம் தனியார் மற்றும் இலங்கைப் போக்குவரத்துச் சபை என்பவற்றுக்குச் சொந்தமான பஸ்களின் கட்டணங்கள் யாவும் ஏப்ரல் 15ஆம் திகதிக்கு பின்னர் 7 சதவீதத்தினால் அதிகரிக்கும் வாய்ப்பு உண்டு என்று தனியார் போக்குவரத்து அமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்தார். எனினும் ஆகக் குறைந்த கட்டணமாக ஒன்பது ரூபா தொடர்ந்து இருக்கும். எவ்வாறாயினும் போக்குவரத்து அமைச்சர் பஸ் கட்டண அதிகரிப்புக்கான திகதியை இன்னும் அங்கீகரிக்கவில்லை என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

ரயில் கட்டண அதிகரிப்பைத் தொடர்ந்து பஸ் கட்டணங்களும் உயர்வடைவதற்கான அறிவிப்பு வெளிவந்துள்ளதால் மக்கள் பெரும் அதிர்ச்சிக்கு ஆளாகியுள்ளனர். ஏற்கனவே இலங்கை மக்களின் வாழ்க்கைச் செலவினமும், அத்தியாவசியப் பொருள்களின் விலைகளும் சடுதியாக அதிகரித்துக் கொண்டு செல்லும் நிலையில் பஸ் கட்டண உயர்வு மேலும் நெருக்கடியை அதிகரிக்கும் என்பதே மக்களின் கருத்தாக இருக்கிறது. இதேவேளை, ரயில் கட்டண உயர்வு, பஸ் கட்டண உயர்வு என்பவற்றுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கியுள்ளன. நாட்டைச் சுடுகாடாக்கவே அரசு பொருள்களின் விலைகளை கண்மூடித்தனமாக அதிகரித்து வருவதாக அவை குற்றஞ்சாட்டியுள்ளன. (ங-சி)


ABI BABY MART IN BABY CARE CENTER



உங்கள் மழலைகளைப் பராமரிப்பதற்கு நவீன முறையில் ஆரம்பமாகியுள்ளது. தற்போது விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. குறிப்பிட்ட அளவு விண்ணப்பங்களே ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விவரங்களுக்கு (c/8031)

Director, ABI BABY MART 267, Broun Road, Jaffna. (கலட்டிச் சந்திக்கு அருகில்).

தகவல் தொழினுட்பமாணி பட்டக்கற்கை
BIT கொழும்புப் பல்கலைக்கழகம் BIT
Semester 2, 4, & 6 ஆரம்பம்
Saturday 06.04.2013 Seme 2 = 7 - 9 am
Seme 4 = 9 - 11.30 am Seme 6 = 2 - 4 pm
11 வருடங்களாக BIT கற்கையில்....
Mr. R.Kumaran - B.Sc. Call : 0776577359
74, சபாபதி வீதி, யாழ்ப்பாணம்-இராமநாதன் வீதியிலிருந்து 150 m

கார் விற்பனைக்கு
13-LANCER கார் விற்பனைக்கு உண்டு. 2ஸ்ரீ Minor
T.P- 0775346278

புதிய பிரிவு ஆரம்பம்
- Certificate in Multimedia
- Certificate in Web Designing
- Certificate in Java Programming
- Certificate in C Language
- Certificate in Eng. Drawing & AutoCAD
- Diploma in Computerized Accounting

ஆரம்பம்: 06.04.2013
காலை 10.00 மணி
மேலதிக விபரங்களுக்கு : 021 4 922 741
INSTITUTE OF INFORMATICS STUDIES
100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831

தற்போது யாழ் நகரில்... edexcel WOLVERHAMPTON
சவால்களை வெல்லும் சர்வதேச கல்வித் தகைமைகள்
BTEC HND in Computing & Systems Development
- நவீன மற்றும் எதிர்கால தொழில் சந்தை வாய்ப்பை கருத்திற் கொண்டு உருவான பாடநெறிக் கட்டமைப்பு
- சுயமாகவும் சர்வதேச ரீதியிலும் தொழில் வாய்ப்புகளை உறுதிப்படுத்தும்
- நவீன கனணி ஆய்வுகூட வசதி
- Colomboலிருந்து வருகை தரும் முழு நேர விரிவுரையாளர்கள்



www.bcas.lk ISO 9001:2008 CERTIFIED 14 Years of Trust & Excellence in Higher Education
16, Point Pedro Road, Jaffna. 021 221 9910 / 077 710 2131
BCAS CAMPUS BRITISH COLLEGE OF APPLIED STUDIES
Building Careers - Transforming Lives
Macro Ads
Colombo | Kandy | Batticaloa | Kurunegala | Jaffna | Qatar

தரம் 4,5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தயாராகும் மாணவர்களுக்கு வெளிவந்துள்ளது
1. அடிப்படைத் தமிழ்வழிகாட்டி (தமிழ் மொழி அறிவை விருத்தி செய்து. பரீட்சையில் முழுப்புள்ளிகளையும் இலகுவாக பெற்றுக்கொள்ள வழிகாட்டும் நூல்)
2. கட்டுரைச் சங்கமம்
3. வெற்றிக்கு வழிகாட்டி தரம் 5 மாதிரி வினாத்தாள்
4. வெற்றிக்கு வழிகாட்டி தரம் 4 மாதிரி வினாத்தாள்
ஆக்கம் : M.சுகந்தன் B.A (காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி)
வெளியீடு : யுனிலங்காஸ் 077 6258778 , 011 4014438
நாடெங்கிலும் எல்லா புத்தகசாலையிலும் கிடைக்கும்

அரியாலை நகரில்
SofTTech COMPUTER EDUCATION
Microsoft Office, Desktop publishing
Dip in Office Automation
Dip in Graphics Designing
Dip in Graphics and Animation
Dip in Computer Programming
Kids Courses மற்றும் கணிணிபயிற்சிநெறிகள் அனைத்தையும் 75% கட்டணக்கழிவுடன் மிகக்குறைந்த கட்டணத்தில் கற்றுக்கொள்ளலாம்.
தொகுதி/தனிப்பட்ட வகுப்புகள் 05/04/2013 வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகின்றன.
சிங்கள,ஆங்கில வகுப்புகளும் ஆரம்பமாகின்றன. Sinhala,English (Spoken)
அனுமதிகள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.
மேலதிக விபரங்களுக்கு:
306, Kandy Road, Pungankulam Junction, Ariyalai,jaffna.
T.P: 021-221-1220, 0779122997


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.04.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.